சக்தி மலர்கள்

1. இனி நாம் செய்ய வேண்டுவது யாது?
   ரா. விசுவநாதன் மொழிபெயர்ப்பு விலை அணா 12
2. உலகம் சுற்றும் தமிழன்
   ஏ. கே. செட்டியார் எழுதியது விலை அணா 12
3. நிர்மலகுமாரி
   காழி. சிவ. கண்ணுசாமி எழுதியது விலை அணா 12
4. அசலா [க்ருஹதாஹ்]
   ஆர். ஷண்முகசுந்தரம் மொழிபெயர்ப்பு விலை ரூ. 1½
5. சிறை அனுபவங்கள்
   கி. சடகோபன் எழுதியது விலை அணா 12
6. கூண்டுக் கிளி
   தி. ஜ. ர. மொழிபெயர்ப்பு விலை ரூ. 1
7. அமெரிக்கா
   ஏ. கே. செட்டியார் எழுதியது விலை ரூ. 1
8. டால்ஸ்டாய் சிறு கதைகள் (1-ம் பாகம்)
   [லியோ டால்ஸ்டாய்] விலை ரூ. 1
9. டால்ஸ்டாய் சிறு கதைகள் (2-ம் பாகம்)
   மொழிபெயர்ப்பாளர்கள் :
   கு. ப. ராஜகோபாலன், ரா. விசுவநாதன் விலை ரூ. 1
10. டால்ஸ்டாய் சிறு கதைகள் (3-ம் பாகம்) அச்சில்
11. சரித்திரக் கதைகள்
    எம். எஸ். சுப்பிரமணிய அய்யர் எழுதியது விலை ரூ. 1
12. பாரதியார் சரித்திரம்
    செல்லம்மா பாரதி எழுதியது விலை ரூ. 1
13. கமலா முதலிய சிறு கதைகள்
    ஆர். திருஞானசம்பந்தம் எழுதியது விலை ரூ. 1

சக்தி காரியாலயம்

ஜார்ஜ் டௌன் சென்னை

குழந்தைகளுக்கு வரும் வாயுப் பொருமல், இழுப்பு, அதிகப்படி புளிப்பு, முதலிய உபாதைகளைக் குணமாக்குவதில் தலைசிறந்தது.

மிகவும் மலிவான விலையில் ஒரு புராதனமான மருந்து !

ஸ்பென்ஸர் கம்பெனியாரின் ஸூதிங் வாட்டர் ஒரு பிரபலமான முறையைப் பின்பற்றி நம் தேசத்தின் மிகவும் உஷ்ணமான சீதோஷ்ண நிலைமையைத் தாங்கும் சக்தியுடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு இளம் குழந்தைக்கும் இதைத் தைரியமாகக் கொடுக்கலாம். ஏனெனில் இதில் மயக்க மளிக்கும் சரக்குகளின் சேர்க்கையோ, அல்லது ஹானி விளைவிக்கக் கூடிய வேறு யாதொரு விதமான சரக்குகளின் சேர்க்கையோ கிடையாது. மிகவும் மலிவான விலையில் விற்கப்படுகிறது. எல்லா முக்கிய கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும். ஏதாவது காரணத்தினால் உங்கள் ஊரில் கிடைக்காவிட்டால் நேரே எங்களுக்கு ஆர்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஸ்பென்ஸர்ஸ்

ஸூதிங் வாட்டர்

பெரிய பாட்டில் விலை அணா 12/-

ஸ்பென்ஸர் & கோ., லிமிடெட், மான்யுபாக்சரிங் கெமிஸ்ட்ஸ்

(1910 முதல்)

SPENCER & CO., LTD., MADRAS.

லைப் அஷ்யூரன்ஸ் செய்ய

★

நியூ கார்டியன் ஆப் இந்தியா லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

இவர்களிடம் ஆலோசி

சேர்மென்: கனம் ஸ்ரீ எம். ஸிடி. எம். சிதம்பரம் செட்டியார்

எங்கள் முன்னேற்ற மடைந்துள்ள லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் எடுத்துக்கொள்ளும் பாலிஸி முதல் தரமான சேமதனமாகும். இதில் ஏஜண்டாயிருப்பது, மதிப்புக்குரிய தொழிலாகும்.

தலைமை ஆபீஸ்:

யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்ஸ்,

எஸ்பிளனேட், சென்னை

புதிய பிரசுரங்கள்

மதுவிலக்கு மங்கை
அப்டன் சிங்கிளேர் எழுதியது
பெ. கோ. சுந்தரராஜன் அவர்களின் மொழிபெயர்ப்பு — 0 8 0

கண்ணன் என் கவி
கு. ப. ராஜகோபாலன்
பெ. கோ. சுந்தரராஜன் எழுதியது — 0 6 0

குழந்தை ராமு—(சமூகநாடகம்)
ரா. ஸ்ரீ. தேசிகன் எழுதியது — 0 4 0

கீதா போதனை
காந்தி அடிகள் அருளியது
பி. எஸ். சுந்தரம் மொழிபெயர்ப்பு — 0 2 0

குருகோவிந்த சிங்கன்
வ. வே. சு. ஐயர் எழுதியது — 0 4 0

ஆறடி நிலம்
லியோ டால்ஸ்டாய் எழுதியது — 0 4 0

திருக்கேதார பத்ரிகாஸ்ரம யாத்திரை
தி. சு. அவினாசிலிங்கம் — 1 0 0

சக்தி காரியாலயம் ஜி. டி., சென்னை

GANI & SONS

THE HOME OF
ROLLS WATCHES

*Known the world over
for accurate
performance
&
durability*

Rolled Gold Rs. 55/-, 60/-, 55/-



9 ct. Gold Rs. 80/-, 110/-, 80/-

18 ct. Gold Rs. 110/-, 155/-, 110/-

கனி & சன்ஸ்,

ம த ரா ஸ்

ஹெட் ஆபிஸ்:	பிராஞ்சு:
55-57, ரட்டான் பஜார்	190, மௌண்டு ரோடு

16 FEB 1942 MADRAS

திரையிடத் தயார்!

திரையிடத் தயார்!!

புதுக்கோட்டை

ஜூபிடர் பிலிம்ஸாரின்

மகோன்னத தயாரிப்பு

சமூகச் சித்திரம்! உயர்ந்த நடிப்பு!!

சன்யாசி

&

சம்சாரி

நடிகர்கள்

காவை சதாசிவம்	P. G. வெங்கடேசன்
P. T. ராம்	P. S. B. தொண்டமான்
P. A. குமார்	விகடகவி மாரியப்பன்

நடிகைகள்

புதுக்கோட்டை ருக்குமணி	T. S. ஜயா
P. S. ஞானம்	K. ராஜலெட்சுமி
P. R. மங்களம்	குமாரி செல்வா

விபரங்களுக்கு

அதிபர்

ஜூபிடர் பிலிம்ஸ்

9, வாசு தெரு, கீழ்ப்பாக்கம், சென்னை

எதிர்பாருங்கள்!

காரைக்குடி

ராமவிலாசம் தியேட்டரில்

- இந்திய க்ஷேத்திர யாத்திரை
- பண்டித நேரு பர்மா, சீனுப் பிரயாணப் படம்
- பொற் கோவில் நிறைந்த பர்மா நாடு

ஆகிய சிறு படங்களுடன்

ச

ங்

க

மா

லா

முதலாவது பர்மிய வனப் படம் காண்பிக்கப்பெறும்

மதுரை, திருச்சி, சேலம், பெங்களூர், கள்ளிக்கோட்டை, திருநெல்வேலி, புதுக்கோட்டை, கோட்டயம், தூத்துக்குடி மற்றும் பிரதான இடங்களிலும் விரைவில் வெளிவரும்.

டிஸ்டிரிபியூட்டர்கள்:

டாக்குமெண்டரி பிலிம்ஸ்

இராயப்பேட்டை, சென்னை

பொருள் அடக்கம்

விடுதலை வேண்டும்	...	237
காலச்சுழல்	...	238
கோவை அவினுசிலிங்கம் — தி. ஜ. ர.	...	239
வாடா விளக்கு — டி. கே. சிதம்பரநாத முதலியார்	...	242
பறித்த பூக்கள்	...	244
காதலி கையெழுத்து — சச்சிதானந்தன்	...	245
டால்ஸ்டாய் பேரனின் பரிதாபக் கதை — பி. கோதண்டராமன், எம்.ஏ., பி.எல்.		246
நறுந்தார் பெற்ற பாணன் — மு. அருணசலம், எம். ஏ.	...	249
பாரதியார் சொன்ன கதை — தங்கம்மாள்	...	251
மயிலாசனம் கிடுகிடுத்தல் — எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்	...	253
குமரி முனை — ஏ. கே. செட்டியார்	...	256
குறுக்கே புகுந்த ஜப்பான் — கே. அருணசலம்	...	259
தேள் வேட்டை — வி. ஸரோஜினி	...	261
துயரக் குழந்தைகள் — லியோ டால்ஸ்டாய்	...	263
ஜமீந்தாரிணி — ஆர். ஷண்முகசுந்தரம்	...	265
சரியான பொருத்தம் — சுவாமி சுத்தானந்த பாரதியார்	...	268
சின்ன முதலாளி — புத்தனேரி ரா. சுப்பிரமணியன்	...	271
பாலர் பாட்டு: மலர் — சு. உமைதாணு பிள்ளை	...	274
பாலர் கதை: பனிமுத்தும் வைரமும் — 'மாமி'	...	275
புத்தக உலகம்	...	276
ஒலியும் நிழலும்	...	—

தமிழ்நாடு ... 600 008
134193

சக்தி

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

மலர் : ௫ இதழ் ௬ விஷு—மார்கழி

விடுதலை வேண்டும்

"நமக்கு இந்த அந்நிய சர்க்காரிடம் நம்பிக்கை யில்லை. இந்தச் சர்க்கார் ஒதுங்கி விட வேண்டும். இந்த நெருக்கடியில், இந்தியாவின் இயற்கைத் தலைவர்களைக் கொண்ட தொரு சர்க்கார் நமக்கு வேண்டும்" என்று நாம் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறோம். யுத்த அபாயம் இந்தியாவை நெருங்க நெருங்க, அந்த ஆபத்தை எண்ணிப் பார்த்தாவது பிரிட்டிஷ் சர்க்கார் மசியாதா என்று நம்மில் பலர் ஆசைப் படுகிறோம்.

ஆனால், அது என்ன நினைக்கிறது? அமெரி என்ன நினைக்கிறார்? வைஸிராய் என்ன நினைக்கிறார்? அபாயம் வந்து விட்டதால், இனி இந்தியா தாங்கள் சொன்னபடி கேட்டுத்தான் ஆகவேண்டுமென்றே நினைக்கிறார்கள் போல் காண்கிறது.

அரசியல் கைதிகளைச் சர்க்கார் விடுவித்து வருகிறார்கள். நேருவையும் ஆஜாதையும் விடுவித்து விட்டார்கள். வாஸ்தவம். இதனால் சில அற்ப சந்தோஷிகள் குதூகல மடைவதும் உண்மைதான். ஆனால், எதற்காக அவர்கள் சிறை சென்றார்களோ, அந்தக் கோரிக்கை என்னாயிற்று? அதைச் சர்க்கார் ஏற்றுக் கொண்டதா? ஏற்றுக் கொள்ளத் தயார் என்று ஒரு சமிக்ஞையாவது உண்டா? அது தான் இல்லை; துளியும் இல்லை. அதற்குப் பிறகு, வைஸிராய் பேசியுள்ளார்; அமெரி பேசிவிட்டார். எல்லாம் அந்த ஒன்றரை வருஷத்துக்கு முந்திய, ஊசிப் போன, 'ஆகஸ்டுப் பல்லவி' தான். அற்ப மன மாற்றத்தையும் காணோம்.



"பிரிட்டன் தனது சுதந்திரத்துக்காக இன்று போராடிக் கொண்டிருக்குமானால், இந்தியா தனது சுதந்திரத்துக்காக ஒரு நூற்றாண்டுக்கு மேலாய்ப் போராடி வருகிறது. அவர்களது சுதந்திரத்துக்கு ஆபத்து வந்திருக்கிறதாம்; வேறு பலநாடுகளின் சுதந்திரத்துக்கும் ஆபத்து வந்திருக்கிறதாம். இது அவர்களின் கூற்று. ஆனால், நமது சுதந்திரத்தை நாம் வெகு நாளைக்கு முன்பே இழந்து விட்டோம் என்பதை மறக்க வேண்டாம். பிறரது சுதந்திரத்துக்குப் போராடும்போது, நமது சுதந்திரத்தை நாம் மறக்கமுடியாது" என்கிறார் சிறையிலிருந்து விடுதலையான ஜவஹர்.

இந்த நிலையில், சத்யாக்கிரகத்தை நிறுத்திவிட வேண்டுமென்கிறார்கள் சிலர். ஹிம்சையையும் அஹிம்சையையும் பற்றிய (கு)தர்க்கங்களெல்லாம் வேறு நடத்துகிறார்கள். "ஐயோ ருஷ்யாவே! அப்பா சைனாவே! அவைகளுக்கு நாம் உதவி புரியவேண்டாமா?" என்று மாயமாலக் கண்ணீர் வடிக்கும் பிரக்ருதிகளு முண்டு. உண்மை. அவற்றுக்கு உதவத்தான் வேண்டும். உதவ வேண்டாமென்று சொல்லும் ஒரே ஒரு இந்தியன் கூட இருக்கமாட்டான்.

ஆனால், எப்படி உதவுவது? ஏ அடிமையே! உன் காலையும் கையையும் கட்டிப் போட்டிருக்கும்போது, நீ ஏன் இந்த வேஷமெல்லாம் போடுகிறாய்? கை விலங்கோடு நீ யாருக்கு உதவி செய்ய முடியும்? யாருக்கு உதவி செய்யப் போகிறாய்? முதலிலே உன் விலங்கைத் தரித்துக் கொள்ள முயலு. பிறகுதான், உன் சொல்லுக்கு மதிப்பு உண்டு; உன் அனுதாபத்துக்கு மார்க்க முண்டு; உன் காரியத்துக்கு ஸித்தி உண்டு.

இன்று-இந்தியாவின் எல்லையை உலக யுத்தத் தீ வரவர அணுகி வரும் இந்த நேரத்தில், வேறு என்றையும்விட - எந்த நேரத்தையும் விட, மிக முக்கியமாய் நமக்கு வேண்டியது விடுதலை; விடுதலை; விடுதலைதான்.

— காலச்சூழல் —

அமெரி போகவேண்டும்

இந்தியப் பிரச்னை விஷயத்தில் பிரிட்டிஷ் சர்க்கார்தான் அசட்டுப் பிடிவாதம் காட்டுகிறது. பிரிட்டிஷ் பத்திரிகைகளெல்லாம், சர்க்காரின் போக்கைத் தாக்கி, தீவிரமாய் எழுத ஆரம்பித்திருக்கின்றன. தொழிற் கட்சியாரில் சிலர் இந்திய விஷயத்தைக் கவனிக்க ஒரு கமிட்டி கூட நியமிக்க முயற்சி எடுத் திருக்கிறார்களாம். இதெல்லாம் நல்ல குறிதான். ஆனால், அமெரி மட்டில் 'எருமை மாட்டு முதுகில் மழை பெய்தது போல'வே இருக்கிறார். அவர் இந்தியா மந்திரி பதவியை விட்டுக் கிளம்பினாலொழிய, எதுவும் நடக்குமெனத் தோன்றவில்லை. வேறு ஒன்றும் வேண்டாம்; முதலில் அவரை வெளிக்கிளப்ப வழி தேடினால், ஒரு வேளை பிரிட்டனுக்கும் க்ஷேமம், இந்தியாவுக்கும் க்ஷேமம் பிறக்கலாம் என்று நமக்குத் தோன்றுகிறது.

வைஸிராயின் பழைய தெப்பம்

பதினாறு மாதங்களுக்கு முன் 'ஆகஸ்டு அறிக்கை' என்று ஒன்று செய்யப்பட்டதே, உளுத்துப்போன அந்தத் தெப்பக் கட்டையையே பிடித்துக்கொண்டு தொங்குகிறார் வைஸிராய், தமது வங்காள ஐரோப்பிய வர்த்தக சபைப் பேச்சிலே. அது 'பயனில்லை, பயனில்லை' என்று அகில இந்தியாவும் எத்தனையோ முறை சொல்லியாயிற்று. கண்ணிருந்தும் காணாது, காதிருந்தும் கேட்காதவருக்கு எதை எத்தனை முறை சொல்லித்தான் பயன் என்ன? தமது புதிய நிர்வாக சபையை வைசிராய் புகழ்கிறார். அதிலே 'மெஜாரிட்டி'த் தீர்மானத்துக்கு எல்லாரும் கட்டுப்படுகிறார்களாம். இருக்கலாம். ஆனாலும், சிறை விடுதலைத் தீர்மானம் அமுலுக்கு வந்த அழகே அதைக் காட்டவில்லையா? அதற்கு எத்தனை பெரும்பாடு! அமெரிக்குத்தான் எத்தனை தந்திகள் பறந்தனவோ! புதிய நிர்வாக சபையின் பின்பலம் எங்கே இருக்கிறது? சீமையில் அல்லவா? ஜனங்களுடன் தொடர்பற்ற ஒரு நிர்வாக சபை கூட்டுப் பொறுப்பு வகித்தாலென்ன, தனிப்பொறுப்பு வகித்தாலென்ன? தேசத்துக்கு என்ன லாபம்?

ஜின்னா சாயபு கோபம்

ஜின்னா சாயபுவுக்குக் கூடச் சர்க்காரிடம் கோபம் வந்துவிட்டது. "வைஸிராயோ, பிரிட்டிஷ் சர்க்காரோ, இந்தியாவின் மனப்பூர்வமான ஒத்துழைப்பை விரும்பவில்லை. சர்க்கார் அதிகாரத்தில் இந்திய ஜனங்கள் பங்கு கொள்ளாமல் சும்மாக் கீழ்ப்படிந்து அடிமையாய் ஏவல் செய்ய வேண்டுமென்றே கேட்கிறார்கள்" என்கிறார் காயிதே அஜம். ஏது, ஜவஹர் பேசுவது போல் அல்லவா பேசுகிறார் ஜின்னா என்று யாரும் உச்சி குளிர்ந்துவிட வேண்டியதில்லை. பின்னால் அவர் சொல்லுவதையெல்லாம் கவனித்தால், ஜின்னாவின் நிலைமை விளங்கிவிடும். எல்லாம் பழைய சங்கதிதான். ஆனால், 'சுரத்'தில்லை; பழைய வீராவேசமுமில்லை. இயற்கைதானே? அஸாமிலும் வங்காளத்திலும் அவருடைய லீக் கோட்டைகள் இடிந்து விட்டன அல்லவா?

முஸ்லீம் லீக் கலகலக்கிறது

வங்காளத்தில் முஸ்லீம் லீக்கின் தர்பார் பலிக்கவில்லை. ஜின்னாவுக்கும் ஹக்குக்கும் ஏற்பட்ட தகராறு முற்றி விட்டது. தமது பழைய மந்திரி சபையை, ஹக் கலைத்து விட்டார்; ஸரத் சந்திர போஸின் கோஷ்டியையும் வேறு பலரையும் கொண்டதொரு புதிய கூட்டுக்கட்சியை அமைத்து, அதற்கு தாம் தலைவரானார். ஜின்னா கட்சியைச் சேர்ந்த மாஜி மந்திரி நாஜி முத்தீனுக்குக் கல்தாக் கொடுத்தார். புதியதொரு கூட்டு மந்திரி சபையையும் அமைத்து விட்டார். இதே சமயத்தில் அஸ்ஸாமில் ஸர் ஸாதுல்லா மந்திரி சபையும் நிலைகுலைந்து, ராஜிநாமாச் செய்து விட்டது. பஞ்சாப் பிரதமர் சிக்கந்தரையும் ஜின்னா நம்புவதற்கில்லை. எனவே, "மூன்று மாகாணத்தில் எங்கள் மந்திரி சபை இருக்கிறதாக்கும்" என்று ஜின்னா சாயபு இனி மார்தட்ட முடியாது.

விலைவாசித் தொல்லை

மதுரை, கடப்பை, சென்னை, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் சில 'கலாட்டா'க்கள் நடந்திருக்கின்றன. அவை முற்றிலும் கண்டிக்கத் தக்கவையாகும். ஆயினும், அவற்றின் மூலகாரணம் விலைவாசிகள் மிதமிஞ்சி உயர்ந்து வருவதேயாகும். அதற்கு உடனே பரிகாரம் காண்பது சர்க்காரின் கடமை. இந்தப் பிரச்சினைபற்றி, தமது பேச்சிலே வைஸிராய் பிரஸ்தாபித்திருக்கிறார். ஆனால், சர்க்கார் என்ன பரிகாரம் தேடப்போகிறது என்றுதான் அவர் திட்டமாகச் சொல்லவில்லை. விலைக் கட்டுப்பாடு சாத்தியமல்ல என்கிறார். கைத்தொழில் வளர்ச்சியே வழி என்கிறார். ஆனால், அதற்கு ஆதரவு தருகிறதா சர்க்கார்? அதுவுமில்லை. பின் என்னதான் வழி?

ஜப்பான் யுத்தம்

மேல் நாட்டு யுத்தமாயிருந்ததை உலக யுத்தமாக்கி விட்டது ஜப்பான். நாஜிகளைப் போலவே, முன்னெச்சரிக்கையின்றி, நம்பிக்கைத் துரோகமாய் அமெரிக்கக் காலனிகள், பிரிட்டிஷ் காலனிகள் மீது அது படையெடுத்துவிட்டது. வட மலேயாவில் பினாங்கு வரை ஆக்ரமித்து விட்டதாம். பர்மா எல்லையிலும் விக்டோரியா முனை வழியாகப் புகுந்து விட்டதாம். இன்னும் பிலிப்பைன், ஹாங்காங் முதலிய பல்வேறு இடங்களிலும் அது தன் கைவரிசையைக் காட்டி வருகிறது. ஹிட்லரின் கட்டளைப்படியே இந்தப் போரை ஜப்பான் ஆரம்பித் திருப்பதாக நமக்குத் தோன்றுகிறது. சிங்கப்பூர் தான் ஜப்பானின் முக்கிய லட்சியமாயிருக்கவேண்டும். சிங்கப்பூர் பிடிபட்டால், பிரிட்டனுக்கு ஆஸ்திரேலிய உதவி வரக் கஷ்டப்படும். அமெரிக்காவும் பிரிட்டனும் இப்படிக் கீழ்த்திசையில் கவனம் திரும்பச் செய்து, அந்தச் சமயம் பார்த்து, பிரிட்டனில் நுழைய ஹிட்லரின் எண்ணமாயிருக்குமோ என்னவோ. ஆகையால், இச் சமயம் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள, பிரிட்டன் மிக ஜாக்கிரதையாயிருப்பது நிச்சயம்.

விசேஷ பேட்டி :

கோவை அவினாசிலிங்கம்

— தி. ஜ. ர.

இன்று உபவாசம்; நேற்று ரயில் பிரயாணத்தால் ஏற்பட்ட அசதி—அவருடைய இந்த நிலைமையில் நான் போய்ச் சந்தித்தேன்.

ஸ்ரீ. அவினாசி எப்போது சென்னைக்கு வந்தாலும், மயிலாப்பூர் ஸ்ரீ. ராமகிருஷ்ண மடத்தில்தான் தங்குவார். மடத்தின் விசாலமான முன்புற ஹாலில், நாற்புறமும் சூழ்ந்த நிம்மதியான பசுஞ் செடிகளுக்கு நடுவே, களைத்த முகத்துடன் அவர் வந்து உட்கார்ந்தார். வாரத்துக்கு ஒரு நாள் அவரது உபவாச நாள்; மௌனமும் அன்று அனுஷ்டிப்பார். ஆனால், சென்னையில் வந்த காரியங்களைக் கவனிப்பதற்காக, மௌனம் மட்டில் இந்த வாரம் ஒத்திப் போயிருந்தது.

“உபவாசத்தால் அசதியாயிருக்கிறீர்கள் போலிருக்கிறதே! நான்......” என்று கொஞ்சம் மென்று விழுங்கினேன்.

அவர் மிக உற்சாகமாக, “அதைப்பற்றி உங்களுக்கென்ன? உபவாச காலத்தில்தான் ரொம்பச் சுறுசுறுப்பாய் வேலை செய்ய முடியும். விரும்பும் கேள்விகளைக் கேளுங்கள்” என்றார்.

ஸ்ரீ. டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார், கோவையில் செல்வாக்கு மிக்க உயர்ந்த வர்த்தகக் குடும்பத்தில் பிறந்தவர். 1903-ஆம் ௵ மேமீ 5௳ அவரது ஜனன தினம். பிரசித்திபெற்ற ஸ்ரீ. டி. எ. ராமலிங்கம் செட்டியார், ஸ்ரீ. அவினாசியின் சிறிய தந்தையார். ஸ்ரீ. கே. சுப்பிரமணியன் செட்டியார், ஸ்ரீ. அவினாசியின் தந்தை.

பாலியத்தில் கோவை லண்டன் மிஷன் ஹைஸ்கூலில் (இப்பொழுது யூனியன் ஹைஸ்கூல் என்று அதன் பெயர் மாறியிருக்கிறது) ஸ்ரீ. அவினாசி கல்வி பயின்றார். பிறகு, சென்னைப் பச்சையப்பா காலேஜிலும் லா காலேஜிலும் படித்தார்.

ஸ்ரீ அவினாசிலிங்கம். இந்திய அசெம்பிளியில் காங்கிரஸ் மேம்பர். அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்.

காலேஜில் படிக்கையிலேயே பொதுக் காரியங்களில் அவருக்குத் தீவிர உற்சாக முண்டு. விக்டோரியா ஹாஸ்டலில் திலகர் உருவச் சிலையை ஸ்ரீ. எஸ். சீனிவாசையங்காரைக் கொண்டு நிறுவச் செய்ததில் முக்கியமாகப் பொறுப்பெடுத்துக் கொண்டவர்களில் அவர் ஒருவர். 1924-ஆம் ௵ மலையாளத்தில் கொடிய வெள்ளக் கஷ்டம் நேரிட்டபோது, கஷ்ட நிவாரண ஸேவை புரிய, ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தாருடன் சேர்ந்து, ஸ்ரீ. அவினாசி அங்கே விரைந்தார்.

லா காலேஜ் படிப்பு முடிந்தது. 1926-ஆம் ௵ கோயமுத்தூரில் வக்கீல் தொழில் புரிய ஆரம்பித்தார். ஆனால், சென்னையில் படிக்கையிலேயே மற்றொரு தொடர்பு அவருக்கு ஏற்பட்டிருந்தது. அதுவே அவருடைய வாழ்க்கைக்கு ஜீவசுரம்போல் அமைந்துவிட்டது. ஸ்ரீ. ராமகிருஷ்ண மடத்தில் அவர் பெற்றிருக்கும் சம்பந்தத்தைத்தான் குறிப்பிடுகிறேன்.

1921-ஆம் ௵ வட நாட்டிலிருந்து, ஸ்ரீ. பரமஹம்ஸரின் நேர் சிஷ்யர்களான பிரம்மானந்த சுவாமிகள், சிவானந்த சுவாமிகள் இருவரும் சென்னைக்கு விஜயம் செய்தார்கள். அப்போது அவர்களைத் தரிசித்துச் சம்பாஷித்ததிலிருந்து ஸ்ரீ. பரமஹம்ஸரிடத்திலும் ஸ்ரீ. ராமகிருஷ்ண மடத்திலும் அவினாசிக்குப் பெரும் பற்றுதல் ஏற்பட்டது. அது முதல் அடிக்கடி மடத்துக்குச் செல்லுவதும் பரமஹம்ஸருடைய உபதேசங்களைப் படிப்பதும் அவருக்கு வழக்கமாயின. ஸேவையும் பிரம்மசர்யமுமே மடத்தின் முக்கிய லட்சியங்களாகும். ஆகையால், ஸ்ரீ. அவினாசி தமது வாழ்க்கையிலும் அந்த லட்சியங்களைக் கைக்கொண்டார்,

மகன் மணம் செய்துகொள்ள வேண்டும் என்று பெற்றோருக்கு மிகுந்த விருப்பம். மகனோ மிக உறுதியாயிருந்தார். ஆனால், ‘நல்ல காரியத்துக்காகத்தானே தங்கள் மகன் பிரம்மசரியம் அனுஷ்டிக்கிறான்’ என்று அவர்கள் ஒருவாறு ஆறுதல் அடைந்தார்கள்.

1930-ஆம் ௵ பிப்ரவரிமீ 3௳ கோவை ராமகிருஷ்ண வித்யாலயத்தை ஸ்ரீ. அவினாசி ஸ்தாபித்தார். அப்போது அரசியலில் அவருக்குப் பிரேமை கிடையாது. வித்யாலயத்தின் வளர்ச்சியையே தமது வாழ்க்கை லட்சியமாக, அவர் இன்றும் கைக்கொண்டிருக்கிறார். அப்படியானால் அரசியல்? அது பின்னால் வந்தது; அதை அவர் ஒரு நாள் கைவிட்டு விடவும் கூடும். ஆனால், தமது ஸ்ரீ ராமகிருஷ்ண குருகுலத்தை மாத்திரம் ஸ்ரீ. அவினாசி என்றும் வளர்த்துக்கொண்டிருப்பார்.

கோவை வித்யாலயம் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் ஒரு கிளை ஸ்தாபனமாக நடத்தப்படுகிறது. கோயமுத்தூருக்கு வடக்கே பதினோராவது மைலில், கோயமுத்தூரிலிருந்து மேட்டுப்பாளையத்துக்குச் செல்லும் ரயில் பாதைக்கும் ரஸ்தாவுக்கும் மத்தியில், அழகான மலைக் காட்சிகள் நிறைந்த இடத்தில் இது அமைந்திருக்கிறது. இதற்கும் பெரியநாய்க்கன்பாளையம் ரயில்வே ஸ்டேஷனுக்கும் ஒரு பர்லாங்கு தூரந்தான் இருக்கும். மலைக் காட்சிகளுக்கு எதிரில், பரந்த சமவெளியின் மத்தியில், வித்யாலயத்துக்குச் சொந்தமான

29 ஏக்கர் விஸ்தீர்ணமுள்ள நிலத்தின் ஒரு பகுதியில் எளிமையான சில கட்டிடங்கள் கட்டப்பட்டு, அவற்றில் வித்யாலயக் குழந்தைகள் வசிக்கின்றனர். மிக ஆரோக்கியமான ஸ்தலம்.

வித்யாலயம் குருகுல முறையில் நடந்து வருகிறது. மாணவர்கள் அனைவரும் வித்யாலயத்திலேயே வசிக்கிறார்கள். தமிழ் நாட்டின் பல ஜில்லாக்களிலிருந்தும் பல சமூக, பல வகுப்பு மாணவர்களும் வித்யாலயத்தில் யாதொரு வேற்றுமையுமின்றி ஒரே குடும்பம்போல் வாழ்கிறார்கள். ஆறு பாரங்கள் வரை இங்கே கல்வி போதிக்கப்படுகிறது. மாணவர்களுக்குத் தெய்வ பக்தி, தேகாப்பியாசம், கல்வி, பொது அறிவு, கலையறிவு, நூற்றல் பயிற்சி முதலியன அளிக்கப்படுகின்றன. ஸ்ரீ ராமகிருஷ்ணர், ஸ்ரீ விவேகானந்தர் ஆகிய இரு மகான்களின் உபதேச முறைகளையும் பின்பற்றி, மொத்தத்தில் இவ் வித்தியாலயம் தொண்டாற்றி வருகிறது.

கோவை வித்யாலயம் ஆரம்பமான அதே 1930-ஆம் வருஷத்தில், தேசம் பூராவையுமே கலக்கிய அற்புதம் ஒன்று நிகழ்ந்தது. அதுதான் மகாத்மா காந்தி தொடங்கிய உப்பு சத்தியாக்கிரகம். அது எத்தனையோ வாலிப உள்ளங்களைக் கிளறிவிட்டது. அவினாசியும் அப்படி மனங்கிளர்ந்த ஒருவராவார். தண்டி யாத்திரையின் முடிவில் மகாத்மாஜி கைதியான செய்தி கேட்டு, அவினாசி கண்ணீர் விட்டுவிட்டார். கண்மணி போன்ற தம் வித்யாலயத்தையும் விட்டுப் பிரிந்து அஞ்ஞாத வாசம் செய்யத் துணிந்தார். சத்யாக்ரகத் தீயில் குதித்தார். சிறையும் புகுந்தார்.

பிறகு, காந்தி-இர்வின் ஒப்பந்தம். விடுதலை. கராச்சிக் காங்கிரஸ். மீண்டும் சிறை வாசம். இந்த இரண்டாவது தடவை, கடலூர்ச் சிறை வாசத்தின் போதுதான், அதாவது 1932-ஆம் ௵, மதுரை ஸ்ரீ. என். எம். ஆர். சுப்பராமனுடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் ஸ்ரீ. அவினாசிலிங்கத்துக்குக் கிடைத்தது. வெளியில் வந்தது முதல், கோவைக் குருகுலத்துக்கு, ஸ்ரீ சுப்பராமனும் ஒரு காரியதரிசியாய் இருந்து வருகிறார்.

1934-ஆம் ௵, சட்டசபைப் போராட்டத்தில் காங்கிரஸ் இறங்கியது. இந்திய அசெம்பிளிக்கு, காங்கிரஸ் அங்கத்தினராக ஸ்ரீ. அவினாசி தேர்ந்தெடுக்கப்பட்டார். ஸ்ரீ அவினாசியின் வாழ்க்கை பூராவிலும் ஒரு விநோதமுண்டு. அவருடைய படிப்பு, ஸேவை, அரசியல் எல்லாவற்றிலும், மற்றவரை விட இளமையிலேயே அவர் பிரவேசித்து விட்டார். எஸ். எஸ். எல்.ஸி. பரீட்சையா? தோழமாணவர் அனைவரையும்விட அவரே இளைஞர். காலேஜா? அங்கேயும் அவர்தான் ‘கடைக் குட்டி.’ சட்ட சபையா? சகாக்கள் எல்லாருக்கும் சிறியவர் அவர்தான். வயது போகட்டும். உருவம் எப்படி என்கிறீர்கள்? இப்போது பார்த்தாலும், ஏதோ காலேஜ் மாணவன் மாதிரிதான் தோன்றுகிறார். இதனால் சில சமயம் சில விநோதங்கள் கூட நிகழ்வதுண்டு.

அசெம்பிளித் தேர்தலில் அவர் வெற்றி பெற்றவுடனே, அவருக்கும் வேறு நான்கு நண்பர்களுக்கும் சேலம் முனிஸிபாலிட்டியார் ஒரு வரவேற்பு உபசாரம் நடத்த ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால், இவர் அங்கே போனபோது, கேட்டிலிருந்தவன் இவரை யாரோ காலேஜ் மாணவன் என்று நினைத்து விட்டான். இவரை உள்ளே விடவில்லை. உபசாரம் பெற வந்த மற்ற நாவல்வரில் ஒருவர் பின்னால் வந்தார். “ஓ! இவர் நமது அவினாசி யல்லவா” என்று அவர் சொன்னபிறகுதான், கேட் ஆசாமிக்கு விஷயம் புரிந்தது.

“அசெம்பிளியில், நீங்கள் சாதித்த எந்தக் காரியத்தைப் பற்றிப் பெருமை கொள்ளுகிறீர்கள்?” என்று அவினாசியை நான் வினவினேன்.

“தனி முறையிலா? தனி முறையில் நான் என்ன சாதித்திருக்க முடியும்? காங்கிரஸ் கட்சி சாதித்த சகல காரியங்களிலுமே நான் பெருமை கொள்ளுகிறேன்” என்று அவர் பதிலளித்தார்.

மேலும் அவர் சொன்னதாவது: “பொதுவாக, கேள்விகள் கேட்பது, நிதி, வர்த்தகம் ஆகிய விஷயங்களில்தான், அசெம்பிளியில் நான் முக்கியமாய்க் கவனம் செலுத்துவது வழக்கம்.”



ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர். இந்த மகானுடைய திருநாமத்தையே தாங்கி நிற்கிறது கோவை வித்யாலயம்.

வாஸ்தவம். அசெம்பிளியில், ஏற்கனவே கேள்வி என்றால், ஸ்ரீ சத்தியமூர்த்தியின் பெயர் அநேகமாய் அதன் தலைப்பிலே இல்லாமலிராது. ஸ்ரீ. அவினாசியும் ஓர் எம். எல். ஏ. ஆனபிறகு, கேள்விகள் தயாரிப்பதைச் சற்றேறக்குறைய இருவருமாய்ப் பங்கு போட்டுக் கொண்டு விட்டதைப் பத்திரிகைகள் மூலம் நாம் அனைவரும் அறிவோம்.

இப்போதுதான் அசெம்பிளி வெறிச்சென்றிருக்கிறதே! கேள்விகள் கேட்பார் கூடச் சரியாய்க் கிடையாது. டில்லியில் ஒரு நாள் ஸ்ரீ. சத்தியமூர்த்தியும் ஸ்ரீ. அவினாசியும் சந்தித்தார்களாம்.

“பத்து நாளாகியும் 65-கேள்விகள் தானா வந்திருக்கின்றன?” என்று ஆச்சர்யப்பட்டாராம் ஸ்ரீ. அவினாசி.

“ஆமாம் அப்பா! நீயும் நானும் இல்லாவிட்டால், அசெம்பிளியில் கேள்விகள் எங்கேயிருந்து வரும்?” என்று சொல்லி நகைத்தாராம் ஸ்ரீ. சத்தியமூர்த்தி.

“பிரம்மசர்யம் அனுஷ்டிக்கிறீர்களே? அதனால் என்ன லாபம்?” என்று அவினாசியை நான் கேட்டேன்.

அவருடைய பதில்: “பிரம்மசர்யத்தால், நிறைந்த நம்பிக்கை பிறக்

கிறது. எந்தக் காரியத்தையும் சாதிக்கலாம் என்ற ஒரு மனோதிடம் உண்டாகிறது.''

கேள்வி : மணம் செய்து கொள்ளவேண்டும் என்ற எண்ணம் தோன்றுவதே யில்லையா ?

பதில் : சில சமயம் தோன்றலாம். நமது பகுத்தறிவைக் கொண்டுதான் அதை அடக்க வேண்டும். ஆத்மீக பக்தி வேண்டும் ; ஏதாவது பொதுஜன சேவை ஒன்றில் ஈடுபடவேண்டும். அப்போதுதான் பிரம்மசர்யத்தைக் காப்பாற்றமுடியும். இவ்விரண்டு மில்லாதவன், பிரம்மசர்யம் அனுஷ்டிக்க முடியாது.

அடுத்தாற்போல், தற்போதைய அரசியலைப்பற்றி, அவரது அபிப்பிராயத்தை அறிய விரும்பினேன். அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியிலும், அவர் ஓர் அங்கத்தினர். அரசியல் கைதிகளைச் சர்க்கார் விடுவித்ததாலும் சண்டையிலே ஜப்பான் வந்து தலையை விட்டுக் கொண்டிருப்பதாலும், காங்கிரஸின் செயல் முறையில் ஏதாவது மாறுதல் வேண்டுமென்று ஸ்ரீ. அவினாசி நினைக்கிறாரா ?

"அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி எப்போதோ கூடப் போகிறது. முன்னதாகக் காரியக் கமிட்டி கூடியாகவேண்டும். அதன் பிறகுதான் அ. இ. கா. கமிட்டி கூடும். இப்போது என்ன சொல்ல இருக்கிறது ?'' என்றார் அவர்.

"காரியக் கமிட்டியின் உத்தியோக முறைத் தீர்மானங்களையன்றி, உங்கள் சொந்தத் தீர்மானம் ஏதாவது பிரரேபிக்க உத்தேசமுண்டா ?'' என்று கேட்டேன்.

"அப்படி ஒன்றும் கிடையாது'' என்பது அவர் பதில்.

கேள்வி : சொந்த முறையில் தற்போதைய அரசியல் நிலைமை பற்றி உங்கள் அபிப்பிராயமென்ன ?

பதில் : அதுவா ? சொல்லுகிறேன். விஷயங்கள் தாமே உருவாகி வருகின்றன. பற்பல அம்சங்களையும் நன்றாய்க் கவனித்தே ஒரு முடிவுக்கு வரவேண்டும். சண்டையில் ஜப்பான் வந்து புகுந்தது ஒரு புதிய அம்சமாகும். இந்த



கோவை வித்யாலயத்தின் காரியதரிசியும் ஸ்ரீ அவிநாசியின் நெருங்கிய நண்பருமான மதுரை ஸ்ரீ என். எம். ஆர் சுப்பராமன்.

நிலைமையிலாவது பிரிட்டிஷ் சர்க்கார் விழித்துக்கொண்டு, நம்முடன் உண்மையான சமரஸத்துக்கு முன் வந்தால், அதை நாம் பயன் படுத்திக் கொள்ளலாம். நாம் என்ன செய்யவேண்டும் என்பது, அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதையே பொறுத்திருக்கிறது. அரசியல் கைதிகளைச் சர்க்கார் விடுவித்தது மாத்திரம் பயனில்லை ; சுதந்திர உணர்ச்சியைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒரு பிரரேபணையையும் அவர்கள் செய்ய வேண்டும்.

தமிழ்ப் பாஷை வளர்ச்சியில் ஸ்ரீ. அவினாசி பேரார்வம் உடையவர். இந்தியப் பொருளாதார நூல், கேதார் யாத்திரை என்ற இரண்டு தமிழ் நூல்களை அவரே எழுதி வெளியிட்டிருக்கிறார். மகாத்மா காந்தியின் தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகத்தை, அவரும் ஸ்ரீ. என். எம். ஆர். சுப்பராமனும் சேர்ந்து மொழி பெயர்த்துத் தமிழில் வெளியிட்டிருக்கிறார்கள். சுவாமி விவேகானந்தர் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் 'கல்வி'யைப் பற்றிக் கூறியுள்ள அரிய வாசகங்களையெல்லாம் அழகாகக் கோவை செய்து, ஓர் அருமையான ஆங்கில நூலையும் அவினாசி பிரசுரித்திருக்கிறார்.

அவருடைய இந்த முயற்சிகளைப் பற்றிக் கேட்டபோது, ஸ்ரீ. அவினாசி கூறியதாவது : "பொருளாதார நூல், தென்னாப்பிரிக்க சத்யாக்கிரகம் இரண்டும் கடலூர்ச் சிறையில் தயாராயின. கேதார் யாத்திரையையும், சுவாமிஜியின் 'கல்வி' பற்றிய நூலையும் திருச்சிச் சிறையிலே தயாரித்தேன். இந்தப் புத்தகங்களைத் தயாரித்தது மட்டினு மல்ல, எனது சிறந்த நண்பர்களை யெல்லாம் கூட முதன் முதலிலே சிறைகளில் தான் சந்தித்தேன். நிற்க, எங்கள் கோவைக் குருகுலம், பற்பல சயின்ஸ் நூல்களையும் தமிழிலே வெளியிட முயன்று கொண்டிருக்கிறது.''

இவ்வளவோடு என் கேள்வி-பதில்கள் முடிந்தன. அவரோடு பேசும்போது, நமக்குத் துளிக் கூட அந்நிய பாவம் ஏற்படுவதில்லை. மிக அன்போடும் எளிமையாகவும் பேசுகிறார். அவருடைய பழக்க வழக்கங்களும் மிக எளியவைதான். அவர் அசெம்பிளி அங்கத்தினர் ஆன பிறகுதான், தமது முதல் போட்டோவைப் பிடித்துக் கொண்டாராம். அதுவும் எதற்காக ? பத்திரிகைக்காரர்களின் உபத்திரவம் தாங்காமலும் ராஜாஜியின் வேண்டுகோளுக் கிணங்கியும்தான். அவரது வாழ்க்கையில், ஒரே ஒரு நாள் கூட வெற்றிலை போட்டதில்லையாம். பிரம்மசாரி யல்லவா ?

சுபாவம்தான் எளியது. ஆனால், நன்மையில் நம்பிக்கையும் மனோதிடமும் உடையவர். ஒரு சமயம் அயலூர் நண்பர் ஒருவர் திடீரென்று "உடனே காரில் வாருங்கள்'' என்று அவருக்கு டெலிபோன் செய்தாராம்.

ஸ்ரீ. அவினாசியும் அப்படியே சென்றார்.

அழைத்த நண்பர் இருதயக் கோளாறோடு படுத்த படுக்கையாயிருக்கிறார். பக்கத்திலே டாக்டர். ஸ்ரீ அவினாசியைக் கண்டதும், ஈன சுரத்தில் துக்கத்தோடு, "நண்பர் அவினாசி ! நான் இதோ சாகப் போகிறேன் ; பிழைக்கமாட்டேன். நீங்கள் ஓர் உதவி மாத்திரம் புரிய வேண்டும். என் பிரேதத்தை எப்படியாவது எங்கள் ஊரில் கொண்டுபோய்ச் சேர்த்து விடவேண்டும்'' என்றார் நண்பர்.

"இதென்ன விபரீதம் !'' என்று நினைத்த அவினாசி, நிதானமிழக்காமல், நண்பரின் கையைப் பிடித்து, நாதுவைப் பார்த்தார்.

பிறகு, "உமக்கொன்று மில்லை. நாதுமிக நேர்த்தியாயிருக்கிறதே.

வீணே மனதைக் குழப்பிக் கொள்ளாதேயும்" என்றார். இருதய பலவீனம் அடைந்தவர்களுக்கு மனத்திடம் ஊட்டுவது தான் முக்கிய மல்லவா?

அவினாசியின் உட்கருத்தைப் புரிந்துகொண்ட டாக்டரும் நோயாளியின் கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு, "ஆமாம், ஆமாம். என்ன ஆச்சர்யம்! தாது மிக நன்றாய் இப்போது பேசுகிறது. இனி ஒரு பயமு மில்லை" என்றார்.

நண்பர் பிழைத்தார். இன்றும் அவர் க்ஷேமமாய் இருக்கிறார்.

ஸ்ரீ. அவினாசியின் மனோதிடம் தொற்று நோய்போல் பிறரையும் பற்றிக் கொள்ளத்தக்கது என்பதற்கு இது ஓர் உதாரணம்.

இத்தகைய அவினாசியின் ஜீவ லட்சியத்தைக் குறித்து மற்றுமொரு முறை குறிப்பிட்டாக வேண்டும். அதுதான் கோவைக் குருகுலம். கடைசியாக நான் விடை பெறும்போது, 'ஒன்று கூற விரும்புகிறேன். நீங்கள் என்னைப் பற்றி எதுவும் பிரமாதமாய்ச் சொல்லவேண்டாம். எங்கள் கோவைக் குருகுலம் ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயம் இருக்கிறது, பாருங்கள்; அதைப்பற்றி வேண்டுமானால் கொஞ்சம் விவரமாய் எழுதுங்கள்" என்று ஸ்ரீ. அவினாசி கேட்டுக் கொண்டார்!

ஆமாம்; கோவை ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயம் என்பதென்ன? அதுவும் அவரும் உடம்பும் உயிரும் போல. அதன் சிறப்பும் வளர்ச்சியும்தானே அவருடைய பெருமை?

ஒஹியோவில் ஒரு வழக்கு.

ஜட்ஜ்: எதிரி குடித்திருந்தான் என்பதை நீ எப்படி அறிந்தாய்?

போலீஸ் அதிகாரி: அவன் கண்கள் கோவைப் பழம்போல் சிவந்திருந்தன; அதன் மூலந்தான்.

உடனே கண்ணப்ப நாயனாரைப் போல, எதிரி, தனது கண்ணாடிக் கண் ஒன்றைக் கழற்றி, ஜட்ஜியின் சன்னிதியில் சமர்ப்பித்தான்!

வாடா விளக்கு

[டி. கே. சிதம்பரநாத முதலியார்]

> **மக்களின் மனதிலே அறியாமை இருள் சூழ்ந்திருந்தது. அதற்கொரு மனவிளக்குத் தோன்றியது. அதனால் பொய், பொய்யாய்ப் போயிற்று; மெய் விளக்கம் பெற்றது. அந்தப் புனிதத் திருவிளக்கு தமிழ் நாட்டிலேதான் சுடர் விட்டது. அதுதான் தெய்வப் புலவர் அருளிய திருக்குறள்.**

வீட்டுக்குள் இருட்டு. இருட்டைப் போக்குவதற்கு விளக்கைப் பொருத்தப் பார்க்கிறோம். வௌவால் வந்து அணைக்கிறது. சிலவேளை திருடனே வந்து அணைக்கிறான்.

மக்கள் இயல்பு எப்பொழுதும் இப்படித்தான் இருந்திருக்கிறது.

இப்பொழுது பார்க்கிறோம்: சிலருக்குச் சில உண்மைகள் பிடிப்ப தில்லை. அவைகளைப் பார்ப்பதற்கே கண் கூசும். யாராவது ஒருவர் அதைப்பற்றிப் பேச வந்தால் உடனே அந்த இடத்தை விட்டு ஓடிப்போய் விடுவார்கள். வேறு சிலரோ அந்த உண்மையை எப்படியாவது ஒழித்துவிட வேண்டும் என்று இல்லாத பிரயத்தனம் எல்லாம் செய்வார்கள்.

இந்த விதமாக மேல்நாட்டுப் பத்திரிகைகள் செய்து வருகிற பிரயத்தனம் இவ்வளவு அவ்வளவு அல்ல. தற்போது மேல் நாட்டில் கடவுள் தத்துவம் முதல் குழந்தையை வளர்த்தல்வரை எல்லா விஷயங்களும் அரசியல் சிக்கலுக்குள் சிக்கிக் கிடக்கும். தர்மமோ, கலையோ ஒன்றும் தனித்து நிற்க முடியாது.

உதாரணமாக: சாரணர் இயக்கம் என்பது பொதுநலத்தை உத்தேசித்தே ஏற்படுத்தியது. இயக்கத்துக்குச் சிகரமான விதி "ஒவ்வொரு நாளும், யாராவது ஒருவருக்கு ஏதேனும் ஒரு உதவி புரியவேண்டும்" என்பது. ரொம்ப நல்ல விதிதான். உதவி யாருமே புரியலாம்; தர்மம் யாருமே செய்யலாம். இந்த மாதிரி உதவி புரிவதற்கு யாரும் உரியவர்தான்; யாரையும் ஒதுக்க வேண்டுவ தில்லை. ஆனாலும் பாருங்கள். சாரண இயக்கத்துக்குச் சிருஷ்டிகர்த்தாவான பேடன் பௌவல் ஆசிரியரே இந்தியர்களை ஒதுக்கப் பார்த்தார்.

எதற்கும் காரணம் என்று ஒன்றைக் கற்பித்தாக வேண்டும். ஆசிரியர் காரணமும் கற்பித்துக் கொண்டார். என்ன சொன்னார்: 'ஆனர்' என்ற ஆங்கில வார்த்தைக்குப் பிரதி பதம் இந்தியர்களிடத்தில் இல்லை என்று சொல்லிக் கொண்டார். ஆகையினாலே 'ஆனர்' என்கிற பண்பும் இந்தியர்களிடத்தில் இல்லை என்று சொல்லி விட்டார்.

பேடன் பௌவல் ஏதோ தென் ஆப்பிரிக்காவில் தளகர்த்தராயிருந்து, அங்கேயுள்ள ஜனங்களின் பாஷையைக் கற்றிருக்கலாம். ஆனால், இந்தியாவிலுள்ள நூற்றுக்கணக்கான பாஷைகளை யெல்லாம் கற்றுத் தேர்ந்த மேதாவி என்று எண்ண முடியாது. எந்த எந்த அகராதிகளைப் புரட்டிப் பார்த்து 'ஆனர்' என்ற பதத்திற்குப் பிரதிபதம் இல்லை என்று கண்டாரோ தெரியவில்லை.

ஆனாலும் ஒரு கேள்வி கேட்கலாம். ஒரு பாஷைக்குரிய அகராதியில் எத்தனையோ நல்ல பண்புகளைக் காட்டும் பதங்கள் இருக்கலாம். அது காரணமாக அந்தப் பண்புகள் அந்த பாஷைக்குரியவர்களுக்கு ஏகபோக பாத்தியம் என்று சொல்ல முடியுமா?

ஆங்கில அகராதியில் என்ன எல்லாமோ இருக்கின்றன. ஆனாலும் அனேக நல்ல பண்புகளுக்கு ஆங்கிலச் சொற்கள் கிடையாது. லத்தீன் பாஷை, பிரஞ்சு பாஷைச் சொற்களாகவே இருக்கின்றன. 'எஸ் பிரிட்டிக்கோ' ஒரு பிரஞ்சுச் சொற்றொடர். அதற்குப் பொருள், ஒரு இனத்தாருக்குள்ள வாஞ்சை என்பது. இதற்குச் சரியான ஆங்

கிலப் பதம் கிடையாது. இந்த ஒரு காரணமாக ஆங்கிலேயருக்கு சுஜாதி மித்ரத்துவம் கிடையாது என்று சொல்ல முடியுமா? முடியாது. ஏன்! இதர ஐரோப்பியர் ஆங்கிலேயருக்கு, மேலே சொன்ன சுஜாதி மித்ரத்தும் அளவுக்கு மிஞ்சிப் போய்விட்டது என்றுகூடச் சொல்லுவார்கள். இதெல்லாம் எப்படியும் போகட்டும். பேடன் பௌவல், 'ஆனர்' என்ற வார்த்தை பற்றியும் விஷயம் பற்றியும் சொன்னது வாஸ்தவம் அல்ல. ஏனென்றால் நம்மிடம் மானம் என்ற சொல் இருக்கிறது. மானஸ்தன், மானங் கெட்டவன், மானாபரணன் என்கிற வார்த்தைகள் இருக்கின்றன. வார்த்தைகள் வெறும் எட்டுச்சுரைக்காய் அல்ல. வாழ்க்கையோடு ஒட்டி நிற்பவை. மானத்துக்காக உயிரை விட்டவர்கள் நமக்குள் எத்தனையோ பேர் அல்லவா.

ஆனாலும் என்ன! இந்தியர்கள் சாரணர் ஆகக் கூடாது என்பது தானே விஷயம். இதெல்லாம் எதற்காகச் சொல்ல நேர்ந்தது: சாரணர் இயக்கமும் அதன் தர்மக் கொள்கைகளும் எப்படி அரசியலோடு மேல்நாட்டில் சிக்கிக் கொண்டன என்ற உண்மையைக் காட்டத்தான்.

கலை எப்படிச் சிக்கிக் கொண்டது என்பதைப் பார்க்க வேண்டாமா.

கலை ஆராய்ச்சித் துறையில் பேர் வாங்கினவர் வில்லியம் ஆர்ச்சர் என்பவர். அவர் ஏதோ இந்திய நாகரிகம், கலை என்ற விஷயங்களை ஆராய்ந்துவிட்டுப் புஸ்தகம் ஒன்று எழுதினார். அதில் பல்லவி போட்ட மாதிரி, இந்தியர்களுக்கு நாகரிகம் இல்லை, கலை யென்பதொன்றும் கிடையாது என்று வளைத்து வளைத்து எழுதினார். எழுதிவிட்டுக் கடைசியில் இதெல்லாம் காரணமாக "இந்தியர் சுய ஆட்சிக்கு அருகர் அல்லர்" என்று தீர்மானம் கொடுத்தார்.

இதற்கெல்லாம் மறுப்பு ஹைக்கோர்டு ஜட்ஜா யிருந்த ஸர் ஜான் உட்ராப் என்ற பேராசியரிடமிருந்தே வந்தது. ஸர் ஜான் உட்ராபின் முடிபு, இந்தியருக்குத்தான் நாகரிகம் உண்டு, இந்தியக் கலைதான் சிறந்தது, ஆங்கிலேயர் காரியம் எல்லாம் கொஞ்சம்



மோசந்தான் என்று தீர்ப்புச் சொன்ன மாதிரி சொன்னார்.

ஆகவே, கலை சம்பந்தமாகவும் மேல்நாட்டு அரசியல் வந்து புகுந்து தொம்ஸம் செய்ய ஆரம்பித்து விடுகிறது.

பொதுவாக மக்கள், பிரசாரத்துக்குள் அகப்பட்டுக் கொள்ளுகிறவர்கள் தான்.

பத்திரிகைகளில்க் காணும் விளம்பரம் என்றால் என்ன; பிரசாரம்தானே. பல்ப்பொடி முதல் சங்கீதம் வரை எல்லாவற்றையும் விளம்பரத்தைப் பார்த்துத்தான் மதிக்கிறோம். எல்லா விஷயம் பற்றியும் நாம் இருளில்த்தான் இருக்கிறோம். விளம்பரமாகிய மெழுகுபத்திகொண்டுதான் எதையும் பார்க்க வேண்டும். நாமாக ஒன்றை அறிய முடியாது அனுபவிக்க முடியாது. விளம்பரக்காரன் வந்து சொன்னால்த்தான், நாமும் ஒத்துப்பாடி, 'அறிகிறேன்', 'அனுபவிக்கிறேன்' என்று சொல்ல முடியும். ஏன், எண்ணவே முடியும்!

இந்தமாதிரி அறியாமையும், ஏமாளித்தனமும் இரண்டாயிர வருஷத்துக்கு முன்னும் நம்முடைய நாட்டில் ஏராளமா யிருந்திருக்கிறது. விளம்பரக்காரரும் ஆசிரியர் ரூபமாக மலிந்திருந்தார்கள். ஒரு புலவருக்கு இதெல்லாம் தாங்கமுடியாத காரியமா யிருந்தது. ரொம்ப சங்கடப்பட்டுக்கொண்டே யிருந்தார்.

கடைசியாகத் திருவள்ளுவர் வந்தார், விஷயங்களை எடுத்து அலசினார். "இது பொய்யான விஷயம். சும்மா இதை வைத்து என் மாரடித்துக்கொண் டிருக்கிறாய்; விட்டுத் தொலை. உண்மை என்பது இங்கே யிருக்கிறது பார்" என்று மனசில் நிற்கும் படியான முறையில்ச் சொன்னார்.

அறம் இன்னது என்றார். பொருள் இன்னது என்றார். இன்பம் இன்பம் என்று சொல்லிக்கொள்ளுகிறார்களே, அந்த விஷயமாக மக்கள் ஒன்றும் தெரியாத நிலையில் இருக்கிறார்கள்; துன்பத்தையே இன்பம் என்று கருதி, பணங்கொடுத்து விலைக்கு வாங்குகிறார்கள் என்றார். இவைகளோடு மோக்ஷம் இதுதான் என்று தெளிவாகச் சுட்டிக் காட்டினார். இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த புலவருக்கு ஒரே சந்தோஷம் உண்டாய்விட்டது. பேசுகிறார்!

பொய்ப்பால பொய்யேயாய்ப்
போயின.

மேலும்,

பொய் அல்லாத
மெய்ப்பால மெய்யாய்
விளங்கினவே.

எதுபற்றி?

—ஒப்பாரில்

தெய்வப் புலமைத்
திருவள் ளுவர்துறளால்.

எங்கே விளங்கின,

வையத்து வாழ்வார்
மனத்து.

திருவள்ளுவர் குறட்பாக்கள் உலகத்திலுள்ளவர்கள் மனசில் எக்காலத்திலும் ஒளி விட்டுக்கொண்டிருக்கும். அது காரணமாகவே பொய்யின் பாடு அதோ கதி ஆயிற்று.

பொய்ப்பால பொய்யேஆய்ப்
போயின, பொய் அல்லாத
மெய்ப்பால் மெய்யேயாய்
விளங்கினவே,—ஒப்பாரில்
தெய்வப் புலமைத்
திருவள் ளுவர்துறளால்,—
வையத்து வாழ்வார்
மனத்து.

பாருங்கள் புலவருடைய உத்ஸாகத்தை! நாமும், ரொம்ப சரி ரொம்ப சரி, என்று சொல்லிக் கைகொட்டி, புலவரை ஆமோதிக்கத் தயாராய் இருக்கிறோம்.

பறித்த பூக்கள்

தமிழ்த் தாத்தா என்று அழைக்கப்படும் டாக்டர் உ. வே. சாமிநாதையரின் சரித்திரச் சுருக்கத்தை 'ஈழ கேசரி'யில், பொ. ஆனந்தர் எழுதியிருக்கிருர். ஐயர்வாளின் தந்தையாருடைய பெயர் வேங்கடசாமி ஐயர். பிறப்பிடம் சென்னையைச் சார்ந்த உத்தமதான புரம். வயது எண்பத்தொன்பது. நாற்பதாவது வயது தொடங்கித் தமிழ்த் தாய்க்கு அரிய தொண்டு செய்து வருகிருர். முதன் முதல் வெளியிட்ட நூல் 'சீவகசிந்தாமணி' என்னும் பெரும் காப்பியமாகும். அதன் பின்பு, 'சிலப்பதிகாரம்', 'மணிமேகலை' முதலிய சங்க மருவிய நூல்களையும், 'பத்துப் பாட்டு', எட்டுத் தொகையுள் 'குறுந்தொகை', ஐங்குறுநூறு ஒத்த 'பதிற்றுப் பத்து', ஓங்கு 'பரிபாடல்' கற்றவரேத்தும் 'புறநானூறு' முதலிய சங்க நூல்களையும் வெளியிட்டுள்ளார். அன்றியும், பல நீதி நூல்களையும் இலக்கண நூல்களையும் பிரபந்தங்களையும் வெளியிட்டிருக்கிருர். மணிமேகலைக் கதைச் சுருக்கம், உதயணன் சரித்திரச் சுருக்கம், மீனட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம், கண்டதும் கேட்டதும், புதியதும் பழையதும், நல்லுரைக் கோவை, நினைவுமஞ்சரி முதலிய பல வசன நூல்களையும் வெளியிட்டுள்ளார். கம்ப ராமாயணத்தை வசனமாக எழுதுவா ரென்றும் அறிகிருேம். இவரது இல்லத்துக்குத் 'தியாகராஜ விலாஸம்' என்று பெயர்.

* *

காரில் உள்ள சரக்குகள்: ஒரு மோட்டார்க் காரை வாங்கினல் எவ்வளவு சாமான் வாங்குகிருேமென்பதை, ஒருவரும் கணக்குப் பார்ப்ப தில்லை. 'ராஷ்டிரவாணி' தரும் இதோ இந்தக் கணக்கைக் கவனியுங்கள்!

சுமார் இரும்பும் எஃகும்	1 டன்
பித்தளையும் வெண்கலமும்	33 பவுண்டு
டின்	2 ,,
ஈயம்	27 பவுண்டு
உருக்கு இரும்பு	144 ,,
ரப்பர்	110 ,,
பருத்தி	30 ,,
துணி	13 கஜம்
வர்ணச் சரக்கு	இரண்டரை காலன்
கடுதாசியும் மரச்சக்கையும்	37 பவுண்டு
கண்ணடி	18 சதுர அடி

இவ்வளவுமன்றி, ஒரு வருஷத்துக்குப் பிறகு நிரந்தரத் தலைவலியையும் வாங்கிக் கொள்கிருேம்.

* *

பேச்சினிய சாரியார்: ஸர் டி. விஜயராகவாச்சாரியார் மிக இனிமையாகப் பேசுவாராம். அதை வே. ரா. சுந்தர ராமன், எம். ஏ., 'பாரதமணி'யில் வர்ணித்திருக்கிருர். கலியாணமாகாத ஓர் இளம் பெண்மணியும் அவளை மணக்க விருந்த வாலிபனும் ஒரு முறை ஜெர்மனி தேசத்தில் ஸ்ரீ. விஜயராகவாச்சாரியாருடன் ரயிலில் ஒரே வண்டியில் பிரயாணம் செய்ய நேரிட்டது. இவருடன் அவர்கள் சம்பாஷிக்க லாயினர். வழி முழுவதும் அந்தச் சம்பாஷணையையும் அதன் நடுவே இவருடைய ஹாஸ்யக் கூற்றுகளையும் ரஸித்து வந்த அந்தப் பெண், தாங்கள் இறங்கவேண்டிய இடம் வந்தவுடன், தன் காதலனைப் பார்த்து, "உன்னை மணப்பதாக முன்பே நான் வாக்குறுதி செய்திரா விடில், இம் மனிதருடனே இப்போது நான் சென்றிருப்பேன். இவரது பேச்சு அவ்வளவு இனிப்பாக இருக்கிறது" என்ருளாம்!

* *

வக்கீல் குணம்: வக்கீல்களின் சம்பாத்திய சாமர்த்தியம் அபரிமிதமானது. ஸ்ரீ. எஸ். வி. வி., தமக்குத் தெரிந்த அந்தக் காலத்து வக்கீல், ஒருவரைப் பற்றி 'ஆனந்த விகட'னில் இது சம்பந்தமாய் வர்ணித்திருக்கிருர். அந்த வக்கீலிடம் ஒரு கட்சிக்காரன் சென்று "என்ன ஸாமி, கேஸ் இப்படியாகி விட்டதே! நமக்கு விரோதமாய் முனிசிப் தீர்ப்புச் சொல்லிவிட்டாராமே" என்று கேட்டால், "அவர் தீர்ப்புச் சொல்லி விட்டால், நான் அதை ஒத்துக் கொண்டு விட்டேனு? 'அப்பீல் போடப் போகிறேன், காப்பி கொடுங்கள்' என்று விண்ணப்பத்தை நீட்டினேன். சும்மா விட்டேனு?" என்பார் நமது வக்கீல். "ஒத்துக்கொண்டு விடாதீங்க, ஸாமி" என்று கக்ஷிக்காரன் கெஞ்சுவான். வக்கீல் "நான் என்ன பயித்தியக்காரனுடா ஒத்துக் கொள்ளுவதற்கு? பயப்படாதேடா, போ. தீர்ப்புக் காப்பிக்கு அச்சுக்கூலிக் கென்று பத்து ரூபாய் கேட்பான். அதை இரண்டு தினங்களில் கொண்டு எறிந்துவிடு. இந்த முனிசிப் தீர்ப்புப் பண்ணிவிட்டால் என்னடா ஆகிவிட்டது? அப்பீல் இல்லையா? பயப்படாதே, போடா! பத்து ரூபாயை மாத்திரம் இரண்டு நாளில் கொண்டு வந்து விடு" என்று தைரியம் சொல்லி, அவனைச் சந்தோஷமாக அனுப்பி வைப்பார்.

* *

ராமாயண பக்தர்: திருச்சிச் சிறையில் ராஜாஜி பிளாக்கில் காலை நேரங்களில் சில சமயம் "என்னைக் கொன்னுடுங்கோ!" என்ற கோர சப்தம் கிளம்புமாம். புதிதாய்க் கேட்பவர்களுக்கு இது ரொம்பவும் திகைப்பை யளிக்கும். ஆனல், "வால்மீகி ராமாயணம் படிக்கப் படுகிறது; மேற்படி குரல், என். எஸ். வரதாச்சாரியாரின் குரல்" என்று தெரிந்தவர்களுக்கு எவ்விதத் திகைப்போ, வியப்போ இராது என்கிருர் 'கல்கி' யில் ரா. கி. "நான் சொல்கிறதைக் கேட்டுண்டு, அப்புறம் என்னைக் கொன்னு வேணும் போட்டுடுங்கோ!" என்று அழுத்தந் திருத்தமாய்ச் சொல்லுவாராம் ஸ்ரீ வரதாச்சாரியார். நமது மாஜி - பார்லிமெண்டரிக் காரியதரிசி இவ்விதம் அடிக்கடி ஆத்மத் தியாகத்துக்குச் சித்தமான காரணம், இராமாயணத்தில் அவருக்குள்ள அபார பக்தி தான்; வேறென்றுமில்லை.

காதலி கையெழுத்து

[சச்சிதானந்தன்]

மாலைப் பொழுதினிலே—ஒருநாள்
மடுக் கரைதனிலே
சோலைக் குளிர்காற்றில்—மனது
சொக்கி மகிழ்கையிலே

நூலைக் கரத்தெடுத்தே—படித்து
நுகரப் போயிருந்தேன்
நூலைப் பிரித்ததுமே—அடடா!
நூதன மென்னகண்டேன்!

கண்க ளிமைக்கவில்லை—அங்ஙனே
கைக ளசையவில்லை.
பண்களி கொண்டவர்போல்—மனதைப்
பறி கொடுத்தேனே!

காந்தட் கரங்கொண்டு—கனிந்த
காதலைத் தோய்த்துவைத்து
மாந்தளிர் மேனியினாள்—பொறித்த
வாசகங் கண்டதுமே

சீத மதிமுகமும்—அரும்புஞ்
செவ்விதழ்ப் புன்னகையும்
காதின் வழியோடி—உயிரைக்
கலக்குங் கண்ணிரண்டும்

கோதி முடித்தசுருள்—நுதன்மேற்
கொஞ்சி யசைவதுவும்
மீதெழு தென்றலிலே—தவழும்
மென்கொடிச் சிற்றிடையும்

கண்முனே நின்றதையோ—உளத்தைக்
கலக்கி விட்டதம்மா!
பெண்மைத் தனியழகு—என்னையே
பேதமை செய்ததையோ!

சேலைத் தலைப்பெடுத்து—அவள்தான்
செவ்விதழ் வாய்புதைத்து
நூலினிடை சரிய—அழகு
நுதல்வழி சோர

நாணித் துவண்டுநின்றாள்—முறுவல்
நகைய ரும்பிநின்றாள்.
'நாண மிதென்னேடி?--அன்பே
நலமி தல்ல?' வென்றே

மாதின் கரம்பிடித்தேன்—ஐயனே
மாயம் பெரிதுணர்ந்தேன்
கோதை மறைந்துவிட்டாள்—அடடா
குயில் பறந்ததுவே!

'வயிறு கழுவவே திருடினேன்'

(டால்ஸ்டாய் பேரனின் பரிதாபக் கதை)

ருஷ்ய மகானும் கலைஞனுமாகிய லியோ டால்ஸ்டாயின் பேரனான ஜான் டால்ஸ்டாய், 1937-ஆம் ஹூ செப்டம்பர் மீ பிரஞ்சுச் சிறையில் தனது பரிதாபக் கதையைக் கூறினன். 'மரியான்' என்ற பிரெஞ்சு வாரப் பத்திரிகை அதை வெளியிட்டது. அந்தச் சுய சரிதையை நண்பர் பி. கோ. இங்கே மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார்.

ஜான் டால்ஸ்டாய்

[பி. கோதண்டராமன், எம்.ஏ., பி.எல்., மொழிபெயர்த்தது]

நான் ஓர் அநாதையாய் நடுத் தெருவில் விடப்பட்ட சிறுவன். 1921-ஆம் ஆண்டு, ஜுலை மாதம் 28-உ பியாரிட்ஸ் என்னும் ஊரில் பிறந்தேன்.

என் தாயின் அன்பையோ முத்தங்களையோ நான் அறியேன். நான் பிறந்தவுடனேயே, என் தாய் என்னை ஓர் அநாதை விடுதியில் விட்டு விட்டாள். என் பெற்றோர்களுக்குள் ஒற்றுமையில்லாமல் போகவே, குடும்ப வாழ்க்கை சகிக்க முடியாமலிருந்தது. ஒரு நாள் என் தந்தையும் தாயும் விவாகரத்து வழக்காடினார்கள். வழக்கில் தீர்ப்புக் கூறப்பட்ட கணமே, என் தாய், தாய்க்குரிய உரிமைகளை இழந்தாள். என் தகப்பனோ—அவன் பாரிஸ் நகரில் ஓர் எழுத்தாளனாக இருந்ததாகக் கேள்வி—என்னைப்பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாமல், அயல் நாடு சென்றான்.

இவ்விதம் அனாதையான நான், என் மூன்றாம் வயதிலேயே இவ்வுலகில் தன்னந்தனியனானேன்.

ஆனால், என் பாட்டியான ஒல்கா கோல்ஸ்கி, என்னை விடுதியிலிருந்து மீட்டு, தன்னிடமே வைத்துக்கொண்டு, பராமரித்து வந்தாள்.

பதின்மூன்று வருஷங்கள் என் அருமையான பாட்டியுடன் இருந்தேன்.

நானும் அவளும் நீஸ் நகரில், ரிவோலி என்ற தெருவில், ஒளி மிகுந்ததொரு வீட்டில், குடியிருந்தோம். சாளரச் சாய்ப்பில் ஒரு சிறு தோட்டம் அமைத்து, அங்கே பயிரான பூக்களுக்கு, நான் அற்புதமான பெயர்கள் வழங்கினேன்.

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. மாலை வந்தவுடன் திறந்த ஜன்னலுக்கு முன் என் பாட்டி என்னைத் தன் மடியில் உட்கார்த்தி வைத்துக்கொண்டு, ருஷியமும் பிரஞ்சும் கலந்ததொரு கதம்ப மொழியில் அழகிய சீமாட்டிகளைப் பற்றியும் சுந்தரக் கோமகன்களைப் பற்றியும் கதைகள் சொன்னாள்.

எனது புகழ்பெற்ற பாட்டனாரைப் பற்றியும் அவருடைய குணாதிசயங்களைப் பற்றியும் அவர் எழுதிய நூல்களைப் பற்றியும், பின்னொரு நாள் பெருமையுடன் பேசினாள்.

என்னை அன்போடு அணைத்துக்கொண்டு, "நீயும், உனது உத்தமமான பாட்டனாரைப்போல, நல்லவனாயும் யோக்கியனாயும் இருக்க வேண்டுமென்றே என் விருப்பம்" எனக் கூறினாள்.

ஐயோ! அவளது விருப்பம் நிறைவேறவில்லை; நான் யோக்கியனாகவில்லை. அவளது விருப்பத்துக்கு நேர் மாறாக, நான் ஒரு கள்ளனாயிருக்கிறேன்!

எனது பதின்மூன்றாம் வயதில் என் பாட்டி உயிர் துறந்தாள். நான் கண்ணீர் விட்டழுதேன். எனக்கு இனிக் கடுமையான சோதனைகள் வரவிருக்கின்றனவென்றும் அவற்றால் வீழ்ச்சியடையாமலிருக்கப் பெருவலிமை வேண்டுமென்றும் உணர்ந்தேன்.

என் பாட்டியைப் பறிகொடுத்தவுடனேயே, சிடுசிடுத்த முகங்கொண்ட கனவான் ஒருவர், என் கையைப் பிடித்துப் பரபரவென்று இழுத்துக்கொண்டு, என் அழுகையையும் கூக்குரலையும் சிறிதும் சட்டை செய்யாமல், என்னை ஓர் அனாதை விடுதிக்கு மீண்டும் அழைத்துச் சென்றார்.

நாள் ஆக ஆக எல்லாம் பழகிப் போய் விடுமென்று எனக்குள்ளே நான் ஆறுதல் கூறிக்கொண்டேன்.

என் பாட்டி என்னை அன்புடன் வளர்த்துவந்தபோது, நான் பள்ளியில் படித்தேன். அனாதை விடுதியில் பள்ளிக்கூட இறுதிப் பரீட்சையில் நான் தேறி யோக்கியதா பத்திரம் வாங்குவதற்கு அதுவே உதவியாயிருந்தது.

இதுவரையில் எல்லாம் சரியாகவே நடந்தது. நான் பூரண சந்தோஷத்தோடு இராமல் போனாலும், துக்கப் பட்டுக்கொண்டு இருக்கவில்லை. பின்பு, விடுதியின் காரியஸ்தர்கள் என் கல்வித் தேர்ச்சியை மதிக்காமல், நீஸ் நகரத்துக்கு அடுத்தாற்போலுள்ள எங்காரென் என்னும் ஊரில் பயிர்ச்சீவனம் செய்து வந்த அர்மானே தம்பதிகளிடம் என்னை வேலைக்கு அமர்த்தினார்கள்.

அதுவே என் வாழ்க்கையை நிலைகுலைத்து, நான் இன்றுள்ள அபாக்கிய நிலைக்கும் என்னைக் கொண்டு வந்து விட்டது.

அர்மானே தம்பதிகள் நல்லவர்கள்தான். ஆனால், பயிரிடுவோருக்கு உள்ள முரட்டுச் சுபாவம் அவர்களிடமும் இருந்தது. அவர்கள் என்னைக் கடினமாக நடத்தியதைப்போல, என் புத்திக்குப் பட்டது. பார்க்கப்போனால், அவர்கள் அப்படியொன்றும்

செய்ய வில்லை யென்றே சொல்ல வேண்டும்.

ஆரம்பத்தி லிருந்தே நான் நிலத்தை வெறுத்தேன். அந்த வெறுப்பு நாளுக்கு நாள் அதிகரித்தது. பல தடவை என் மனோ பாவத்தை என் எஜமானர்களுக்கு அறிவித்தேன். ஆனால், அவர்கள் என்னைக் கேலிசெய்தும் கோபித்தும் வந்தார்கள். ஒருநாள் நான் நல்ல குடியானவனாகப் போய்விடுவேன் எனக் கூறினார்கள்.

இவ்விடத்தை விட்டு ஓடிப் போய்விட வேண்டும் என்ற எண்ணம் கொஞ்சம் கொஞ்சமாக உருவெடுக்க ஆரம்பித்தது. சுயேச்சையாகவும் யாதொரு பலவந்தமுமில்லாமலும், என்னுடைய இஷ்டப்படி வேலை செய்ய விரும்பினேன். அது வீண் கனவு என்று இன்று தான் உணர்கிறேன். ஆனால், அந்தக் காலத்தில், ஆச்சரியச் செயல்களைப் பற்றிய கதைகளைப் படித்து என் தலை திரும்பியிருந்தது. அதிருஷ்டத்தையும் புகழையும் நோக்கி நான் சென்று கொண் டிருந்ததாக, அப்போது என் எண்ணம்.

நல்ல நிலையிலுள்ள சிறுவர்கள் இத்தகைய கதைகளைப் படிப்பது அவர்களுக்கு ஒரு பொழுது போக்காக இருககலாம். ஆனால், ஒன்றுமில்லாத சிறுவர்களும் எதிர்காலத்தில் நன்னிலைக்கு வர எவ்வித எதுவு மில்லாதவர்களும் இந்தக் கதைகளைப் படிப்பது அவர்களுக்கு ஆபத்தாகவே முடியும். ஏனெனில், இவை கனவு உலகத்துக்கு வழி திறந்து விடுகின்றன. அக்கனவுகளைப் பூர்த்திசெய்ய முடியாமலிருக்கையில், அவைகளை அலட்சியம் செய்யவேண்டும். கதைகளில் வரும் கதா நாயகர்களைப்போல நடக்க விரும்பியதால்தான், நான் இன்று சிறைவாசம் செய்கிறேன்.

கடைசியாக, நான் ஊரைவிட்டு ஓடிவிடத் தீர்மானித்தேன். அது தீர ஆலோசிக்கப்பட வேண்டிய விஷயமென்பதை, நான் அறிந்து கொள்ள வில்லை.

நான் நீஸ் பாதையை நோக்கிச் சென்றேன். அங்கே சென்று விட்டால், பின்பு எப்படியாவது பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணினேன்.

மாலை நேரத்தில் அந்த நகரை அடைந்தேன். எனக்குப் பசியாயிருந்தது. முதலில் பிச்சை கேட்க முயன்றேன். ஆனால், கைநீட்டிக் கேட்பதற்கும் பழக்கம் வேண்டுமே? இரண்டு மணி நேரத்துக்குப் பின்னுங்கூட ஒருசிறு ரொட்டித் துண்டு வாங்குவதற்குப் போதிய காசும் கிடைக்க வில்லை.

பிறகு, மோட்டார் வண்டிகளின் கதவுகளைத் திறந்து விடும் வேலையி லிறங்கிச் சிறு ஊதியம் பெற்று, அதைக்கொண்டு வறட்டு ரொட்டி வாங்கிப் புசித்தேன்.

இரவைக் கடற்கரையில் கழித்து விட்டு, அடுத்த நாள் காலையில் வேலை தேட நிச்சயம் செய்தேன்.

அந்தக் காலத்தில் என்ன பேய் தான் என்னை ஆட்டி வைத்ததோ, நான் அறியேன். ஆங்கிலேயர் உலாவச் செல்லுமிடத்துக்கு அருகில் ஜன நடமாட்ட மற்ற ஒரு தெருவில் போய்க்கொண் டிருந்த போது, கால்நடைப் பாதையில் ஒருமோட்டார் சைக்கிள் நின்றது.

எனக்குள்ளே என்ன நடந்ததோ, தெரியவில்லை. கொஞ்சமேனும் தாமதிக்காமல், என்னை யாராவது பார்க்கிறார்களோ என்றும் கவனிக்காமல், வண்டியின் சேணத்தின் மீதேறி உட்கார்ந்து சவாரி விட்டேன். ஒரு தெருவைத் தாண்டினேன்; பிறகு இன்னுமொரு தெருவையும் தாண்டினேன். வெகுதூரம் சென்று ஓய்ந்துபோன பிறகு நின்றேன்.

நீஸ் நகரில் என்னைப் பிடித்துவிடுவார்களோ என்று அஞ்சி, வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டே, சேன் ரபாயல் என்னும் ஊரை நோக்கிச் சென்றேன். வழியில் என் மூளையில் என்னென்னவோ எண்ணங்கள் வேலைசெய்யத் தொடங்கின.

சேன் ரபாயலில் நுழைந்து அதையும் தாண்டிச் சென்றேன். பிரெஜூஸ் என்னுமிடத்தில் வழியில் குறுக்கே படுத்திருந்த ஒரு நாய்மீது ஏறாமல் விலகிச் செல்ல முயன்றபோது, என் வண்டி ஒரு குட்டிக்கரணம் போட்டு விட்டு அடியோடு நின்றது.

வண்டியில் ஒரு பொட்டு எண்ணெய்கூட இல்லாததனால் தான், அவ்விதமாயிற்று. எப்பொழுது ஒருமுறை திருடியாயிற்றோ, அதற்குப் பின் மேலும் திருட யோசனையென்ன? நகரத்தில் இங்குமங்கும் அலைந்தபோது, ஒரு மோட்டார் வண்டி லாயத்தின் முன் சில கார் பரேட் வாயு டின்கள் இருந்ததைக் கண்டேன். அங்கே எவரும் காவல் இல்லை; ஒரு டின் எடுத்துக் கொண்டு நாலுகால் பாய்ச்சலாக ஓட்டம் பிடித்தேன்.

நாற்பது கஜதூரம் செல்லுவதற்குள் எனக்குப் பின்னால் ஒரு கும்பல் "திருடன்! திருடன்!" என்று கத்திக் கொண்டே துரத்தி வந்தது; ஒரு துஷ்ட மிருகத்தை வேட்டை யாடுவதைப் போல, என்னை அவர்கள் விரட்டினார்கள். களவாடின டப்பாவைக் கீழே போட்டுவிட்டு, இன்னும் அதிவேகமாக ஓடினேன். ஆயினும், பலிக்க வில்லை. என்னைப் பிடித்துக் கீழே போட்டுத் தள்ளி உருட்டி அடித்துப் போலீஸ் சாவடிக்கு இழுத்துக் கொண்டு போனார்கள். அங்கே ஒரு விசாரணையுமின்றி, ஓர் அறையில் என்னைப் பூட்டி வைத்தார்கள்.

என் வழக்கு நான்கு மாதங்கள் நடந்தது. அந்தக் காலம் முழுவதும் என்னைச் சிறையில் விலங்கிட்டு வைத்திருந்தார்கள். அங்கே 123 நாட்கள் தங்கியிருந்த பிறகு, கோர்ட்டார் என்னை மற்றொரு சிறைச்சாலைக்கு அனுப்பினார்கள். அங்கே ஒன்றரை வருஷங்கள் தங்கியிருக்க நேர்ந்தது.

நான் இருந்த மெத்ரே சிறையில் ஒழுக்கக்கேடு மிகுந்திருந்தது. என் மானத்தைக் காக்கவும் துன்மார்க்கர்களின் ஒழுங்கற்ற யோசனைகளுக்கு உட்படாதிருக்கவும், நான் அடிக்கடி என் புஜபலத்தையும் பிரயோகிக்க வேண்டியதாயிருந்தது!

மெத்ரே சிறையானது, 'குடும்ப வீடுகள்' எனப் பெயர் கொண்ட பல வார்டுகளாக வகுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு வார்டிலும் நாற்பது கைதிகள் வைக்கப்பட்டிருந்தார்கள். ஒவ்வொரு வார்டுக்கும் கைதிகளில் ஒருவனையே தலைவனாக நியமித் திருந்தார்கள். இந்தத் தலைவன் நல்லவனாக இருந்தால், எல்லாம் சரியாக நடைபெறும். அவன் கடின சித்தமுடையவனாக இருந்தால், அவனுக்குப் பின் பாட்டுப் பாடாமலும் அவனுக்குத் தலை வணங்காமலும் இருப்பவனின் கதி அதோ கதிதான்.

நான் என் தலைவனைப் பதினெட்டு மாதங்கள் எதிர்த்து வந்தேன். ஆனால், நல்ல காலமாக, துத்தநாகப் பட்டடையில் என் வேலையைப் பார்வையிட்ட அதிகாரிகள் என்மீது திருப்தி யடைந்து என்னைப் பற்றி நல்ல அபிப்பிராயங்கள் எழுதி யனுப்பினார்கள். நானும் அந்தத் தொழிலையே விரும்பிக் கற்றேன்.

பல பருவங்கள் வந்து சென்றன. கோடையில் எங்கள் சிறு வீட்டில் புழுங்கி வெதும்பினோம்; குளிரில் கொடும் பனியால் சில் லிட்டு விறைத்தோம். எங்களுக்குச் சரியான உடுப்பும் கிடையாது. தண்டனைக்குப் பயந்து யாரிடமும் புகார் செய்யத் துணியவில்லை. நாங்கள் இன்னும் எத்தனையோ கஷ்டங்களை அனுபவிக்கவும் நேர்ந்தது

ஒருநாள், மெத்ரே சிறையை மூடிவிடப் போவதாக ஒரு வதந்தி கிளம்பியது. சிலர் அயலூருக்கு அனுப்பப் பட்டார்கள். என்னைத் துரோன்ஷ் என்னும் ஊரிலுள்ள அலெக்கிரே என்னும் குடியானவனிடம் அனுப்பினார். நான் கண்ணீர் விட்டு அழுதேன்.

பதினெட்டு மாதங்களாக எனக்குப் பிடித்த ஒரு தொழிலைக் கற்று வந்தேன். இப்போது, நான் வெறுத்த நிலத்துக்கே, என்னை மீண்டும் அனுப்பினார்கள். எல்லாம் எனது துரதிர்ஷ்டம். ஒரு நாள் நான் தப்பியோடினேன்.

நான் அடைந்த ஒரு கிராமத்தில் திரும்பவும் ஒரு சைக்கிளைத் திருடினேன். நடு நடுவே மூன்று இடங்களிலே தங்கி, வெட்ட வெளியில் படுத்து, கடைசியாகக் கோத்தாளியூர் என்னுமிடத்தை அடைந்தேன். முதலில் திராட்சை அறுவடைக் கூலியாக அமர்ந்து, பின்பு ஒரு வேலையைத் தேடிக் கொள்ளலா மென்றிருந்தேன்.

நான் இரண்டு நாட்கள் பட்டினி யிருக்க நேர்ந்தது. ஒரு வீட்டின் கதவைத் தட்டினேன். அதைத் திறந்தவர்கள் என்னைப் பார்த்துவிட்டு, மீண்டும் 'பஉர்' என்று கதவைச் சாத்திக் கொண்டு உள்ளே சென்றுவிட்டார்கள். பட்டினியால் சாகாதிருப்பதற்கு, மறுபடியும் திருடவேண்டியது தானா என் கதி?

தூரெத்-ஸ்யுர்-லூ என்னுமிடத்தில், ஜான் பியேர் என்பவர் என் மீது காட்டிய கருணையால், நான் மீண்டும் வழுக்கி விழாமல் காக்கப்பட்டேன். அவர் என்னை ஆதரித்து உணவளித்து எனக்கு வேலையும் கொடுத்தார்.

எட்டு நாட்கள், என் கஷ்டங்கள் யாவும் விடிந்தன வென்று பூரித்திருந்தேன். பிறகு, என்னைக் காப்பாற்றிய அந்த நல்ல மனிதர், நான் தொழிலாளி என்று போலீஸ் சாவடியில் சட்டப்படி பதிவு செய்து கொள்ள வேண்டு மென்று சொன்னார்.

மறுபடியும் எனக்குச் சனியன் பிடித்தது. என் விதி என்னை விட்டால்தானே? போலீஸாருக்குப் பயந்து, நான் அவ்விடத்தைவிட்டு அகன்றேன். நீஸ் நகரில் ஒரு காப்பி ஓட்டலில், மெத்ரேயில் எனக் களிக்கப்பட்ட புதுப் பாதரட்சைகளை ஐம்பது பிரானுக்கு விற்றேன்.

ஐம்பது பிரான் எனக்குப் பெரிய சம்பத்துப் போலிருந்தது. அதை ஒருபோதும் வற்றாத செல்வ மென்று எண்ணி, சக்கையாக உண்டு வயிறு வெடிக்கக் குடித்தேன். கையி லிருந்த காசெல்லாம் கரைந்தது. ஒரு சல்லி கூட இல்லாமல், நீஸ் தெருக்களில் சுற்றி யலைந்தேன்.

மனிதன் விழக் கூடிய பாதாளத்தின் கடைசிப் படியையும் அடைந்தேன். திருடினேன். பல நாட்கள் சோமாறியைப் போலத் திரிந்தேன். கடைகளின் வெளியே எறியப்பட்ட அழுகிப்போன காய் கறிகளைத் தின்றேன். கண்ட இடத்தி லெல்லாம் படுத்துறங்கினேன். போலீஸாரின் நற்சாட்சிப் பத்திரமின்றி எவரும் எனக்கு வேலை கொடுக்க மறுத்தார்கள். ஒரு சாப்பாட்டு ஓட்டலின் வாயில் கதவைத் தட்டி உணவு கேட்ட போது, ஓட்டல்காரன் என்னை முரட்டுத்தனமாக வெளியே தள்ளினான். எனக்குப் பசி காதடைத்தது. மீண்டும் திருடினேன். ஆனால், என் பட்டினியைப் போக்கவே அவ்விதம் செய்தேன்.

கடலில் குளிக்கச் சென்றவர்கள் கரையோரத்தில் வைத்திருந்த உடுப்புக்களில் காணப்பட்ட காசைத் திருடி, உணவு வாங்கினேன்.

கான் என்னுமிடத்தில் என்னைப் போலீஸார் கைது செய்தார்கள். என்னால் முடிந்திருந்தால், தற்கொலை செய்து கொண்டிருப்பேன். என்னைப் போன்றவன் உயிர் வைத்திருப்பதனால், என்ன பயன்? அவன் சமூகத்துக்கே பாரமல்லவா?

நான் இன்று சிறையி லிருப்பது, என் தவற்றினாலேயே. நான் ஒருவரையும் குறை கூறவில்லை. நான் உதவாக்கரை.

ஆனாலும், என்மீது நம்பிக்கை வைப்பீர்களானால், நான் இனி யோக்கியனாக இருப்பேன் என்று கடைசித் தடவையாக உங்களுக்கு உறுதி கூறுகிறேன். நான் மெத்ரே சிறையில் கற்றுக் கொண்ட தொழிலில் மட்டும் என்னை வேலை செய்ய விடுங்கள். எனக்குக் கைகொடுத்து ஆதரிப்பீர்களானால், என் பாட்டி சொன்னதைப் போலவே, நான் நல்லவனாயும் யோக்கியனாயும் ஆகமுடியு மென்று மனப்பூர்வமாக இன்னும் நம்புகிறேன்.

அதே பாடம்

மாணவர் வருமுன்பே ஆசிரியர் தமது வகுப்புக்கு வந்து விட்டார். தமது குல்லாயை மேஜைமீது வைத்துவிட்டு, சற்று வெளியே சென்றார்.

பையன்கள் வந்தார்கள். சிறிது நேரம் காத்தார்கள். ஆசிரியரைக் காணோம். வெளியே புறப்பட்டார்கள்.

எதிரே வந்த ஆசிரியர் கோபத்துடன் "என்ன இது? இனி என் குல்லாய் இங்கே யிருந்தால், நான் இருப்பதாகவே நீங்கள் பாவிக்க வேண்டும். தெரியுமா?" என்றார்.

அடுத்த நாள் அந்த வகுப்புக்கு ஆசிரியர் வந்தபோது ஒரு பையனைக்கூடக் காணோம். ஆனால், ஒவ்வொரு பையனின் டெஸ்கிலும் ஒவ்வொரு குல்லாய் மாத்திரம் உட்கார்ந்திருந்தது!

புதிய
தமிழ்
டாக்கி
கீதங்கள்

எச் எம் வி
ரிகார்டுகள்

"HIS MASTER'S VOICE"

ஜெமினியின்

"மதனகாமராஜன்"

N. 18151 { கமலகுமாரி & ராஜேச்வரராவ்

N. 18152 { கமலகுமாரி & லங்காஸத்யம் பார்ட்டி

N. 18150
என். கிருஷ்ணமூர்த்தி

S. I. U. A. கார்பரேஷன்
"வனமோஹினி"யில்
தவமணிதேவி & சிதலகர்
3 ரிகார்டுகள் N. 18154-56

பக்ஷிராஜா பிலிம்ஸ்
"ஆர்யமாலா"வில்
N. S. கிருஷ்ணன் & T. A. மதுரம்
N. 18153

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

★

இவ்வருட - -
அபிவிருத்தியின்
புள்ளி விவரங்கள்:

● புதிய பாலிஸிகள் சுமார்	ரூ.	3,00,00,000	
● அமுலிலிருக்கும் பாலிஸிகள்	,,	18,16,00,000	க்குமேல்
● க்ஷேம நிதி	,,	3,57,00,000	,,
● மொத்த சொத்துகள்	,,	4,05,00,000	,,
● கொடுபட்ட உரிமைத் தொகை	,,	2,25,00,000	,,

நம்பிக்கையான சேவையினுலே
பிரக்யாதி வாய்ந்தது

ஹிந்துஸ்தான் கோவாப்பரேடிவ்
இன்ஷ்யூரன்ஸ் சொஸைட்டி லிமிடெட்

ஹெட் ஆபிஸ்:
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
6-எ, சுரேந்திரநாத் பானர்ஜி ரோடு, கல்கத்தா

சென்னை பிராஞ்சு:
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
107, அரண்மனைக்காரத் தெரு, சென்னை

★

நறுந்தார் பெற்ற பாணன்

[மு. அருணாசலம்]

நேற்றுக் கந்தல் துணியும் ஒட்டிய வயிறும் தேய்ந்த காலுமாய்த் தெருவிலே திரிந்த ஓர் ஏழைப் பாணன், இன்று யானைமீது ஆரோகணித்து, வைபவமாய் ஊர் வலம் வருகிறான். இவ் அதிசயக் காட்சியைக் கண்டு காரணத்தை ஊகிக்கிறான் ஒரு புலவன்; அதைப் பாடவும் பாடுகிறான். அந்த அரிய பழங் கவியின் நயத்தை விளக்குகிறார் கட்டுரையாளர்.

சன்னியாசி ஒருவர், பிச்சையெடுத்துத் தாம் உண்டது போக மிகுந்த சோற்றை ஒரு கிண்ணத்தில் போட்டு, எட்டாத உயரத்தில் ஒரு உறியில் வைத்துத் தொங்கவிட்டிருந்தார். தினந்தோறும் ஒரு எலி வந்து அந்தச் சோற்றைத் தின்றுவிடுவது வழக்கமாயிருந்தது. அதைத் துரத்த அவர் எவ்வளவோ பாடுபட்டும், பயனில்லை. எப்படி அது உறிக்கு வருகிறதென்று பார்த்தார். கூரை வழியாக வர இடமில்லை. ஆகவே, தரையிலுள்ள வளையிலிருந்துதான் கிளம்பிவந்தது என்பதைக் கண்டார். எட்டாத உயரத்திலிருந்த உறிக்குத் தாவுகிற வலிமை அவ்வெலிக்கு ஏற்பட்டதன் காரணம் பணமாகத்தான் இருக்கவேண்டும் என்று தீர்மானித்து, அதன் வளையைத் தோண்டினார். அவர் நினைத்தது போலவே, வளையில், வெள்ளியும் பொன்னுமாக ஏராளமான பணத்தை அந்த எலி சேர்த்து வைத்திருந்தது. அந்தப் பணத்தை அவர் அப்புறப் படுத்திவிட்டார். பிறகு, எலியின் ஆர்ப்பாட்டமெல்லாம் ஒடுங்கிவிட்டது. முன்போல உறிக்குத் தாவுவதற்கு வேண்டிய வலிமை அதற்கு இல்லை.

இது ஒரு பழங்கதை; பஞ்சதந்திரக் கதை. பணத்தினாலே எவ்வளவு பலம் ஏற்படக்கூடும் என்பதை வின்னியாசமாகக் கூறுகிறது.

இனி, உண்மையாக நடந்த விஷயமொன்றைப் பார்க்கலாம்.

எங்களோடு ஏழைப் பையனொருவன் பாடசாலையில் படித்து வந்தான். படிப்பிலுமே அவன் ஏழைதான். சரியாகப் படிப்பதே கிடையாது. ஏதோ உபாத்தியாயருடைய கருணையால் வருஷந் தோறும் பரீட்சையில் தேறி, மேல் வகுப்புக்கு வந்துகொண்டிருந்தான். அழுக்கடைந்த துணி, பரட்டை மயிர், பாழ் நெற்றி-இவைகளே அவனுக்கு அடையாளம். அசுத்தத்துக்கு உதாரணம் வேண்டுமென்றால், அவனைத்தான் சொல்லலாம்.

ஐந்தாவது பாரம் தாண்டி, கோடை விடுமுறை கழிந்த பின், ஆறாவது பாரத்தில் வந்து சேர்ந்தான். பழைய பையன்தான்; ஆனால், முற்றிலும் மாறிவிட்டான். தலையெல்லாம் செம்பட்டை படிந்திருந்ததற்குப் பதிலாக, ஒழுங்காக வாரி முடியப்பட்டிருந்தது. மையெல்லாம் கொட்டி, கறுப்பும் வெள்ளையும் சிவப்புமாக இருந்த பழைய சட்டைக்குப் பதிலாக, சுத்தமான கோடுபோட்ட சட்டை அணிந்திருந்தான். பாழடைந்த நெற்றியைக் காணோம்; சந்தனத்தாலே நெற்றியில் அழகாகப் பொட்டிடப்பட்டிருந்தது. பையனைப் பார்த்தால் எங்களுக்கு அடையாளமே தெரியவில்லை. விசாரித்த பிறகுதான் தெரிய வந்தது, கோடை விடுமுறையின் போது அவனுக்கு கலியாணமாய் விட்டதென்று.

அக்காலத்திலே பால்ய விவாகமும் வரதட்சிணையும் சர்வ சாதாரணம். வரதட்சிணை, பணம் என்றெல்லாம் ஏற்பட்டவுடனே, பையன் புதுப் பையனாக மாறிவிட்டான். சுத்தமாக இருக்க ஆரம்பித்தான்; சுத்தமாக உடுத்தக் கற்றுக்கொண்டான். எல்லாவற்றுக்கும் மேலாக, வகுப்பிலே கடைசி வரிசையின் முதலிலே அவன் இருந்தது போய், முதல் வரிசையில் முதல் இடத்துக்கு வந்து, பரீட்சையிலும் முதல் தரமாகத் தேறிவிட்டான். சிறு பையனானமையால், கலியாணமானதென்ற உணர்ச்சிகூட அவனுக்கு அவ்வளவாகக் கிடையாது; பணம் கிடைத்த ஒரு காரணத்தால், தானும் மற்றவர்களைப் போல் சிறப்பாக இருக்க வேண்டும் என்று கருத நேர்ந்தது; அது காரணமாக, அவன் முன்னுக்கும் வந்துவிட்டான்.

செல்வமானது, கேவலம் ஒரு எலிக்கு எவ்வளவு வலிமையையளித்ததென்பதைக் கதையில் கண்டோம். அதுவே ஓரளவுக்கு மக்களுடைய வாழ்க்கையை என்ன விதத்தில் திருத்த வல்லதென்பதையும் மேலே பார்த்தோம். இனி, புதிதாகப் பெற்ற செல்வத்தால் ஒருவனுக்கு எவ்வளவு கோலாகல மேற்படுகிறது என்பதையும் கவி மூலமாகப் பார்ப்போம்.

பழைய காலத்திலே தமிழ் நாட்டில் வள்ளல்கள் பலர் இருந்தார்கள். தமிழிலும் இசையிலும் அவர்கள் பெரிதும் ஈடுபட்டார்கள். அரிய புலமை வாய்ந்த கவிஞர்களுக்கும் இனிய இசை பாட வல்ல பாணர்களுக்கும் அவர்கள் எதையும் வரையாது வழங்கிவந்தார்கள். கவியினுடைய பெருமையையும், அதன் அருமையையும் அவர்கள் நன்றாய் உணர்ந்திருந்தமையாலே, அவர்களுடைய புகழைப் பாடி எளிய புலவர்கள் செல்வவான்களாக ஆவதற்கு, அக்காலத்திலே சந்தர்ப்பமிருந்தது. அவ்விதமாக ஒரு வள்ளலைப் புகழ்ந்து பாடி, அதுகாரணமாக ஒருவன் பெருநிதி பெற்று வந்ததைப் புலவரொருவர் எவ்வாறு கண்டு கூறுகிறார் என்பதைப் பாட்டிலே பார்க்கலாம்.

நந்தி போத்தரையன் அல்லது நந்திவர்மன் என்பவன் ஒரு பல்லவ மன்னன். அவனுடைய தலைநகரிலுள்ள பெரிய வீதியொன்றில், ஒரு காட்சி.

புலவரொருவர் வீதியிலே போய்க்கொண்டிருந்தார். பின்புறத்திலே, யானையின் மணியோசை கேட்டது. இக்காலத்திலே யானையைக் காண்பது அரிது; அதன் மணியோசையை நாம் கேட்டும் அறியோம். ஆனால், அந்தக் காலம் இப்படியல்ல; அரசியலிலே, நாடெங்கும் தமிழருடைய ஆதிக்கம் ஓங்கி நின்ற காலம் அது.

மன்னரும், சேனைத் தலைவரும், பெருங் கவிஞரும் யானையின் மீது ஆரோகணித்து வருவதைப் பல இடத்தும் அடிக்கடி காணலாம். ஆகவே, மணியோசையைக் கேட்டபோது புலவருக்கு எத்தகைய வியப்பும் ஏற்படவில்லை. ஆனால், அதனோடு கூடவே, வாத்தியங்களின் ஓசையும் பெரும் ஆரவாரமும் கலந்து அவர் காதில் விழுந்தன. திரும்பிப் பார்த்தார். சற்று நின்றார்.

செருக்கு மிகுந்த இளங்களிறு ஒன்று கோலாகலமாக வந்து கொண்டிருந்தது. முன்னாலே சிலர் வாத்தியம் வாசித்தார்கள். சுற்றிலும் சில ஏவலாளரும் வீரரும் தட்டுக்களில் வரிசைகளை ஏந்தி வந்து கொண்டிருந்தார்கள். கூட்டம் புலவரை நெருங்கிவிட்டது. இத்தனை ஆரவாரத்துக்கும் காரணமாக, யானையின் முதுகி லிட்ட அம்பாரியில் வீற்றிருந்தவன் யாரென்று கூர்ந்து பார்த்தார்.

அவன், இவருக்குத் தெரிந்த ஒரு ஏழைப் பாணன். நன்றாகப் பாட வல்லவன். "அடடா, இந்தப் பாணனா இவ்வளவு கோலாகலமாக வருகிறான்! நேற்று இவன் இருந்த நிலை என்ன? இன்று ஏது, இவ்வளவு பெரிய வாழ்வு வந்திருக்கிறது?" என்று சிறிது எண்ண மிடலானார்.

நேற்று வரையில் அந்தப் பாணன் எப்படி யிருந்தான்? அரையிலே அழுக்கடைந்த ஒரு கந்தல் துணி. மேலே அதுகூடக் கிடையாது. பிரபுக்களுடைய வீட்டுக்குப் போய், ஏதோ சொற்பப் பரிசிலுக்காகக் கெஞ்சிக் கூத்தாடுவான். இப்படிக் கடைவாயில் தோறும் திரிந்து திரிந்து, அவனுடைய உள்ளங்கால் வெள்ளெலும்பாகத் தேய்ந்தும் பாளம் பாளமாக வெடித்து மிருந்தது. பாணன் இருந்த இந்தப் பழைய நிலை புலவருக்கு ஞாபகம் வந்தது. தம் எதிரில் உள்ள ஆரவாரத்தைக் கூடச் சிறிது நேரம் மறந்துவிட்டார். தமது மனக் கண்முன் தோன்றிய காட்சியைப் பாட்டிலே சொன்னார் :

"நெருநல், துணி அரைச் சுற்றி,
பாடு திறப்பத் தன்கால்,
பல்கடை திரிந்த பாணன்."

[நெருநல் - நேற்று. பாடுதிறப்ப - உள்ளங்கால் வெடித்துக் கணைக்கால் வரையில் பிளவுபட. தன் கால் : ஸ்ரீ டி. கே. சி. சொல்லிய பாடம்]

இப்படிப்பட்ட தரித்திர நிலையுடைய பாணனை நமது புலவர் கண்டு பழகியிருக்கிறார். ஆனால், அதே பாணன் இப்போது என்ன கோலத்தில் காட்சியளிக்கிறான்?

அவன் மார்பில் அணிந்திருக்கும் அலங்காரமான மலர் மாலையினின்றும் வீசுகிற நறுமணத்தைப் புலவர் தூரத்திலிருந்தே அனுபவிக்கிறார். மலர்மாலை யொன்று மட்டுமா? அதனோடுகூட எத்தனையோ பொன்மாலைகள். மலரைப் போலவே பொன்னால் செய்து தொடுக்கப்பட்ட ஒரு ஆபரணமும் அவன் கழுத்தில் தொங்குகிறது. (புஷ்பத்தைப் போலப் பொன்னால் செய்து ஞானாசாரியருக்குப் பாத காணிக்கையாகச் சமர்ப்பிப்பது இன்றும் உள்ள வழக்கமென்பது இங்கே ஞாபகத்தி லிருக்க வேண்டும்.) அந்தப் பொன்மாலை எப்படி இருந்தது?

கார்கால மென்றாலே, பூஞ்செடிகளுக்கும் கொடிகளுக்கும் மரங்களுக்கும் ஒரே கொண்டாட்டம். அந்தக் கொண்டாட்டத்தை, அமோகமாகப் புஷ்பிப்பதனாலும் அலங்காரமாகத் தளிர்ப்பதனாலும் அவை வெளிப்படுத்துகின்றன. கொன்றை மரம், சரஞ்சரமாக, பொன்னாற் செய்த பூக்களைக் கோத்துத் தொங்க விட்டது போலப் பூத்திருப்பது ஒரு கண்கொள்ளாக் காட்சி. இந்தக் காட்சியை நம்மவர்கள் பெரிதும் அனுபவித்து, கொன்றைக்கு சரக்கொன்றை என்ற ஒரு அருமைப் பெயரையும் இட்டார்கள்.

பாணன் அணிந்திருந்த பொன் மாலையானது, காட்டிலே கொன்றை பூத்துள்ள இந்தக் காட்சியைப் புலவருக்கு நினைவூட்டிற்று. அவனுடைய பழைய முகத்தை அவர் கண்டிருக்கிறார்; கன்னமெல்லாம் ஒட்டியிருக்கும்; கண்கள் குழி விழுந்து பஞ்சடைந்திருக்கும். இப்போதோ? மணம் பொருந்திய மலர் மாலையையும் ஒளி பொருந்திய பொன் மாலையையும் சூடிய பிறகு, பாணனுடைய முகம் ஒரு புதிய பொலிவு பெற்று விளங்குவதற்குக் கேட்கவா வேண்டும்?

"பல்கடை திரிந்த பாணன் :
நறுந்தார் பெற்று,
காஅர் தளிர்த்த
கானக் கொன்றையின்
புதுப்பூப் பொலன்கலன் அணிந்து,
விளங்கொளி யானனன்."

[பொலன் கலன் - பொன் ஆபரணம். விளங்கொளி ஆனனன் - ஒளி விடுகின்ற முகத்தை யுடையவன்]

முன்னெல்லாம், பாத மெங்கும் வெடித்துப் போகும்படியாக நடந்து இரந்தவன், இப்போது யானை மீதேறியல்லவா பவனி வருகிறான்?

"இப்போது,
இளங்களி யானை
எருத்த மிசை யன்னே!";

[களி - செருக்குடைய. எருத்த மிசையன் - கழுத்தின்மேல் வீற்றிருப்பவன்]

இந்தக் காட்சியைக் கண்ட போது, புலவர் வியப்படைவது இயல்பு தானே! வியந்து, கொஞ்சம் சிந்திக்கலானார். இத்தகைய பெருமை இவனுக்கு எவ்வாறு வந்து கூடிற்று? பாடுவதைத் தவிர வேறொன்றுமே இவனுக்குத் தெரியாதே!

முந்திய நாள்தான், நந்திவர்ம பல்லவன், வெள்ளாறு என்ற இடத்திலே நடந்த போரில், பகையரசர்களனைவரையும் தோற்கடித்து விட்டு, ஜயசீலனாகத் திரும்பி வந்திருக்கிறான். அவனுடைய புயவலியும் போர்த் திறமும் நாடு முழுதும் நன்கறிந்தவை. அப்படியே, புலவர்களுக்கு வேண்டுவன கொடுத்து ஆதரிப்பதிலும் தனக்கு ஒப்பவர் இலரென்று அவன் பிரசித்தி பெற்றவன்.

வெள்ளாற்றில் நிகழ்ந்த போரில் அவன் கைவேலானது எத்தனையோ பகைவருடைய உயிரைப் போக்கி யிருக்கிறது. ஒருகால் இந்தப் பாணன், வெள்ளாற்றுப் போர்க்களத்தில் நந்தியின் வேல் போர் செய்த திறனைப் புகழ்ந்து பாடி, நந்தியை மகிழ்வித்து அவனுடைய அன்புக்குப் பாத்திரமானானோ? நந்தியின் பெருங் கொடையொன்றினால் தானே இவன் இத்தகைய சீரும் சிறப்பும் பெற முடியும்! பெரும் சிறப்போடு வீதியிலே வந்து கொண்டிருந்த பாணனைத் தம் மெதிரே காண நேர்ந்த போது, புலவர் இவ்வாறெல்லாம் எண்ணமிடுகிறார்.

134193

இந்த பாவத்தை ஞாபகம் வைத்துக் கொண்டு, இப்போது பாட்டு முழுவதையும் பார்க்கலாம்:

“ உரை வரம் பிகந்த
    உயர்புகழ்ப் பல்லவன்
அரசர் கோமான்
    அடுபோர் நந்தி
மாவேள் ளாற்று
    மேவலர்க் கடந்த
செருவேல் உயர்வு
பாடினன் கொல்லோ?
நெருநல், துணியரைச் சுற்றி,
பாடு திறப்பத் தன்கால்,
பல்கடை திரிந்த பாணன் :
நறுந்தார் பெற்று,
காஅர் தளிர்த்த
    கானக் கோன்றையின்
புதுப்பூப் பொலன்கலன் அணிந்து,
விளங்கொளி யானனன்,
    இப்போது,
இளங்களி யானை
    எருத்தமிசை யன்னே ! ”

[உரை வரம்பு இகந்த - புகழ்ச்சியின் எல்லையைக் கடந்த. மேவலர்-பகைவர். செரு - சண்டை]

சந்தேகத்தைக் குறிக்கிற ‘கொல்’ என்ற வார்த்தையைக் கேள்வி ரூபத்தில் தனியாக ஒரு சீரில் ‘கொல்லோ ?’ என்று அமைப்பதனாலும், ‘யானை எருத்த மிசையன்’ என்று சொல்ல வந்த ஆசிரியர், ‘அன்’ என்ற விகுதியை ‘மிசை யன்னே’ என்று ஒரு தனிச்சீரில் வைத்து முடிப்பதனாலும், தம்து மனத்தில் எழுந்த ஐயத்தையும் அதிசய உணர்ச்சியையும் நாமும் உணரும்படி செய்து விடுகிறார்.

இப்படிப்பட்ட பல பாடல்களைக் கொண்ட ஒரு பிரபந்தத்தைப் புலவனொருவன் நந்திவர்மன் மீது பாடினான். நந்தி, பாடல்களைக் கேட்டு மகிழ்ந்து, அவற்றிலுள்ள கவிச்சுவையில் ஈடுபட்டு, புலவனுக்குத் தன் செல்வத்தையும் அரசையுமே பரிசாகக் கொடுத்து விட்டான் என்பது பழமையான ஒரு கதை. இந்த ஒரு பாடலின் நயத்தையும் அதன் அரிய பாவத்தையும் உணர்ந்து அனுபவித்த பிறகு, நாமும், நந்திவர்மன் செய்தது மிகவும் சரி என்று ஆமோதிக்கத் தயாரா யிருக்கிறோம்.

பாரதியார் சொன்ன கதை

[தங்கம்மாள்]

எழுத்திலே எப்படியோ அப்படியேதான் பாரதியாரின் பேச்சும். கதையும் கவிதையும் கற்பனையும் நிறைந்த பேச்சு அவர் பேச்சு. பாரதியாரின் குமாரி தங்கம்மாள், தமது தந்தை சொன்ன தொரு கதையை இங்கே தருகிறார்.

வியாபாரம், விவசாயம் முதலிய தொழில் செய்தவரன்று பாரதியார். ஆயினும், அறிவென்னும் தராசுகொண்டு, உலக வாழ்க்கையின் விதிகளையும் நியமங்களையும் செயல்களையும் அவர் நிறுத்துப் பார்த்துக்கொண்டே யிருப்பார். ‘தெய்வீக ஆராய்ச்சி செய்வதையே தொழிலாகக் கொண்டு அதற்குத் துணையாகத் தேசத் தொண்டு செய்வது’ என்ற நியமத்தை அவர் கடைப்பிடித் திருந்தார். நம் நாட்டு வியாபாரம் கீழ் நோக்கிச் சென்றுகொண் டிருப்பதை எண்ணி, பாரதியார் பெருமூச் செறிவார். நம் வியாபாரிகளுக்கு அவர் சொன்ன தொரு புத்திமதி மிகச் சிறந்ததாகும்.

“ எந்தக் காரியத்தைச் செய்யப் புகுந்தாலும், ஆரம்பத்தில் கொஞ்சம் குழப்பம் ஏற்படத்தான் செய்யும். நாலு வழி தோன்றினால், எதில் நடந்தால் சரியாக வரும் என்று தீர்மானிக்க முடியாது. மனிதனுக்குச் சந்தேகம் பெரிய சத்ரு. இக்காலத்தில், எந்த வேலைக்குப் போனாலும் போட்டி அதிகரித் திருக்கிறது. கடலைச் சுண்டல் விற்பது முதல், ரேடியோ வியாபாரம் வரையில் சகலத்திலும் போட்டிதான். அந்நிய நாட்டு வியாபாரத்தையோ நம்புவதற்கில்லை. லாபா லாபங்களை யோசித்து ஒரு வழியில் இறங்க வேண்டும் என்ற தீர்மானம் சரிதான். ஆனால், பலர் வாழ்நாள் பூராவும் யோசனை செய்தேதான் கழிக்கும்படி யாகிவிடுகிறது. மனதைக் கண்டபடி கலங்க விடாமல், ஏதோ ஒரு விதமாகத் திடப்படுத்திக்கொள்ள வேண்டும். வியாபாரத்தில் மட்டுமன்று; எந்த விஷயத்திலுமே சந்தேகமும் போட்டியும் வந்து, அவை செவ்வையாக நடைபெறா வண்ணம் தடுத்து விடுகின்றன. அவற்றோடு போராடி, மனிதன் வெற்றிபெற வேண்டும். பலதடவை தோல்வி ஏற்படலாம். ‘மதி பெரிதா ? விதி பெரிதா ?’ என்ற பிரச்சினையும் அதனால் எழுகிறது. ஒருவன் மிகப் புத்திசாலித்தனமாக நடந்து வந்தாலும், அவனுக்கும் கடைசியில் நஷ்டம்தான் ஏற்படுகிறது. மற்றொருவன் நிர்மூடன்; அவன் தொட்ட தெல்லாம் பொன்னாய் விளைகிறது. இதற்கு என்ன காரணம் சொல்லுகிறது? அதிர்ஷ்டம் என்பதுதான் இதற்குக் காரணமா ?” என்றெல்லாம் ஒரு நாள் எங்கள் வீட்டில் தர்க்கம் நடந்து கொண் டிருந்தது.

என் தந்தை பாரதியார், மற்றவர் பேச்சை யெல்லாம் பொறுமையோடு கேட்டுக்கொண் டிருந்துவிட்டுக் கடைசியில் சொன்னதாவது: “நீங்கள் யோசிப்பது சரிதான். ஆனால், கஷ்டங்கள் வரத்தான் செய்யும். நல்லதும் கெட்டதும் மாறி மாறி வருவதுதான் உலக இயல்பு. நஷ்டம் வரும் என்பதற்காக வியாபாரத்தையே ஒரு மனிதன் விடமுடியாது. தொழிலின்றிச் சும்மா இருப்பது மனித ஜன்மத்துக்கு ஸாத்திய மில்லை. இதற்கு ஒரு கதை சொல்கிறேன், கேளுங்கள். கஷ்டம் வந்த சமயம் அதிலேயே மாய்ந்துவிடாமல், கூடுமானவரையில் புத்திசாலித்தனமாக நடக்க வேண்டியதுதான் நம் கடமை. செய்கைதான் நாம் செய்யவேண்டும். அதிலேற்படும் பலன் கடவுளைச் சார்ந்தது.”

“ கதையைச் சொல்லுங்கள், அப்பா ” என்று நாங்கள் துரிதப் படுத்தினோம். அப்போது, அவர் எங்களுக்குப் பின் வரும் கதையைச் சொன்னார்.

ஓர் ஊரில் பரமலோபியான ஒரு செட்டியார் இருந்தார். எச்சில்

கையால் காக்கை ஓட்ட மாட்டார். தருமம் செய்தல் என்பதைக் கனவிலும் கருதமாட்டார். பொருள் சேர்க்க வேண்டும் என்ற ஒரே எண்ணந்தான் அவருக்குண்டு. ஒருநாள் நமது செட்டியார் வீட்டுப் பசுமாடு ஒன்று, ஆகாரம் போடாததினால், எழுந்திருக்கவும் சக்தியற்றுப் போய்க் கிடந்தது. கறவை யுள்ளவரைதான் செட்டியார் அதற்குத் தீனி போடுவார்; கறவை யின்றால் தீனியும் கிடையாது.

செட்டியாருக்குக் குழந்தை குட்டிகள் இல்லை. வயதான மனைவி மட்டு முண்டு. அவள் செட்டியாரைப் பார்த்துச் சொன்னதாவது: "நீங்கள் மனதோடு இதுவரை ஒரு தான தருமமும் செய்ததில்லை. இப்படியே இருந்தால், நாளைக்கு இறந்த பின் எமலோகத்தில் நரகத்தில்தான் கிடந்து உழலவேண்டும். இந்தப் பசுமாட்டை யாராவது பிராமணனுக்குத் தானம் செய்து விடுங்கள். மாட்டைக் கொன்ற பாவமாவது நம்மைச் சேராமல் இருக்கட்டும்" என்றாள்.

செட்டியார் புத்திசாலி: "அவள் சொல்வதும் வாஸ்தவம்தான். பசுவுக்குப் போடும் தீனியும் மிச்சமாகும்; கோதான புண்ணியமும் கிட்டும். ஒரே காரியத்தில் இரண்டு லாபம்" என்றெண்ணி, யாருக்குத் தானம் செய்வது என்று யோசித்துக்கொண்டிருந்தார். அந்த ஸமயத்தில் வாயிலில் உபாதானம் எடுத்துக் கொண்டிருந்தான் ஒரு பார்ப்பான். அவனைக் கூப்பிட்டு, "ஐயரே! ஒரு பசுமாடு இருக்கிறது. அதைத் தானம் செய்யலாமென்றிருக்கிறேன். வாங்கிக் கொள்கிறீரா?" என்று செட்டியார் கேட்டார்.

பிராமணன் சந்தோஷம் அடைந்தவனாக, "ஆகட்டும்" என்றான். அவன் மனதில் 'இன்றோடு வீட்டில் பால், தயிர்க் கஷ்டம் நீங்கும்; ஸௌக்கியமாயிருக்கலாம்' என்று பூரித்தான். உண்மையில் பசு இருந்த ஸ்திதி பிராமணனுக்குத் தெரியாது. உடனே, பிராமணனை மந்திரம் சொல்லச் சொல்லி, அவன் கையில் செட்டியார் தாரை வார்த்தார். பிராமணன் செட்டியாரைப் பார்த்து, "பசு எங்கே?" என்றான். "கொல்லைப் புறத்தி லிருக்கிறது. வாரும்" என்றழைத்துச் சென்றார் செட்டியார்.

பிராமணன் மாட்டைக் கண்டு மலைத்துப் போனான். பின்பு, செட்டியாரும் அவருடைய மனைவியும் பிடித்துத் தள்ள, பிராமணன் தும்பைப் பிடித்திழுத்துச் செல்ல, வாயில்புறம் வரையில் நடந்த ஆயாசத்தினால் பசு கீழே விழுந்து இறந்தது. மாட்டை எடுத்துச் செல்லும் சக்கிலியனுக்குப் பார்ப்பான் தான் கால் ரூபாய் கூலி கொடுக்க வேண்டி யிருந்தது. அவன் தனது உபாதானச்செம்பை அடகு வைத்துச் சக்கிலியனின் கூலியைக் கொடுத்தான். பிறகு, சில நாளைக்கெல்லாம் செட்டியார் இறந்து போனார். அவரை எமதூதர்கள் தங்களுடைய எஜமானின் ஸன்னிதானத்துக்கு இழுத்துச் சென்றார்கள். செட்டியாரைப் பார்த்து, "அடே! வாழ்நாள் முழுதும் பாவத்தையே செய்து விட்டுப் பசு தானம் செய்திருக்கிறாய். அதனால் உனக்கு மீளா நரகமும் தானம் செய்த புண்ணியத்துக்காக மூன்றே முக்கால் நாழிகை ஸ்வர்க்கமும் உண்டு. உன் விருப்பமென்ன? முதலில் தண்டனையை அனுபவிக்கிறாயா? அல்லது சொர்க்கத்தை அனுபவிக்கிறாயா? எது உன் இஷ்டம்?" என்று கேட்டான் எமதர்மன்.

அதைக் கேட்ட செட்டியார், "ஐயா! பல நாள் நரகத்திலே கிடந்துவிட்டுக் கடைசியில் ஒரு துளி ஸுகம் அனுபவிப்பதைக் காட்டிலும், முதலில் சுகத்தை அனுபவித்து விட்டுப் பின்பு நரகம் செல்கிறேன்" என்றார்.

எமன் "ஐயோ பாவம்!" என்று நினைத்து, "சரி" என்றான். செட்டியாரை எமதூதர் ஸ்வர்க்கத்துக்கு அழைத்துச் சென்றார்கள். ஸ்வர்க்கத்தில் காமதேனுவைப் பார்த்ததும், செட்டியார் அதன் மேல் ஏறிக்கொண்டார். "காமதேனுவே! இந்த எமன் ரொம்பத் துஷ்டன்; அவனை முட்டு" என்றார். "அதிகப் புண்ணியம் செய்தவனையால்தான் ஸ்வர்க்க வாசம் செய்ய வந்திருக்கிறான். இவன் சொல்வதை நாம் தட்டலாகாது" என்று கருதிய காமதேனு, ஓடோடியும் சென்று, எமனை முட்ட ஆரம்பித்தது. எமன் ஒன்றும் புரியாமல் அலறிக் கொண்டு, பிரம்ம தேவனிடம் ஓடினான்.

செட்டியார் துணிவுடன் "பிரம்மாவையும் சேர்த்து முட்டு" என்று காமதேனுவுக்கு உத்திரவு போட்டார். உடனே பிரம்மாவும் எமனும் வைகுந்தத்துக்கு ஓட்டமெடுத்தார்கள். அங்கே திருமாலுக்கும் இதே தண்டனைதான் கிடைத்தது. எல்லோருமாகச் சேர்ந்து, பரமசிவனிடம் சென்று, இந்த அநியாயத்தை முறையிட்டுக் கொண்டார்கள்.

இதற்குள்ளாகச் செட்டியாரும் காமதேனுவில் ஏறியபடியே கைலாசகிரியை யடைந்து, அதை மும்முறை வலம் செய்து, நேரே மஹாதேவரிடம் வந்து சேர்ந்தார். இத்துடன் மூன்றே முக்கால் நாழிகையும் ஆகிவிட்டது. எமன் மகா கோபத்தோடு, நடந்த விஷயத்தைப் பரமசிவனிடம் விஞ்ஞாபித்துக் கொண்டான். அதைக் கேட்டு அங்கிருந்த தேவர்கள், கணங்கள், ரிஷிகள், நந்திதேவர் ஆகிய சகலரும் குலுங்கக் குலுங்கச் சிரித்தார்கள். செட்டியாரை எமன் "நரகத்துக்கு வாரும்" என்று கூப்பிட்டு மடியைப் பிடித்திழுத்தான். செட்டியார் அவனைத் திமிறிக் கொண்டு, பரமசிவனின் அடி பணிந்து, "ஸ்வாமி! முப்பத்தி முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் மும்மூர்த்திகளும் ஒன்று சேர்ந்து வீற்றிருக்கும் கைலாச பர்வதத்தை ஒருவன் பக்தியோடு மும்முறை பிரதட்சிணம் செய்த பின்பும், அவனிடம் பாவம் மிஞ்சி நிற்குமா? எமன் சொல்வது நியாய விரோதமல்லவா?" என்றார். இதைக் கேட்டு, எமன் அசட்டு விழி விழித்தான். மகாதேவர் புன்னகையோடு எமனை ஸமாதானப்படுத்தி யனுப்பி விட்டு, செட்டியாரைத் தமது சமீபத்திலேயே வைத்துக் கொண்டார்.

இந்தக் கதையைச் சொல்லிய என் தந்தையார், கடைசியில் இவ்வாறு கூறி முடித்தார்: "எதற்கு இதைச் சொன்னேனென்றால், செட்டியார் தமக்குக் கிடைத்த ஸ்வல்ப நேரத்தில் தமது கருத்தை நிறைவேற்றிக் கொண்டார். அதேபோல, எல்லோருக்கும் நல்ல காலமும் கெட்ட காலமும் மாறிமாறி வரும்போது, அது அதற்கேற்றபடி புத்திசாலித்தனமாக நடந்துகொண்டால், கஷ்டம் அனைத்தும் விலகிப் போகும்."

Your
EASTERN
BUSINESS

is safe with us. We transact every description of Banking & Exchange business. We offer Special facilities for Collection on Malaya. Promptness & Service are our watchwords.

INDIAN OVERSEAS BANK LTD.

ஹெட் ஆபீஸ் :

மதராஸ்

பிராஞ்சுகள் :

கன்னனூர்	சிங்கப்பூர்
கோயம்புத்தூர்	புதுக்கோட்டை
தேவகோட்டை	ரங்கூன்
காரைக்குடி	சிவகங்கா
குலாலம்பூர்	மேட்டூர் டாம்
பினங்கு	தலைச்சேரி (சப் ஆபிஸ்)

மேல்நாட்டு ஏஜண்டுகள்

தி சேஸ் நேஷனல் பாங்க் ஆப்
தி ஸிடி ஆப் நியூயார்க்
லண்டன் & நியூயார்க்

உங்கள் விலை யுயர்ந்த சாமான்களை
Safe Deposit Vault-இல்
பத்திரப் படுத்துங்கள்

இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கு

லிமிடெட்

எஸ்ப்ளனேட் : : மதராஸ்

தந்தி : 'GOODWILL' | தபால் பெட்டி நெ. 113 | டெலிபோன் : நெ. 2724

ஸௌத் இந்தியா கார்பொரேஷன்
(மதராஸ்) லிமிடெட்

80, செம்புதாஸ் தெரு, ஜி.டி. சென்னை

பிராஞ்சுகள் :
கல்கத்தா, காரைக்குடி, கோயமுத்தூர், திருச்சி

எம்மிடம் திரணை, சதுரம், பட்டா, இரும்புத் தகடு, கலாய்த் தகடு, கர்டர், கலாய்ப் பைப்பு, கலாய்க் கம்பி, ஆணி வகைகள், பெயிண்டு, சிமெண்டு முதலிய எல்லா விதமான, இரும்பு சாமான்களும் கட்டிட சாமான்களும் கிடைக்கும்

●

சினிமா பிடிப்பதற்கு வேண்டிய 2000 பவர் முதல் 5000 பவர் வரையில் பிரகாசமான பல்புகளும் அதைச் சேர்ந்த லைட் பிட்டிங்குகளும் எலெக்டிரிக் வொயரிங் சாமான்கள், வொயர், பல்பு, விசிறி, எலெக்டிரிக் மோட்டார், பம்பு முதலிய எல்லா எலெக்டிரிக் சாமான்களும் கைவசமிருக்கின்றன.

Sole Distributors for Madras Presidency and States

BLOOD VITA

பிளட் விட்டா என்பது கல்கத்தா மெடிகல் ரிசர்ச் லபாரட்டரியில் டாக்டர் அத்யக்ஷ மாதுர் பாபு என்பவரால் தயாரிக்கப் பட்ட உயர்ந்த இரத்த விருத்தி டானிக்

8 அவுன்ஸ் பாட்டில் விலை ரூ. 1-4-0

ASCU WOOD PRESERVATIVE

ஆஸ்கூ

இது மரப்பலகை, உத்தரம், விட்டம், டெலிபோன், எலெக்டிரிக் கம்பங்கள் முதலிய எல்லாவிதமான மரச் சாமான்களும் உளு, கறையான், மண் இவைகளால் பாதிக்கப் படாமல் இருப்பதற்கென்று, இந்திய சர்க்கார் காட்டு இலாகா ஆபீஸராக இருந்த டாக்டர் காமேசம் அவர்களால் கண்டு பிடிக்கப்பெற்ற, ஒரு ரசாயனப் பொருள். உபயோகப்படுத்தும் முறை இவைகளுக்கு, நேரிலோ, கடிதமெழுதியோ தெரிந்து கொள்ளலாம்.

ஜில்லா ஏஜண்டுகள் தேவை

பிராடியூஸ் டிபார்ட்டுமெண்ட்

நெ. 207, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்

டெலிபோன் நெ. 2991.

கிராம்பு, மிளகாய், பூண்டு, கொத்தமல்லி, சணல், சூடம் முதலிய மளிகை சாமான்கள் மொத்த வியாபாரம்

உங்களுக்குத் தேவையான எல்லா சாமான்களுக்கும்

கடிதம் எழுதக் கோருகிறோம்



ஒவ்வொரு தடவை பல் துலக்கும்போதும் உங்கள் தேகம் பூராவுமே நன்மை பெறுகிறது, கமகமவென்று வாசனை வீசி ஆனந்தமாய் நுரை கொடுக்கும் பற்பசை இதோ இருக்கிறது. பற்களின் சிறு இடுக்குகளிலெல்லாம் புகுந்து, பல்லை அது பாலிஷ் செய்கிறது. மேலும், அயோடின் சத்து அதில் இருப்பதால், அதை ஈறுகளும் வியர்வை உறுப்புகளும் கிரகித்துக்கொண்டு நன்மை செய்கின்றன.

'அயோடின்' பல் வியாதிகளைப் போக்கடிக்கும் சக்தியுடையது. ஆகையால் 'ஐடோகால்' பற் பசை, பையோரியா, ஸ்கார்புலா, கேடராக், காய்டர் முதலிய வியாதிக்காரர்களுக்கு அனுகூலம் செய்கிறது.

ஐடோகாலில் நமது முக்கிய அம்சங்களான (1) தைராய்ட் (2) அயோர்டா (3) லிவர் (4) வயிறு (5) முகஸ் மெம்ரேன் முதலியவைகளுக்கு அவசியமான அளவு அயோடின் சேர்ந்திருக்கிறது.

Idocol

AVAILABLE EVERYWHERE

Trade Enquiries to:—**EZRA BROS.**, Mustafa Bldg., Sir P. Mehta Road, Bombay 1.

FAMOUS IN INDIA AND ON THE CONTINENT

Madras Stockists :—LOANE SQUARE PHARMACY
160, BROADWAY, MADRAS



இரண்டாவது பதிப்பு

கவியரசர்

ரவீந்திரநாத் தாகூர்

விரிவான வாழ்க்கைச் சரிதம்
(படங்களுடன்)

ஆசிரியர்கள் :
அரு. காந்தி அண்ணாமலை
பி. இராஜேந்திர லால்

தமிழர்கள் நேரில் காண்பது போல் ஆனந்திக்க வேண்டி, இந்நூல் எழுதுவதற்காகச் சாந்தி நிகேதனம் சென்று, கவி தாகூரைத் தரிசித்து வந்து எழுதப்பட்டிருக்கிறது.

விலை அணா 12

சக்தி காரியாலயம்
எஸ்பிளனேட், சென்னை

கலர் ப்ளாக்குகள், கலர் லேபில்கள்,
கலர் பிரிண்டிங் செய்யுமிடம்

எம். ஸி. அப்பாசாமி செட்டி & கம்பெனி,
14, ஜோன்ஸ் தெரு, மண்ணடி, மதராஸ்.

Fashion Insists
On Smartness !
FOR MODERN SAREES
SHOP AT
RANGOON HALL
RANGOON MERCHANT
KARAIKKUDI

அழகு செய்வது தற்கால நாகரீக ஆடைகளே !
உயர்தர ஜவுளிக்கு
உத்திரவாதமுள்ள இடம்

ரெங்கோன் ஹால்

கு. அ. அங்கமுத்து முதலியார்
பட்டு ஜவுளி வியாபாரம்
அம்மன் சன்னதி :: காரைக்குடி

மயிலாசனம் கிடுகிடுத்தல்

[எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்]

ஆக்ரா அரண்மனையிலே இன்றும் ஓர் அதிசய வாயில் இருக்கிறதாம். அது அடைபட்ட வாயில். அதை யார் திறந்தாலும் ஒரு நாகம் சீறி வருமாம். ஆங்கிலேயர் ஒரு முறை அதைத் திறக்க முயன்றார்களாம். நாகம் சீறவே, வேலை நின்றதாம். அந்த அதிசயத்தின் காரணத்தை விளக்குகிறது இந்த வீர சரித்திரக் கதை இது.

மூன்று நாள் வாழ்வு, மோர் விற்ற காசு என்பார். அங்ஙனமே மொகலாயரின் வாழ்வு இங்கே முந்நூறாண்டு. பாபர் முதல் பகதூர்ஷா வரையில் பல சக்கரவர்த்திகள். அவர்களில் அதி சிறந்தவன் அக்பர்; அடுத்தபடி ஷாஜஹான்.

ஷாஜஹானே மாளிகை பல கட்டி மகிழ்ந்தவன்; தாஜ்மஹால் சமைத்துச் சிறந்தவன்; மயிலாசனமும் கொண்டு களித்தவன்! அத்தாணி மண்டபத்திலே ஆடம்பரமாக அவன் கொலுவிருந்தான். பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர், மண்டலீகர் அனைவரும் பணிந்து நின்றனர்.

அப்போது வாள்வீச்சு விரைந்து வந்தது. வீரரின் சிரங்கள் உருண்டன; குருதி கொப்புளித்தது. மயிலாசனமும் கிடுகிடுத்தது. உயிருக் கஞ்சி ஷாஜஹான் ஓட்டம் பிடித்தான்; அந்தப்புரம் சேர்ந்தான். பின்னரே தலை தப்பியது. மாதர் முன்னே மன்னர் மன்னனை மடக்க, அமர சிம்மன் விரும்பவில்லை.

அமரசிம்மன் யார்? அவன் சினம் பூத்ததேன்? ஆக்ரா நகரம் படுகளமாய பான்மை யாது? — என்று பார்ப்போம். ஸ்ரீராமன் சிற்றன்னையின் சொல்லால் முடி துறந்தான்; கானகமும் ஏகினன். அமரசிம்மனும் சிற்றன்னையின் சூழ்ச்சியால் மாருவார மன்னர் பதவியைத் துறந்தான்; கானகம் போவதேபோல், மொகலாய அரசவை புகுந்தான்.

ஷாஜஹானுக்கு உடம்பும் பெயரும் மொகலாய மயம். உள்ளமோ ரஜபுத்திர மயம். முகமதியனெனவும் அவனை வீர இஸ்லாமியர் மதிக்கவில்லை; ரஜபுத்திர ஹிந்து என்றே மதித்திருந்தனர். ரஜபுத்திரர் என்றால், அவனுக்கு மோகம் மிகுதி; ரஜபுத்திர வீர சிங்கங்கள் என்றால், பாசமும் நேசமும் அதிகம். அமரன் ஒரு ராஜ சிங்கம்; வீர சிங்கமுமாவான்.

அமரனது துறவு கேட்டு ஷாஜஹான் வருந்தினன்; பரிந்தழைத்தான் தன் சபைக்கு. வலுவில் வந்த வாழ்வை அமரசிம்மன் வரவேற்றான்; ஆக்ரா நகரம் சேர்ந்தான்; அத்தாணி மண்டபத்தை அலங்கரித்தான்; ஐயாயிரம் வீரருக்குத் தலைவன் எனும் பட்டமும் பெற்றான்.

ஆக்ரா நகரிலே அமரன் வேலை இது: சக்கரவர்த்தியுடன் சதுரங்கம் ஆட வேண்டும்; உல்லாசமாகப் பேச வேண்டும்; உடனிருந்து உண்டி கொள்ள வேண்டும்; வேட்டைக்குத் துணை செல்ல வேண்டும்; சதா சக்கரவர்த்தியின் பக்கத்திலேயே இருத்தல் வேண்டும்.

ஷாஜஹானுக்கும் அமர சிம்மனுக்கும் உடல்தான் வேறு; உயிர் ஒன்றே; உள்ளமும் அப்

"அபராதமா? யாருக்கு? அமரனுக்கா? உடைவாள் உடனே பதில் தரும்"

படியே! அசூயை மிகுந்த மொகலாயருக்கு அது பிடிக்கவில்லை. "புறச் சமயத்தானுக்கு இவ்வளவு ஏற்றமா? ஆளப்படும் இனத்தானுக்கு இத்துணை அதிருஷ்டமா? மொகலாய அரசவை ரஜபுத்திரமய மாவதா?" என்று பலரும் புழுங்கினர்.

மொகலாய தர்பாரில் ஒரு விசித்திரம். யாவராயினும் சரி, தினம் வந்து போவாராயினும் சரி, வந்தவுடன் மண்டியிட வேண்டும், சலாம் செய்ய வேண்டும், கைகட்டி நிற்கவேண்டும்; வாய் புதைத்து அமரவேண்டும். இம்மியும் தவறக்கூடாது; தவறின், தலைக்கு வரும் மோசம்! சக்கரவர்த்திக்குச் சீற்றம் பிறக்கும்!

எந்த விதிக்கும் விலக்கு உண்டு. அமரசிம்மனுக்கும் அரசவையில் அப்படித்தான். தடபுடலாக அவன் வருவான்; கம்பீரமாக அமர்வான்; கோலாகலமாகக் குலவுவான்; குதூகலமாகத் திகழ்வான். மொகலாயரில் பலருக்கு மனம் பொங்கியது; மன்னர் மன்னனின் காதில் பொல்லாங்கு ஓதி வந்தனர். நட்பின் முதிர்ச்சி அதனைச் சட்டை செய்யவில்லை.

அமரனுக்கோ தோள் தினவு மிகுதி, போர்புரிவதிலே விருப்பம் ஜாஸ்தி. இதற்கோ வகையில்லை. எனவே அடிக்கடி வேட்டைக்குப் போவான். அதனால் தோள் தினவு சிறிது தணியும். ஒரு சமயம் ஷாஜஹான் நோய்வாய்ப் பட்டான்; அந்தப்புரத்திலேயே இருந்தான். அமரனுக்குப் பொழுது போகவில்லை. வேட்டைக்குப் போய்விட்டான், யாருடனும் சொல்லிக்கொள்ளாமல்.

ஒருநாள் அமரனைக் காணவிரும்பினான் ஷாஜஹான்; ஆளும் விடுத்தான். அமரன் காணக் கிடைக்கவில்லை. கானகத்திலே வேட்டையில் மூழ்கியிருப்பவன் எங்ஙனம் அரசவையில் காணக் கிடைப்பான்? ஷாஜஹானுக்கு வருத்தம் பிறந்தது. பிரிய நேசனைக் காணோமே என்பது தான் காரணம்.

அமரனின் பகைவர் அதுவே சமயமெனக் கொண்டனர்; அரசர்க்கரசனிடம் தூபம் போட்டனர். கரைத்தால் கல்லுங் கரையும்! ஷாஜஹான் மனமும் கரையத் தொடங்கியது. "அரசவையை மதிப்பதில்லை; சக்கரவர்த்தி என்றும் பார்ப்பதில்லை. அவமதிப்பாகவே நடக்கிறான்" என்றெல்லாம் அசூயைக்காரர் கோளுரை கூறினர்.

வேட்டையிலிருந்து அமரசிம்மன் திரும்பினான்; வழக்கம் போல் சபைக்கும் சென்றான். "வீர நண்ப! சபையின் பெருமையை அவமதித்தல் அழகன்று. பன்முறை பொறுத்தாய் விட்டது. இனி, அபராதம் விதிக்கப்படும்" என்று ஷாஜஹான் பேசினான். அமரன், "அன்ப! சபையை ஒருநாளும் உதாசீனம் செய்யேன். செய்யவும் அறியேன். அபராதமா? யாருக்கு? அமரனுக்கா? உடைவாள் உடனே பதில் தரும்" என்று இயம்பினான்; சரேலென எழுந்தும் போய்விட்டான், தன் மாளிகைக்கு.

நேசன்மீதுள்ள பாசம் சக்கரவர்த்தியிடம் மிஞ்சியது. அமரனின் பிரிவை ஷாஜஹான் சகிக்கவில்லை; சலபத்கான் எனும் சேனாதிபதியை அனுப்பினான், அமரனை அழைத்து வர. சலபத்கானும் சதிகாரரில் ஒருவன். சமயம் வாய்த்ததென, சலபத் சிந்தை களித்தான்; நேரே அமரன் மாளிகை சேர்ந்தான். "பாதுஷாவின் ஆணை. ஐம்பது காசு அபராதம் வாங்கிப் போக வந்தேன்" என்றான்.

அழுகிய புண்ணில் புளி பெய்தால் எப்படி? அமரன் கடுஞ் சீற்றங் கொண்டான். எனினும் ஒன்றும் பேசவில்லை. படமெடுக்கும் பாம்பைக் குத்தி விடுவது போல், சலபத்கான் மீண்டும் படபடப்பாகப் பேசினான். அமரன் வாளா இருப்பனோ? உடை வாளை உருவினான். உடனே ஓட்டம் பிடித்தான் சலபத்கான். திரும்பியும் பார்க்கவில்லை. வாள் வீச்சு வருமோ என்றே நடுக்கம்! உயிருக்கும் அச்சம்!

ஷாஜஹானின் முன்னே சலபத்கான் தோன்றினான்; கானின் கையும் காலும் கருத்தும் ஒருங்கே நடுங்கின. "எங்கே அன்பன்? எங்கே அன்பன்!" என்று சக்கரவர்த்தி ஆவலுடன் கேட்டான். சலபத்கானோ பொய்யும் புரட்டும் புகன்று, பாதுஷாவின் மனத்தைக் கலைக்கலானான்.

உருவிய வாளுக்கு இரை கொடாமல், அதனை உறையிலிடார் சுத்த வீரர். உருவிய வாளுடன் சபைக்கு வந்தான் அமரன்; சலபத்கானது கோளுரை கேட்டான்; சக்கரவர்த்தியின் சிந்தை திரிந்திருப்பதையும் கண்டான். அவ்வளவுதான்! சலபத்கானின் சிரம் தரையிலே தேங்காய்போல் உருண்டோடியது.

முன்னம் முடியிழக்க நேர்ந்ததும், மொகலாய னவையில் வாழ நேர்ந்ததும், சதிகாரர் சிறுமை செய்வதும், அமரனின் மனக்கண் முன்னே வந்து நின்றன. சினவெறி பொங்கிவிட்டது. ஷாஜஹானை நோக்கி, உடைவாளை வீசினான். நல்ல காலம். சட்டென எழுந்தோடி அந்தப்புரம் புகுந்துகொண்டான் அச் சக்கரவர்த்தி. வீசிய வாளோ மயிலாசனத்தின் தூணில் தாக்க, அத்தூண் மளமளவென முறிந்தது.

உடனே அமரசிம்மன் சுற்றுமுற்றும் பார்த்தான்; கண்ணில் பட்ட சதிகாரரை எல்லாம் வாளுக்கு இரையாக்கினான். அன்னார் மூலைக்கு ஒருவராக ஓடி ஒளிந்தனர். ஒளிந்துமென்ன? உடைவாள் உருத்துகின்றது. அத்தாணி மண்டபத்திலே மொகலாயரின் தலைகள் சிதறின; இரத்தம் பெருக்கெடுத்தது. ஸ்படிகம்போல் பளபளப்பான தளம் பல விடங்களில் கறையுண்டது. ஒரு முகூர்த்த நேரம் அரசவை அல்லோல கல்லோலப் பட்டது.

ராஜசபையில் அமளி யென்று கேட்டதும், சக்கரவர்த்தியின் மெய்காவல் படை கிளம்பிவந்தது. எனினும் சபையினுள்ளே தலைகாட்ட அப்படைஞரில் ஒருவரும் துணிவு கொள்ளவில்லை. அந்தப்புரத்தில் இருந்தவண்ணம் அனைத்தும் உணர்ந்தான் ஷாஜஹான்; யாது செய்வதெனத் தெரியாமல் கையைப் பிசைந்தான். அச்சமயம் வந்து வாய்த்தான் அர்ச்சுன சிம்மன் என்பான்.

அர்ச்சுன சிம்மனும் ரஜபுத்திரன்; அமரனுக்கு நெருங்கிய உறவினன்; இனபிமானத்தினும் ராஜ பக்தியே மிகுந்தவன்; மொகலாய சக்கரவர்த்தியின் மந்தகாசத்தையே பெரிதாக மதித்தவன். இவனை ஷாஜஹான் அழைத்து, அமரனைச் சாந்தப் படுத்துமாறு ஏவினான். அர்ச்சுனனது வரவு கண்டதும், இனத்தான் தானே என்று சற்றே சினந் தணிந்தான் வீரசிங்க அமரசிம்மன்.

பசப்பு வார்த்தை பேசிக் கொண்டே வந்த அர்ச்சுனன் சமயம் பார்த்து, ஈட்டியெடுத்து, அமரன் வயிற்றில் பாய்ச்சினன். வயிற்றினூடே ஈட்டி ஊடுருவிப் பாயும் பொழுதும், அமரனின் உடைவாள் சும்மா இருக்கவில்லை; அர்ச்சுன சிம்மனை இரு துண்டாக்கிநிலத்தில் சாய்த்தது. பின்னரே, அமரசிம்மன் நெடுமரம் போல் முறிந்து வீழ்ந்தான்.

அமரனது கதியை அறிந்ததும், ஷாஜஹான் துடிதுடித்தான்; "ஐயகோ! வீரசிங்கத்தை இழந்தேனே" என்று புலம்பினன்; "அர்ச்சுனனை இதற்கா அனுப்பினேன்" என்று அலறினன்; "சதிகாரரின் சொற்கேட்டுச் சித்தம் திரிந்தேனே" என்று தேம்பினன். சுத்த வீரரோ அமரசிம்மனது அஞ்சா நெஞ்சத்தைக் கண்டு அதிசயித்தனர்; அருஞ் சமரைக் கேட்டு, மூக்கில் விரல் வைத்தனர்; சதிகாரரையும் சபித்தனர்.

நாதன் கொலையுண்டான் என்று கேள்வியுற்றதும், சுசீலாதேவி சிங்கநாதத்துடன் கிளம்பினள்; அமரனது உயிர்த்தோழரான ஐந்நூறு பேரும் மஞ்சள் உடைகொண்டு, போர்க்கோலம் பூண்டு, அத்தேவியின் தலைமையில் புறப்பட்டனர். அத்தாணி மண்டபஞ் சேர்ந்ததும், சுசீலா ஆர்ப்பரித்தாள்; உடன் வந்த வீரரும் உடைவாளை உருவினர். மொகலாயரின் சிரங்கள் நூற்றுக்கணக்கில் தெறிபட்டன.

பின்னர் மொகலாய சேனையொன்று மொய்ம்புடன் கிளம்பி வந்து போர் தொடுத்தது. சுசீலா தேவி சிறிதும் தயங்கவில்லை; தன் வீரரை ஏவினள்; தானும் துர்க்கையேபோல், தனியாச் சமர் முருக்கினள். வந்த மொகலாய சேனை அவ்வீரரின் கையில் சிக்கிச் சீரழிந்தது. ஐந்நூற்றுவரை வெற்றிகொள்ள அச்சேனையினால் ஆகவில்லை.

மீண்டுமொரு சேனை வரவே, மொகலாயர் ஊக்கங் கொண்டு போர்புரிந்தனர். ஐந்நூற்றுவரில் ஒவ்வொருவரும் வீச்சொன்றுக்குப் பத்தெட்டாக மொகலாயரை வெட்டி வீழ்த்தி, முடிவில் வீரசுவர்க்கம் புகுந்தனர். சுசீலா தேவியோ தன் கணவனுடலைத் தாங்கிய வண்ணம் அரண்மனையை விட்டு வெளிக்கிளம்பி, மயானஞ் சேர்ந்து, உடன்கட்டை யேறி, மேலுலகு போயினள்.

அப்பால் சில தினங்கள் வரையில் மொகலாய அரசவை பாழடைந்து கிடந்தது. தன் கணவனுடன் சுசீலை சென்ற (அரண்மனை) வாயிலை அடைத்து விடுமாறு, ஷாஜஹான் கட்டளையிட்டான்.

அமரன் அழிந்தது கேட்டு, மாருவார வீரரில் ஒரு நூற்றுவர் கொதித்தெழுந்தனர். வஞ்சனையாக அமரனை மாய்த்த அர்ச்சுன சிம்மனின் வமிசத்தை வேரறுக்கும் வரையில் உண்டி கொள்வதில்லை என்று சபதம் பூண்டனர்; உடனே ஆக்ரா நகருக்குப் பயணமாகி, அச்சூளுரையின் வண்ணம் காரியம் நடத்திய பின்னரே, அன்னபானங் கொண்டனர்.

மாருவார வீரரின் கடும்பகை கிட்டுமோவென ஷாஜஹான் நெடுநாள் அஞ்சிக் கிடந்தான். அமளி நடந்த காலையில், ஆங்கில்லாமல் பாட்டன் வீடு சென்றிருந்த (அமரன் மைந்தன்) இரவிசிம்மனை அம்மன்னவன் அன்புடன் வரவழைத்தான்; இனிய உரைகூறி, ஆறுதல் அளித்தான்; நாகதுர்க்கம் என்னும் கோட்டையைக் கொடுத்து, முடி சூட்டினன்; அமரசிம்மனை அன்பனைக் கொண்டது போலவே இரவிசிம்மனையும் இனியனைக் கொண்டு, ஏற்றமும் செய்தான்; சதிசெய்த மொகலாயரைத் தண்டித்தான். ஈதிங்ஙனமிருக்க.

ஆக்ரா அரண்மனையின் ஒரு வாயில் வழியே சுசீலை தன் கணவனுடலைத் தாங்கி மயானம் போயினள் அல்லவா? அவ்வாயிலை அடைக்குமாறு ஷாஜஹான் ஆணையிட, அந்த ஆணையை மீறி நடக்க எவரும் துணியவில்லை. அவ்வேந்தர் வேந்தனுக்குப் பின், பற்பலர் சிம்மாசனம் ஏறினர். அன்னாரும் அவ்வாயிலைத் திறக்க மனங்கொள்ளவில்லை. எனவே, நெடுநாள் அவ்வாயில் அடைபட்டுக் கிடந்தது.

வாயிலைத் திறப்பின், அல்லது அதனையணுகின், மாநாகமொன்று சீறி வந்து, உயிரைக் கவருமென ஊரார் சொல்லி நின்றனர். அப்பால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலே ஆக்ரா நகரம் ஆங்கிலேயரின் வசமாயிற்று. அப்போது அம் மாளிகையின் அமைப்பை மாற்றி யமைக்க ஆங்கிலேயர் முற்பட்டனர்.

அம்மாளிகையை இடிக்கவோ, அவ்வாயிலை அணுகவோ, ஹிந்துக்களில் எவரும் முன்வரவில்லை. என் செய்வர் ஆங்கிலேயர்? சின்னாள் சும்மா இருந்தனர். பின்னர், காப்டன் ஸீல் என்பான், "என்ன மூட நம்பிக்கை இது? மாநாகமாவது, சீறிவரவாவது! வீண் கிலி இது. அதிர அடித்தால் ஐயனாரும் இல்லை, பிடாரியும் இல்லை" என்று சொல்லிப் பார்த்தான். அப்போதும், ஒருவர்கூட அவ்வேலைக்கு முன்வரவில்லை.

முடிவில் ஸீல் என்பான் சினந்து, தன் இனத்தாரான ஆங்கில ஸோல்ஜர்களை அழைத்தான்; அருகே நின்றுகொண்டு 'இடியுங்கள்' என்று ஆணையிட்டான். உடனே பெரும் பாம்பொன்று படமெடுத்துச் சீறி வந்தது. ஆங்கில ஸோல்ஜர்கள் அனைவரும் உயிர் வெல்லமென ஓட்டம் பிடித்தனர். ஸீல் என்பானும் கடவுளே கதியெனத் துள்ளியோடினன். பாம்பென்றால் படையும் கலங்கும் என்பது வீண்போமோ?

அமரன் அமரனாகவே இன்றும் ரஜபுதன மக்களின் மனத்தில் மகிமையுடன் வாழ்ந்து வருகின்றான்! வீரம் வாழ்க!

பக்குவம் அடைந்தபின்

தயிரைக்கடைந்து வெண்ணெயை எடுத்தபின் அவ்வெண்ணெயை அதே பாத்திரத்தில் மோருடன் வைக்கக்கூடாது. அப்படி வைத்தால் அதன் ருசி குறைவதுடன், குழைந்தும் போகும். அதை வேறு பாத்திரத்தில் சுத்த ஜலத்தில் வைக்கவேண்டும். அதேபோல, உலக வாழ்க்கையில் இருக்கும்போது ஒருவாறு பக்குவம் அடைந்த ஒருவன், இன்னும் உலக ஜனங்களுடன் கலந்து உலகப் பாசங்களினிடையே இருந்தால், மாசுமறுவுக்கு உள்ளாகக்கூடும். உலகத்தைத் துறந்து விட்டால் மட்டுமே அவன் சுத்தனாகமுடியும்.

—ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர்



குமரி முனையில் கடற்கரையில் கட்டப்பட்டுள்ள மண்டபம்.



குமரியன்னையின் கோயில்.

குமரி முனை

— ஏ. கே. செட்டியார்

‘நீலத் திரைக் கடலோரத்திலே நின்று நித்தம் தவம் செய் குமரியை’த் தரிசிப்பதற்காக, சென்னையிலிருந்து பிரயாண மானேன்.

சென்னையிலிருந்து திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் ரயில் புறப்பட்ட பொழுது, எஞ்ஜினைத் தவிர, பத்து வண்டிகளுக்கு மேல் இணைக்கப் பட்டிருந்தன. 512 மைல் பிரயாணத்துக் கப்பால், திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் திருவனந்தபுரத்தையே அடைந்த பொழுது, எஞ்ஜினைத் தவிர நான்கு வண்டிகள் தான் மிச்சம்.

திருவனந்தபுரம் ரயில்வே ஸ்டேஷனின் மேல் மாடியில் பிரயாணிகள் தங்குவதற்காகச் சிறந்த முறையில் சௌகரியங்கள் செய்திருக்கிறார்கள். ஸ்டேஷனுக்கெதிரே மிக அழகான பார்க் ஒன்று அமைத்திருக்கிறார்கள். என் அருகே நின்ற வேலைக்காரன், அந்தப் ‘பார்க்’ அமைக்கப் பெற்ற வரலாற்றைக் கூறினான்.

பார்க் அமைப்பதற்குமுன் அந்த இடம் மைதானமாக இருந்ததாம். சமஸ்தானக் காங்கிரஸ் காரர்கள் அடிக்கடி இங்கே பொதுக் கூட்டங்கள் நடத்திக் கிளர்ச்சி செய்வார்களாம். இந்தக் காங்கிரஸ் காரர்களின் கூட்டங்களைத் தடுப்பதற்காகவே, அந்த மைதானத்தைச் சர்க்கார் அழகான ‘பார்க்’ ஆக்கி விட்டார்களாம்! இந்த வரலாறு உண்மையாக இருக்குமானால், சமஸ்தானக் காங்கிரஸ் காரர்களுக்கு ஒரு யோசனை கூற விரும்புகிறேன்: “எங்கெந்த இடங்களில் பார்க் அமைக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அந்தந்த இடங்களில் பொதுக் கூட்டங்கள் நடத்த ஆரம்பித்து விடுங்கள்” என்பதுதான் அந்த யோசனை.

திருவனந்தபுரத்தில் தங்கிய இரண்டு நாட்களில் மூன்று இடங்கள் தான் என் மனதைக் கவர்ந்தன: ஸ்ரீ பத்மநாப ஸ்வாமியின் ஆலயம், சித்திர சாலை, மீன் காட்சிச் சாலை (**Aquarium**).

ஆலயத்திறப்புச் சம்பந்தமாக, ரயிலில் பிரயாணம் செய்த ஒரு நம்பூதிரிப் பிராமணரிடம் பேசிக் கொண்டிருந்தேன். “அதைப் பற்றி எங்களுக்கு என்ன கவலை? பிராமணர் தான் எப்பொழுதும் கோவிலுக்குப் போவதேயில்லையே! ஒவ்வொரு பிராமணர் வீட்டிலும் கோயில் உண்டு” என்றார் நம்பூதிரி. திருவாங்கூரில் ஆலயங்களை இந்து மதத்தினர் அனைவருக்கும் திறந்து விட்டது மிகவும் பாராட்டத்தக்க ஒரு நல்ல காரியம். சமஸ்தானத்தில் கிறிஸ்துவர்களின் செல்வாக்கு அதிகமாகாமலிருப்பதற்காகத் தான் ஆலயங்களைத் திறந்து விட்டதாகவும், இது ஓர் அரசியல் தந்திரம் என்றும் சிலர் கூறுகிறார்கள். பாராட்டத்தக்க நல்ல காரியத்தைச் செய்யும் பொழுது, அது எந்த நோக்கத்துடன் செய்யப்பட்டது என்று விவாதிப்பது பெருந்தன்மையாகாது.

உள்ளத்தைக் கவரும் ஓவியங்கள் நிறைந்தது திருவனந்தபுரம் சித்திரசாலை. ராஜா ரவிவர்மாவின் உயிர் ஓவியங்களை அங்கே நாள் முழுதும் பார்த்து அனுபவிக்கலாம். பாடப் புத்தகங்களிலே நாம் பார்த்திருக்கக் கூடிய அன்னமும் தமயந்தியும் என்ற படம் இங்கே என்ன அழகாக இருக்கிறது! சகுந்தலையின் படத்தைக் கண் குளிரப் பார்த்து மகிழலாம். சமீபத்தில் ‘சகுந்தலை’ என்ற சினிமாப் படத்தில் சகுந்தலையை ஹாவாய்த் தேசத்துப் பெண்ணைப் போலச் சிங்காரித்திருந்தார்கள். அந்த டைரக்டரைத் திருவனந்தபுரத்துக்கு அனுப்பி, இந்தப் படத்தைப் பார்க்கும்படி செய்திருந்தால், ஸினிமாவின் ‘சகுந்தலை’ இந்தியச் சகுந்தலையாகவே தோற்றமளித்திருப்பாள்.

கீழ் நாடுகளிலேயே மிகச் சிறந்த மீன் காட்சிச் சாலை திருவனந்தபுரத்தில் உள்ளதுதான் என்று பெருமையடித்துக் கொள்கிறார்கள். அதைப் பார்த்ததும், ‘இது உண்மை; வெறும்

தென்னிந்தியாவின் புஷ்பத் தோட்டம் என்று புகழ்பெற்ற திருவாங்கூர் ராஜ்யத்தின் தென் கோடியிலே உள்ளது கன்யாகுமரி. அங்கே ஒரு வாசகசாலையில் செல்லுவதற்குப் பதிலாய்த் தவறாதலாக ஒரு காப்பி ஓட்டலுக்குள் மகாத்மா காந்தி சென்றுவிட்டாராம். இந்த விசித்திர சம்பவமுள்பட, சுருக்கமாகக் குமரிக் காட்சியை, நண்பர் ஏ. கே. ஸி., இக் கட்டுரையில் வர்ணிக்கிறார்.

திருவனந்தபுரம் ரயில்வே ஸ்டேஷன் வராந்தாவி லிருந்து, எதிரேயுள்ள 'பார்க்'கின் தோற்றம். இதில் குறுக்கே உள்ள கோடுகள் 'V For Victory' அல்ல; தட்டியைச் சுருட்டித் தூக்கிக் கட்டிய கயிறுதான்.

பிரசார மல்ல' என்று நமக்குத் தெரிகிறது.

திருவனந்தபுரத்தில் உள்ள பெண் போலீஸ் படையைப் பற்றிக் கேள்விப்பட்டேன். இந்தப் படையிலுள்ள ஒரு போலீஸ்காரியையாவது காண வேண்டுமென்று எனக்கு ஆவல். ஆனால், முடியவில்லை. முக்கியமான விசேஷங்களுக்கும், வரவேற்பு, அணிவகுப்புப் போன்ற வைபவங்களுக்கும்தான் இந்தப் பெண் போலீஸ்காரிகள் வெளியே வருவார்களாம். ஒன்றுமட்டும் நிச்சயமாகத் தெரிந்தது. இந்தப் போலீஸ்காரிகளைப் பாதுகாக்க, போலீஸ்காரர்கள் யாரும் நியமிக்கப்பட வில்லையாம்.

திருவாங்கூர் நாணயம் என்ன தெரியுமா? 'சக்கரம்' என்பது தான். ஒரு ரூபாய்க்கு 28 சக்கரம். ஒரு சக்கரத்துக்குக் காப்பி சாப்பிடலாம். அரைச் சக்கரத்துக்கு டீ சாப்பிடலாம். சில இடங்களிலே ஒரு சக்கரத்துக்கு ஸினிமாக்கூடப் பார்க்கலாம்!

திருவனந்தபுரத்திலிருந்து இயற்கை எழில் நிறைந்த சாலை வழியாக நாற்பது மைல் தூரத்திலிருக்கிறது நாகர் கோயில். இவ்வூர்க் கோயில் ஒரு காலத்தில் ஜைனர்களின் கையி லிருந்ததாம். நாகர் கோயிலை City of Hospitals (ஆஸ்பத்திரிகள் நிறைந்த நகரம்) என்று கூறலாம். எங்கே நோக்கினாலும் ஆஸ்பத்திரிகள் — அதுவும் கிறிஸ்துவ மிஷன் ஆஸ்பத்திரிகள்!

இந்த நகருக் கருகேயுள்ள புத்தேரி என்னும் சிற்றூரில் தமிழ்க் கவி ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் வசிக்கிறார்கள். பிள்ளையவர்களைச் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. பிள்ளையவர்களின் மாசற்ற அன்பும், அடக்கம் நிறைந்த பேச்சும் மனமுவந்த உபசரிப்பும் என்னுள்ளத்தைக் கவர்ந்தன.

ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளையவர்களின் பாடல்களைத் தமிழ் நாடும் தமிழ் மக்களும் நன்கறிவார்கள். இவருடைய பாட்டுக்களைக் கண்டு யாரும் பயப்பட வேண்டிய தில்லை. குழந்தைகளும் புரிந்துகொள்ளும்படியான எளிய நடையில் பாக்கள் ஆக்குவதிலே ஸ்ரீ பிள்ளையவர்கள் சிறந்து விளங்குகிறார்கள்.

நாகர் கோயிலிலிருந்து பன்னிரண்டு மைல் தூரத்தி லிருக்கிறது கன்யா குமரி. முப்புறமும் கடல் சூழ்ந்த குமரி முனையில் நின்று, எப்பக்கம் திரும்பினும் ஓர் இனிய உணர்ச்சி எழுகிறது. "அதோ, அங்கேயிருக்கும் பாறைக்கு நீந்திச் சென்று, அப் பாறைமீதுதான் சுவாமி விவேகானந்தர் தவம் செய்தார். இங்கே தான் மகாத்மா நீராடினார். பழம்



இதுவும் குமரி மண்டபந்தான். இதில் ஸ்நானத் துறையையும் காணலாம்.

பெருமை கொண்ட எனது தாய் நாட்டின் எல்லை இது" என்று நினைக்கும்பொழுது, எந்த இந்தியன்தான் மனம் பூரிக்காமலிருக்க முடியும்? கன்யா குமரி, மூன்று அல்லது நான்கு ஆயிரம் ஜனத்தொகை கொண்ட சிறு கிராமம். குமரி முனையிலே ஒரு மண்டபம் இருக்கிறது. மண்டபத்திலிருந்து இறங்கினால் சௌகரியமாக நீராடுவதற்கு வசதிகள் இருக்கின்றன.

மண்டபத்திலிருந்து பார்த்தால், சூர்ய உதயமும் சூர்ய அஸ்தமனமும் தெரியும். மண்டபத்துக்கு அருகேயுள்ள கடற்கரையில், பன்னிற வர்ணமுள்ள மணல் வகைகள் காட்சி யளிக்கின்றன. வான வில்லில் எத்தனை வர்ணங்களுண்டோ, அத்தனை வர்ணங்களை இம் மணல் வகைகளில் பார்க்கலாம். கடற்கரையின் ஓரத்தில் திருவாங்கூர் மகாராஜாவின் பங்களா, முசாபரி பங்களா, கேப் ஹோட்டல் முதலிய கட்டிடங்கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இவை தவிர, ஏராளமான சத்திரங்களும் அங்கே இருக்கின்றன.

ஊருக்கு மத்தியிலே விவேகானந்த வாசக சாலை ஒன்று இருக்கிறது. இதை ஸ்ரீ பரமேசுவரம் பிள்ளையும் ஸ்ரீ ராஜனும் வெகு நாளாகத் திறம்பட நடத்தி வருகிறார்கள். கன்யா குமரிக்கு வரும் யாத்ரீகர்கள் கொடுக்கும் அன்பளிப்பான பணத்தைக் கொண்டுதான், இதை அவர்கள் அபிவிருத்தி செய்து வருகிறார்கள். சுவாமி விவேகானந்தரின் பெயரால் இவ்வாசகசாலை அமைக்கப்பெற்றிருப்பதால், இங்கே வருகிற வங்காளிகள் நிறையப் பொருளுதவி செய்கிறார்களாம்.

மகாத்மாஜி ஒரு முறை இவ் வாசக சாலைக்கு விஜயம் செய்தார். அவ்வரலாற்றை, வாசக சாலைக் காரியதரிசி பின் வருமாறு கூறினார்: "காந்திஜியை எங்கள் வாசக சாலைக்கு விஜயம் செய்யும்படி கேட்டுக்கொண்டோம். மறு நாள் காலையில் உலாவச் செல்லும் போது வருவதாக, அவர் வாக்களித்தார். எங்கள் வாசக சாலைக்கு அடுத்த கட்டிடம் 'விவேகானந்தா காப்பி கிளப்'. காந்திஜி தவறுதலாகக் காப்பிக் கிளப்புக்குள் நுழைந்துவிட்டார்! காப்பிக் கிளப் காரருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. 'காந்திஜி ஆட்டுப்பால்தானே சாப்பிடுவார்; காப்பி சாப்பிட மாட்டாரே!' என்று யோசிக்க ஆரம்பித்தார். அதற்குள்ளாக, காந்திஜி காப்பி கிளப்பை விட்டு வெளியே வந்து, வாசக சாலையை அடைந்தார்."

விவேகானந்த வாசக சாலைக்கு யார் போனாலும் இந்த வரலாற்றை அந்த வாசகசாலையார் கூறுவார்கள்.

அறியாமை விஷம்

காமாலை நோயாளிக்குத் தேன் கசக்கும். வெறி நாய் கடித்தவர்களுக்கு நீரைக் கண்டால் பயம். சிறு குழந்தைகள் கேவலம் ஒரு பந்தை வெகு அழகென்று நினைப்பார்கள். பித்த விஷத்தைக் காட்டிலும், நாய் கடித்த விஷத்தைக் காட்டிலும், அறியாமை என்னும் விஷத்தின் வேகம் குறைவா? அதன் காரணத்தினால் தானே மனிதன் தவறான எண்ணம் கொள்கிறான்? நான் அவனைக் கண்டு சினம் கொள்ளலாமா?

—மார்க்கஸ் ஔரேலியஸ்.

* * *

பூச்சிகளைத் தின்னும் பூ



இந்த அதிசயப் பூ, தன்மீது வந்து உட்காரும் ஈ முதலிய ஜந்துக்களைத் தின்று விடுகிறது! தாவர வர்க்கத்திலேயும் இப்படி ஒரு மாமிச பட்சணி!

குறுக்கே புகுந்த ஜப்பான்

[கே. அருணுசலம்]

ஏகாதிபத்திய வெறி பிடித்த ஜப்பான் எப்போதுமே இப்படித்தான். சமயம் பார்த்து ஆக்ரமணம் செய்வது அதன் வழக்கம். இப்போது, ஐரோப்பிய யுத்தத்தை உலக யுத்தமாக்கிய பொறுப்பு அதைச் சேர்ந்ததாகும். இந்த ஜப்பானின் யோக்கியதை இந்தக் கட்டுரையில் விளக்கமாகும்.

புலி வருகிறது, வருகிறது' என்ற கதை மாதிரி, ஜப்பானும் இப்போது உலக யுத்தத்தில் புகுந்து விட்டது. கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடிய நாடு ஜப்பான் அல்ல. பிரிட்டன் அல்லது அமெரிக்காவின் கவனம் வேறு எதிலேனும் இருந்தால்போதும்; உடனே தனது கிழக்கு ஆசிய விஸ்தரிப்பு வேலையைத் தீவிரமாய் நடத்த ஜப்பான் முற்படுவது எப்போதுமே வழக்கம். 1938-ஆம் வருஷம் அக்டோபர் மாதத்தில், சேம்பர்லேன், வேறு வழியின்றி மூனிக் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். தட்சணமே கான்டனை ஜப்பான் கைப்பற்றியது. 1939-ஆம் ஹூ மார்ச்சுமாதத்தில் செக்கோ-ஸ்லோவேகியா பூராவையும் ஜெர்மனி விழுங்கியபோது, 'என் பங்கு சொத்தையா?' என்று, சிங்கப்பூருக்குச் சமீபத்திலுள்ள **ஸ்பிராட்லி** தீவுகளை ஜப்பான் கைப்பற்றிக்கொண்டது. சென்ற மகாயுத்தத்தின் அந்திய காலத்தில் நேச நாடுகளின் பக்கம் சேர்ந்து, **தென் பஸிபிக்கில் ஜெர்மன் பிரதேசங்களை** யெல்லாம் ஜப்பான் கைப்பற்றிக் கொண்டது. எனவே, வழக்கத்தை அனுசரித்து, இப்பொழுதும் அந்நாடு, அதேமாதிரி வேலையில் இறங்கியிருக்கிறது. **சீனவை** நான்கு வருஷ யுத்தத்துக்குப் பின்னும் தன்னால் ஜயிக்க முடியாதிருக்கையில் கூட, இதுதான் தருணமென்று மகா துணிச்சலுடன் போரில் ஜப்பான் இறங்கியதில் ஆச்சர்யமில்லை.

தொண்ணூறு வருஷங்களுக்கு முன் இருக்குமிடம் தெரியாமல் இருந்த இந்நாடு, இந்தக் குறைந்த காலத்தில் இவ்வளவு தூரத்துக்கு, இரு பெரிய வல்லரசுகளைச் சவாலுக்கு இழுக்கும் நிலைமைக்கு வந்த காரணங்கள் என்ன?

ஜப்பான் என்பது ஒரே பரப்பான நாடல்ல. நாலாயிரத்தி எழுபத்திரண்டு தீவுகளைக் கொண்ட தேசம் ஜப்பான். அதில் இப்பொழுது உள்ளவர்கள், கலப்பு ரத்தமுடையவர்கள் என்று ஆராய்ச்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள். ஆரிய-மங்கோலியச் சேர்க்கையின் விளைவே இவர்கள் என்று சிலரும், மங்கோலிய-மலாய்ச் சேர்க்கையின் விளைவே இவர்கள் என்று மற்றும் சிலரும் கூறுகிறார்கள். புத்திக் கூர்மையிலும் உடல் வலிமையிலும் ஒன்றுக்கொன்று பின் வாங்காத இரு இனத்தினரின் கலப்பு ஸந்ததிகள் சாமர்த்திய சாலிகளாய்த்தான் விளங்குவார்கள். கல்வி, நாகரிகம், விஞ்ஞானம், கலாசாரம், போர்த்திறமை முதலிய எதுவாக இருந்தாலும் சரி, அதைப் பிறரிடமிருந்து உடனுக்குடனே கிரஹித்துக் கொள்வதிலும், ஆனால் அதே சமயத்தில் தமக்குத் தெரிந்ததைக் கைவிடாமல் இருப்பதிலும், ஜப்பானியர் தலை சிறந்தவர்கள்.

பதினாறுவது நூற்றாண்டில் முதன் முதலாக ஐரோப்பியர்கள் ஜப்பானில் நுழைய ஆரம்பித்தார்கள். ஆனால், அவர்களுடைய செயல்களால் தங்கள் நாட்டுக்கு ஆபத்து ஏற்படுமென்பதை உணர்ந்த ஜப்பானியச் சக்கிரவர்த்தி, வெளி நாடுகளுக்கும் ஜப்பானுக்கும் இருந்த உறவைத் திடீரெனக் கத்தரித்துவிட்டார். அதிலிருந்து சுமார் இருநூறு வருஷகாலம் வரை வெளித் தொடர்பே ஜப்பானுக்கு இல்லாமலிருந்தது. 1853-ஆம் ஹூ அமெரிக்கப் பிரஸிடென்ட் பில்மோர், ஜப்பானுடன் வர்த்தகத் தொடர்பைப் பலாத்காரமாகவாவது ஸ்தாபிப்பதென்று உறுதிகொண்டு, கடற்படைத் தளபதி பெரி என்பவரை யுத்தக் கப்பல்களுடன் ஜப்பானுக்கு அனுப்பினர். அதனால், ஜப்பான் வழிக்கு வந்தது. அதிலிருந்து அந்நிய நாடுகளுடன் வர்த்தக உறவுகள் ஜப்பானுக்கு ஏற்பட்டன.

ஜப்பானியர், பிரிட்டிஷ் நிபுணர்களைக் கொண்டு தங்கள் கடற்படையை அமைத்துக் கொண்டார்கள். பிரெஞ்சு நிபுணர்களைக் கொண்டு தங்கள் ராணுவத்தை நவீன முறையில் திருத்திக் கொண்டார்கள். கல்வி, விவசாயம் ஆகிய இரண்டிலும், அமெரிக்க முறைகளைப் பின்பற்றினார்கள். ஜெர்மன்



ஜப்பான் பார்லிமெண்டான டையட் கட்டிடம். 2 கோடியே 6 லட்சம் என் செலவில் இது கட்டப்பட்டுள்ளதாம். வேலை தொடங்கி, 19-வருஷமாயிற்றும் இதைக் கட்டி முடிக்க.

டாக்டர்களின் மூலம் வைத்தியத்தைக் கற்றுக் கொண்டார்கள். தொழிற்சாலைகள் ஏராளமாகத் தோன்றின. 'நாட்டின் பாதுகாப்பை உத்தேசித்து' கொரியா மீது 1894-ஆம் ௵ படையெடுத்து அதை ஜப்பானியர் கைப்பற்றினார்கள். ரஷ்ய ஜாரின் வசம், கொரியா போகாமலிருக்கவே, ஜப்பான் இந்த நடவடிக்கையை எடுக்க வேண்டியதாயிருந்ததாம். எனவே, கொரியாவை, சீனா இழந்தது.

ரஷ்யாவின் ஏகாதிபத்திய ஆசை, ஆசியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு ஓர் ஆபத்தாக விளங்கியது. இந்தியாவை ஜார் படையெடுக்கக் கூடும் என்றும் பிரிட்டிஷ்காரர் பயந்தார்கள். ஜப்பானுக்கும் ரஷ்யக் கொள்கை பெரும் ஆபத்தாக இருந்தது. ஆகையால், ரஷ்யாவுக்கு விரோதமாக, பிரிட்டிஷ்-ஜப்பான் ஐக்கிய முன்னணி ஒன்று ஏற்பட்டது. 1902-ஆம் ௵ ஓர் ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. ஆசியாவில் ஜப்பானுக்கோ அல்லது பிரிட்டனுக்கோ சொந்தமாக உள்ள எந்தப் பிரதேசத்தையேனும் வேறு நாடு எதுவாவது வந்து தாக்கினால், உடனே பிரிட்டனும் ஜப்பானும் கூட்டாகச் சேர்ந்து எதிரியைத் தாக்கவேண்டும்; உதாரணமாக, இந்தியாவை ரஷ்யா தாக்கினால், இந்தியாவைப் பாதுகாக்க ஜப்பான் இரண்டரை லட்சம் துருப்புகளை அனுப்பவேண்டும்—ஒப்பந்தத்தின் முக்கிய ஷரத்து இதுதான்.

பின்னால், 'சீனா, கொரியா ஆகிய இரண்டின் சுதந்திரத்துக்கும் உத்தரவாதமளித்து, மஞ்சூரியாவிலுள்ள ரஷ்ய நலன்களையும், கொரியாவிலுள்ள ஜப்பானிய நலன்களையும் பாதுகாக்கிற ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளலாம்' என்று, ரஷ்யாவுக்கு ஜப்பான் ஒரு யோசனை கூறியது. இதை ரஷ்யா நிராகரித்தது. அதன்மேல், ஜப்பான் 1903-ஆம் ௵ ருஷியாமீது போர் தொடுத்து, உலகமே பிரமிக்கும்படி பெரும் வெற்றி அடைந்தது.

ஆனால், 1903-ஆம் ௵ இருந்த ருஷியா வேறு; இப்பொழுதுள்ள ருஷியா வேறு. ஜெர்மானியருக்குச் சரிசமமாக நின்று யுத்தம் செய்கிற ருஷியரை, இக்காலத்தில் தோற்கடிப்பது முடியாத காரியம் என்பதை உணர்ந்தே, இப்பொழுது ஸைபீரியாவில் கவனம் செலுத்தாமல், பிலிப்பைன், மலாய்ப் பக்கம் ஜப்பான் திரும்பியிருக்கிறது. ஜப்பானியருக்கு ஆள் பஞ்சம் கிடையாது. ஜப்பானில் மாத்திரம் ஏழேகால் கோடி பேர் இருக்கிறார்கள். ஜப்பானிய சாம்ராஜ்யத்தில் பதினைந்து லட்சம் ஜப்பானியர் இருக்கிறார்கள். ஜப்பானியரது ஜனத்தொகை, வருஷம் ஒன்றுக்கு 10 லட்சம் விகிதம் அதிகரித்து வருகிறது.

நவநாகரிகச் சிங்கப்பூரில் மிக முக்கியமான வியாபார மத்திய ஸ்தலம். ரோட்டின் இருபுறமும் வரிசை வரிசையாய்க் கார்கள் நிற்கும் அழகிய காட்சியையும் காணலாம். இந்த அரிய நகரிலும் துராக்கிரமண ஜப்பான் தன் கை வரிசையைக் காட்ட ஆரம்பித்துள்ளதாம்.

நாஜிகளின் மின்னல் யுத்த முறையைக் கையாளும் ஜப்பானியர், நாஜிகளைப் போலவே முதல் சில வாரங்களில் வெற்றிகள் அடைந்து வரலாம். இதில் வியப்பொன்றுமில்லை. ஆனால், ஏற்கனவே நான்கு வருஷகாலமாகப் பக்கத்து நாடொன்றுடன் யுத்தம் செய்து வரும் ஒரு தேசம், இனி இன்னும் மூன்று புதிய நாடுகளுடனும் (அமெரிக்கா, பிரிட்டன், டச்சுக் கிழக்கு இந்தியத் தீவுகள்) போர் தொடுத்து, எத்தனை நாளைக்கு, பொருளாதார அமைப்பு சீர்குலையாமல், போரிட முடியுமென்பதைக் கவனிக்க வேண்டும்.

சமாதான காலத்தில் ஜப்பான் தனக்கு வேண்டிய உருக்கில் 89 சதவிகிதத்தைத் தானே உற்பத்தி செய்து கொள்ளுகிறது. நிலக்கரியில் தனக்கு வேண்டிய அளவில் 91 சதவிகிதத்தைத் தானே உற்பத்தி செய்து கொள்ளுகிறது. சாகலீன் தீவில் தனக்குச் சொந்தமான பாதிப் பகுதியில் (பாக்கிப் பாதி ருஷியாவுக்குச் சொந்தம்) 2,800,000 பீப்பாய் எண்ணெயை ஜப்பான் உற்பத்தி செய்கிறது. தனது நாட்டிலேயே 1,630,000 பீப்பாய் எண்ணெயை உற்பத்தி செய்கிறது. ஆனால், சமாதான காலத்தில் கூட, ஜப்பானுக்கு 12,858,000 பீப்பாய் எண்ணெய் வேண்டும். எனவே, யுத்த காலத்துக்கு அதன் சொந்த எண்ணெய் உற்பத்தி போதாது. இனி, அமெரிக்காவிலிருந்து, எண்ணெய்க்குப் பதிலாகக் குண்டு வீச்சுக்களையே எதிர்பார்க்க வேண்டியிருப்பதால், டச்சுக் கிழக்கு இந்தியத் தீவுகளிலுள்ள எண்ணெயைப் பெற, அந்தத் தீவுகளை ஜப்பான் பிடிக்க முயலலாம். ஆதலால், ஜப்பானை எதிர் நோக்கியுள்ள வேலை சுலபமானதல்ல.

"மேதையிலும், ஆத்மீகத் துறையிலும் உலகுக்கு வழிகாட்டுவதே, ஜப்பான் மேற்கொண்டுள்ள கைங்கர்யம். புதிய அருள்ஜோதி ஜப்பானிலிருந்து கிளம்பும்" என்று ஜப்பானிய மாஜி - பிரதம மந்திரி மட்ஸுவோகா, சென்ற வருஷம் சொன்னார். அந்த 'ஜோதி,' சிங்கப்பூரில் வெடிக் குண்டுகளிலிருந்து கிளம்புவதைத்தான் இப்போது காண்கிறோம். என்ன விபரீதம்!

நவீன திரைப் படம்

★

மகத்தான ஆரம்ப விழா

டிசம்பர் மீ

24வ

வனமோஹினி

தமிழ்

- கோயம்புத்தூர்
- சேலம்
- திருச்சிராப்பள்ளி
- திருப்பாப்புலியூர்
- திருநெல்வேலி
- பாண்டிச்சேரி
- பாலக்காடு

முதலிய இடங்களில்

இப்புதிய பட வெற்றி அதன் தத்ரூபத்திலும், கவர்ச்சியிலும் திரைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. பூராவும் வித்தியாசமானது............சினிமா பார்ப்போர் ஒவ்வொருவருக்கும் பூரா திருப்தி அளிப்பது.

டைரக்ஷன் : பக்வான்

வனமோஹினி படத்தின் பாடல்களை எச். எம். வி. ரிகார்டுகளில் கேளுங்கள்.

பூரா உரிமையாளர்கள் :

ஸவுண்ட் பிக்சர்ஸ் ஸர்க்யூட்

2/163, மவுண்ட் ரோடு :: மதராஸ்

சென்னை நகரம், தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு, சித்தூர், பாண்டிச்சேரி முதலிய இடங்களுக்கு

உரிமையாளர்கள் :

விஜயமாருதி பிக்சர்ஸ்,
மதராஸ்

பெங்களூர் கண்டோன்மென்ட் உள்பட மைசூர் சமஸ்தானத்திற்கும், கூர்க்குக்கும்

விநியோக உரிமையாளர்கள் :

ஹாஸ்டி பிக்சர்ஸ்,
பெங்களூர் கண்டோன்மென்ட்

திருவனந்தபுரம், கொச்சின் சமஸ்தானங்களுக்கும், பிரிட்டிஷ் மலபாருக்கும்

விநியோகிப்பவர்கள் :

பாரமௌண்ட் பிக்சர்ஸ்,
கொச்சின்

அழகிய, நவீன முறையிலுள்ள தங்க வெள்ளி
சாமான்கள் உங்களுக்கு வேண்டுமோ?

வாருங்கள்! வந்து பாருங்கள்!

ராதா ஜ்வல்லரி ஷோ ரூம்



குறிப்பிடத் தக்கவை, உத்திரவாத முள்ளவை,
உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவை, நீண்டகாலம் உழைப்பவை

ஆண்களுக்கு:—தங்க மோதிரங்கள், கல்யாண மோதிரங்கள், எனமல் மோதிரங்கள், நவீன கழுத்துச் சங்கிலிகள் பித்தான் கற்கள் முதலியன.

பெண்களுக்கு:—நவீன நெக்லஸ்கள், புதுமாதிரி தங்கச் சங்கிலிகள், ஒட்டியாணங்கள், வங்கி, வகைவகையான எனமல் காப்புகள் முதலியன.

வெள்ளிச் சாமான்கள்:—டம்ளர்கள், டீ செட்டுகள், விளையாட்டுச் சாமான்கள், ஜாடிகள், அழகிய பட்டைக் கோலுசுகள், எனமல் கொடுத்த பலவகை சாமான்கள்.

இன்னும் எது வேண்டும்? தயாராயிருக்கின்றன. ஆர்டர்களுக்கும் செய்து தரப்படும்.

டெலி { போன் 37.
கிராம் 'ராதா'

G. ராதாகிருஷ்ண செட்டி
ஜ்வல்லர், பெரிய கடைத்தெரு, திருச்சி



தேள் வேட்டை

[வி. ஸரோஜினி]

வீட்டிலே வாசலிலே நடக்கும் சில நித்திய நிகழ்ச்சிகளை அழகான முறையில் வர்ணிப்பது நவீனச் சிறுகதைகளில் ஒரு ரகம். ராவ் சாகேப் ஸ்ரீ எஸ். வையாபுரிப் பிள்ளையின் குமாரி ஸரோஜினி அத்தகைய தொரு கதையை இங்கே வரைந்து தந்திருக்கிறார்.

ஒரு நாள் மாலை நேரம். மன்னி காப்பி கலந்து கொண்டிருந்தாள். அண்ணா வெளியே புறப்படுவதற்குத் தயாராக இருந்தான். இவன் எங்கே போகப் போகிறான் என்று எனக்குத் தெரியும். இருந்தாலும், சீக்கிரம் காப்பி கலந்து கொடுக்கும்படி மன்னியை அவன் அதட்டியதும் 4 மணிக்குப் போகவேண்டிய இடத்துக்கு 3-45 ஆகியும் போகாமல் காப்பிக்காகக் காத்துக் கொண்டிருந்ததும் எனக்குப் பிடிக்கவில்லை. மெதுவாக, "அண்ணா! டீ பார்ட்டிக்குத்தான் போறயே? காப்பி......" என்பதற்குள், "சீ! தடியா! வாயை மூடு' என்று வந்தது பதில். இது நான் எதிர் பார்த்ததுதான். ஆனாலும், என்னால் அதைக் கேட்காம லிருக்க முடிய வில்லை.

இதற்குள் அவன் தடபுடலாக அலமாரியைத் திறந்து கோட்டுகளைப் புரட்டிக் கொண்டே, "அந்தக் கறுப்புக் கோட்டு எங்கேடி, கோமு?" என்று சற்றுக்கோபத்துடன் கேட்டான். "கறுப்புக் கோட்டா? அதை நான் எதற்கு எடுக்கிறேன்" என்றாள் மன்னி. இந்தச் சமயத்தில் அண்ணாவுக்கு ஆற்றிய காப்பியை டம்ளரில் அவள் விட்டுக் கொண்டிருந்தாள். அண்ணா மறுபடியும் "கோமு" என்று அலறவே, காப்பியைக் கீழே வைத்துவிட்டு எழுந்துபோனாள். இந்த மாதிரி சந்தர்ப்பத்தை ஆவலோடு எதிர்பார்த்திருந்த நான் டம்ளரைக் காலி பண்ணக் கையில் எடுத்தேன். அதே சமயத்தில் அண்ணாவின் குரல் "அதோ பாரடி, தேள்!" என்றது. என்னையறியாமல் என் தேகம் நடுங்கினதில், டம்ளர் கீழே விழுந்து காப்பியும் கொட்டி விட்டது. இதுமாத்திரமா! என் கால்கள் என்னை ஒரு நொடியில் வாசலில் கொண்டு போய் விட்டுவிட்டன.

ரேழியில் சாய்மான நாற்காலியில் படுத்திருந்த அப்பா, "என்னடா, அது?" என்று என்னைக் கேட்டார். நான் என்ன சொல்வதென்று தெரியாமல் விழித்துக் கொண்டு நிற்கும் போதே மன்னியின் குரல் "ஒன்றுமில்லை. அலமாரியில் கோட்டுகளுக்கிடையிலே தேள்" என்றது. மன்னியை நன்றியறிதலோடு பார்த்தேன். அவளும் என்னிடம் ஏதோ சொல்ல வாயெடுத்தவள், 'கோமு! என்னடி செய்யறே? ஏதாவது கட்டை எடுத்துக்கொண்டு வாயேன்!' என்று அண்ணா அதட்டியதும், கட்டை எடுக்கப் போய்விட்டாள்.

"இந்தாருங்கள்! ஆமாம், கோட்டுகளின் நடுவிலேன்னா இருக்கு! எப்படி அடிக்கப் போறேள்?"

"அதற்குத் தாண்டி! சொல்லறேன். அந்த வாக்கிங் ஸ்டிக்கை எடு"

"உம். இந்தாருங்கள்."

"நான் இந்தக் கொம்பால் கோட்டுகளைக் கீழே தள்ளப் போறேன். நீ கட்டையை வச்சிண்டு அந்தப் பக்கம் நில். நோக்கு அடிக்க வசதியா யிருக்கும்.

"உங்களுக்குத் தேள் அடிக்கப் பயமாக்கும்! அப்படிச் சொல்லுங்களேன்!"

அண்ணா அவளை ஒரு முழி முழித்துப் பார்த்துவிட்டு, கோட்டுகள் நாலைந்தைச் சரேலென்று கீழே தள்ளினான். மன்னி "அதோ! அதோ ஓடறது தேள்!" என்று சொல்லிக்கொண்டே, கட்டையை ஓங்கினாள். ஓங்கின கை அப்படியே நிலைத்துவிட்டது. தேளும் சுவர் ஓரமாய்ப் போய் அசையாமல் இருந்தது. நானும் பயந்து வெளியே நின்றவன் வேடிக்கை பார்க்க உள்ளே வந்து பதுங்கி நின்றேன்.

......வேஷ்டியை முழங்காலுக்குமேல் கச்சம்போட்டுக் கட்டிக்கொண்டு......

"இப்படிக் கொடுடி அந்தக் கட்டையை!" என்று அண்ணா வெடுக்கென்று மன்னி கையிலிருந்த கட்டையைப் பிடுங்கி ஓங்கினான். நான் கண்களை மூடிக் கொண்டேன். ஆனால், தேள் அடித்த சப்தம் கேட்கவில்லையே என்று சந்தேகித்துக் கொஞ்ச நேரத்துக்கப்புறம் மறுபடியும் கண்களைத் திறந்து பார்த்தபோது, நான் கண்ட காட்சியை என்னவென்று சொல்வது! அண்ணா வேஷ்டியை முழங்காலுக்குமேல் தூக்கிக் கச்சம் போட்டுக் கட்டிக் கொண்டு, தேள் அடிக்க இடைஞ்சலாயிருந்த பெல்ட், டை முதலியவைகளை அவிழ்த்து வீசிவிட்டு, அலமாரிக்கு இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் ஓடி ஓடிச் 'சிலம்பம்' பழகிக் கொண்டிருந்தான். மன்னிக்கும் எனக்கும் சிரிப்பு வந்தது. அண்ணா கையில் கட்டையிருந்ததால் சிரிப்பை அடக்கிக் கொண்டோம்.

பாவம்! உயிர்வதை செய்வதென்றால், அண்ணாவுக்கு மனம் வராது. பயம் என்று நான் சொல்லுவேன். ஆனால், அவன் காதில் விழுந்தால், நான் மேலே சொன்னதற்கு முரணாக என்னைக் கொன்று விடுவான்.

எங்கள் மௌனத்தைக் கலைக்க, அப்பா ரேழியிலிருந்தே "அடே கிட்டு! ஒரு செருப்பு எடுத்திண்டு வாடா!" என்று சொல்லிக் கொண்டே எழுந்தார். செருப்பை அப்பாவிடம் நான் நீட்டினேன். அவர் அதை வாங்கிக்கொண்டு 'விறு, விறு' என்று அண்ணாவின் உள்ளுக்குள் நுழைந்து ஒரு கணம் அசைவற்று நின்றார். அவனது அலங்கோலம் தான் அவரை அப்படி நிற்கச் செய்திருக்கவேண்டும். "ராஜு! சற்று நகர்ந்துக்கோ" என்று சொல்லிக் கொண்டே, தேளின் சமீபம் போய்ச் செருப்பை ஓங்கினார். தேள் அப்பாவையும் ஏமாற்ற எண்ணியதுபோல், அலமாரிக்குப் பின் பக்கம் சுவர் ஓரத்தில் விர் என்று ஓடிவிட்டது.

அப்பாவும் அண்ணாவும் அலமாரியை நகர்த்தத் தீர்மானித்தார்கள். மன்னி தரையில் முகத்தை வைத்துத் தேள் ஓடிவிடாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்பா பிடித்திருந்த பக்கம் பீரோ கொஞ்சம் நகர்ந்தது. அண்ணாவும் தான் பிடித்திருந்த பக்கத்தைத் தூக்கி நகர்த்த எத்தனிக்கையில், அவன் காலில் ஏதோ பட, அவன் பீரோவை விட்டு விட்டு உயரத்தில் எழும்பிக் குதித்தான்! தேள் நகரவேயில்லை. பீரோவுக்கு அடியில் வைத்திருந்த மரச்சக்கை எகிறி அவன் கால்மேல் விழுந்திருக்க வேண்டும். மறுபடியும் அண்ணா முகத்தில் ஏற்பட்ட கோபத்தணல் வீசும் பார்வை எங்கள் சிரிப்பை அடக்கிக் கொள்ளச் செய்தது. எங்கள் கண்கள் அண்ணா முகத்திலேயே லயித்துவிட்டன. இதற்குள் 'டப்' என்ற சப்தம் கேட்டுத் திரும்பினோம்.

அப்பா செருப்பால் தேளை அடித்துவிட்டார்!

மணி 4-40. அண்ணா கடிகாரத்தைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டே, சாய்மான நாற்காலியில் சாய்ந்தான். மன்னி தேளை அப்புறப் படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தாள். அப்பா 'வாக்கிங்' கிளம்பிவிட்டார். எனக்கு மறுபடியும் காப்பி ஞாபகம் வந்தது. சமையல் அறைக்கு மன்னி போனால் என் 'குட்டு' வெளியாகிவிடும். என்ன செய்வதென்று யோசித்தேன். ஒரு யுக்தி தோன்றிற்று. சமையலறைக்குப் போய் பில்டரில் கலந்து வைத்திருந்த காப்பியையும் சரேலென்று கீழே கொட்டி விட்டு, ஊது குழாயைத் தூக்கி வீசினேன். மன்னி அதற்குள் "என்னடா, கலாட்டா பண்றே?" என்று இரைந்தாள். "இல்லை மன்னி. நீ அவசரத்தில் காப்பியை மூடி வைக்காமல் போனையே! பூனை வந்து பில்டரிலிருந்த காப்பியைக் கொட்டிக் குடித்துக்கொண்டிருந்தது. நான் ஊது குழாயை எடுத்து அதைக் குறி பார்த்து வீசினேன். அது ஓடின வேகத்தில் நீ அண்ணாவுக்குக் கலந்து வைத்திருந்த காப்பியையும் இடறிவிட்டு ஓடிவிட்டது" என்று ஒரே போடாய்ப் போட்டேன். என் மனதிலிருந்த பாரம் நீங்கிற்று.

என் சிநேகிதன் வேணுவும் வந்தான். "அடேய் கிட்டு, விளையாட வரையா, இல்லையா? அதென்னடா காப்பியெல்லாம் நீயா இப்படிக் கொட்டி விட்டாய்?" என்று கூட இருந்தவன் போல் அவன் என்னைக் கேட்டான். அவனது கையைப் பிடித்துக் 'கர கர' வென்று வாசலுக்கு இழுத்துக் கொண்டுவந்து, உட்கார வைத்து, "அடேய்! எங்கண்ணா ராஜு என்கிற ராஜாவும், மன்னி என்கிற மந்திரியும் வேட்டைக்குப் போனார்கள். காட்டுக்கு இல்லேடா. அண்ணா அறைக்குத்தான். அம்பு வில்லு இவைகளுக்குப் பதிலாக, அவர்கள் கையில் விறகுக் கட்டையும் வாக்கிங் ஸ்டிக்கும் வைத்திருந்தார்கள். அங்கே சிங்கமோ புலியோ வரவில்லை. ஒரு தேள் வந்தது!.........அடே வேணு! கொஞ்சம் பொறு, அதோ மன்னி வருகிறாள். சற்று நேரத்துக்கு முன் வாங்கியிருக்க வேண்டிய குட்டை இப்பொழுது வாங்க வழி வைக்காதே. வா வெளியே போய் விவரமாய்ச் சொல்லுகிறேன்" என்று சொல்லிய வண்ணம், அவனை அழைத்துக் கொண்டு வாசலில் கிளம்பினேன்.

அண்ணா வழியில் எதிர்ப்படுகிறானா என்று பார்த்துக் கொண்டே, வேணுவுக்கு வேட்டையைப் பற்றி விஸ்தரித்துச் சொன்னேன். ஆனால், காப்பி சமாசாரம் மத்திரம் நடுவில் வரவேயில்லை.

கவிஞரின் சாதுர்யம்

இங்கிலாந்தில் இரண்டாம் சார்லஸ் அரசு புரிந்த காலத்தில், எட்மண்டு வாலர் என்ற ஒரு கவிஞர் இருந்தார். அரசரைப் பற்றி அவர் ஒரு கவி எழுதினார். இரண்டாம் சார்லஸுக்கு முன், சர்வாதிகாரி போல் அரசாண்ட கிராம்வெல் என்ற வீரனைப் பற்றியும் அவர் மற்றொரு கவி எழுதினார்.

அரசர்: நீர் என்னைப் பற்றி எழுதிய கவியைவிட, கிராம்வெல்லைப் பற்றி எழுதிய கவி அதிக ஜோராயிருக்கிறதே! ஏன்?

கவிஞர்: (சிறிதும் தயங்காமல்) அரசே! உண்மையைவிடக் கற்பனைதான் புலவர்களுக்கு அதிக ஜோராய் எழுத வரும் என்று தங்களுக்குத் தெரியாதா?

குழந்தைகள் அறிவு:

துயரக் குழந்தைகள்

[லியோ டால்ஸ்டாய்]

ஒரு சீமாட்டியும் அவளுடைய குழந்தைகளும் தோட்டத்தில் உலாத்திக் கொண்டிருக்கிறார்கள். (பையன் ஹைஸ்கூல் மாணவன்; வயது 14. தனிச்கா என்ற மகளுக்கு வயது 5.) குடியானவக் கிழவி ஒருத்தி, அவர்களின் கிட்ட வருகிறாள்.

சீமாட்டி: மாட்ரீனா! என்ன விஷயம்?

கிழவி: அம்மா! நான் உன்னிடம் தான் வந்தேன்.........

சீமாட்டி: சரிதான்: என்ன வேண்டும்?

கிழவி: தாயே! உன்னிடம் சொல்ல வெட்கமாயிருக்கிறது. இருந்தாலும் என்ன செய்வேன்? உன்னுடைய *ஞானப் பெண்ணுக்கு மற்றொரு குழந்தை பிறந்திருக்கிறது. அதற்கும் ஞானத் தாயாக இருக்கும்படி உன்னை வேண்டிக் கொள்ளவே, என்னை அவள் உன்னிடம் அனுப்பினாள்.

சீமாட்டி: அப்படியா? ஸமீபத்தில் தானே அவளுக்கு முன் குழந்தை பிறந்தது?

கிழவி: ஆமாம். கோடையிலிருந்து ஒரு வருஷமாகிறது அது பிறந்து.

சீமாட்டி: உனக்கு மொத்தம் எத்தனை பேரன் பேத்திகள் இருக்கிறார்கள்?

கிழவி: எண்ணிக்கையிலடங்க மாட்டார்கள். அவர்களில் பாதிப் பேரை யாராவது தானம் வாங்கிக் கொண்டால் தேவலை. அத்தனையும் வாண்டுகள் — ஒன்றைவிட ஒன்று சின்னது. துரதிர்ஷ்டம்!

சீமாட்டி: உன் பெண்ணுக்கு இப்போது எத்தனை குழந்தைகள் இருக்கின்றன?

கிழவி: இது ஏழாவது, தாயே! அத்தனையும் உயிரோடிருக்கின்றன. கடவுள் தான் சிலதைக் கொண்டுபோகக் கூடாதா?

சீமாட்டி: என்ன சொல்லுகிறாய்? நீ இப்படிப் பேசலாமா?

கிழவி: ஆனால், என்ன செய்வது? நாங்களோ பரம தரித்திரம். பாவம் செய்து படுகுழியில் விழத் தயாராயிருக்கிறோம்: எங்களிடம் கருணை காட்டு, தாயே! குழந்தையின் ஞானத் தாயாக நீதான் இருக்கவேண்டும். இல்லையானால், —கடவுள் சாட்சியாகச் சொல்லுகிறேன் — பாதிரிக்குக் கொடுக்க எங்களிடம் பணம் கிடையாது; உணவுக்குப் போதிய ரொட்டி கூட எங்களிடம் இல்லை. என் மருமகப் பிள்ளை, உத்தியோக விஷயமாய் வெளியே போயிருக்கிறார். பெண்களாகிய நாங்கள் தான் தனியே வீட்டிலிருக்கிறோம். நானோ கிழவி. அவளோ குழந்தைக்காரியாக இருக்கிறாள்; அல்லது புதிதாய் ஒன்றைப் பெற்று விடுகிறாள். அவள் என்ன வேலை செய்ய முடியும்? நான் தான் சகல வேலையையும் செய்ய வேண்டியிருக்கிறது—என்னைச் சுற்றிலும் பசிபசி யென்று அத்தனை கும்பலும் கத்துகின்றன......

சீமாட்டி: உண்மையாய் அவளுக்கு ஏழு குழந்தைகள் இருக்கின்றனவா?

கிழவி: சத்யமாய் ஏழு குழந்தைகள்! மூத்த குழந்தை இப்போதுதான் கொஞ்சம் உதவிசெய்யத் தொடங்கியிருக்கிறது: மற்றவையெல்லாம் ரொம்ப வாண்டுகள்.

சீமாட்டி: பின் ஏன் அவள் இத்தனை குழந்தைகளைப் பெற்றாள்?

கிழவி: வேறே என்ன செய்வதென்கிறீர்கள்? அவர் ஸமீபப் பட்டணத்தில் வசிக்கிறார். ரஜா நாளில் ஊருக்கு வருகிறார்......... இருவரும் சிறிசுகள். அவர் எங்கேயாவது தூர தேசத்துக்குப் போய்விடக்கூடாதா!

சீமாட்டி: வாஸ்தவம்! குழந்தை இல்லையே என்றோ, இறந்ததே என்றோ சிலர் அழுகிறார்கள். நீயோ இவ்வளவு குழந்தைகள் இருக்கின்றனவே என்று அழுகிறாய்!

கிழவி: எவ்வளவு, எவ்வளவு! எங்கள் சக்திக்கு மிஞ்சி விட்டன. அதிருக்கட்டும், தாயே! நீதான் அவளுக்குக் கொஞ்சம் தைரியம் கொடுக்க வேண்டும்.

சீமாட்டி: நல்லது. மற்றக் குழந்தைகளுக்கு நானே ஞானத் தாயாய் இருந்தேன். இதற்கும் அப்படியே இருக்கிறேன். இது என்ன, பையனா?

கிழவி: பையன்தான். ரொம்பச் சிறிசு; ஆனால், ஆரோக்கியமாயிருக்கிறது. நன்றாய்க் கத்துகிறது. நீ வரும் நேரத்தைக் குறிப்பிடுவாயா?

சீமாட்டி: உன்னிஷ்டப்படி நீயே அதைக் குறித்துவிடு.

[கிழவி வந்தனம் செலுத்தி விட்டு அகலுகிறாள்.]

தனிச்கா: அம்மா! ஏன் சில ஜனங்களுக்கு மாத்திரம் குழந்தைகள் இருக்கின்றன; மற்றவர்களுக்கு இல்லை? உனக்கு இருக்கின்றன; மாட்ரீனாவுக்கு இருக்கின்றன. பராஷாவுக்கு இல்லையே!

சீமாட்டி: பராஷாவுக்குக் கலியாணம் ஆகவில்லை. கலியாணம்

★ கிறிஸ்தவக் குழந்தைகளுக்கு நாமகரணத்தோடு ஞானஸ்நானம் என்ற ஒரு சம்ஸ்காரம் நடப்பது வழக்கம். அப்போது, ஞானத் தாய் தந்தையர்களாக இருவரை வரிப்பார்கள். கிழவியின் பெண்ணுக்கு அப்படி ஞானத்தாயாகச் சீமாட்டி இருந்திருக்கிறாள்.

செய்துகொண்டால் தான் குழந்தைகள் பிறக்கும். கலியாணம் செய்துகொண்டு புருஷனும் மனைவியும் ஆகிறவர்களே குழந்தைகள் பெறுவார்கள்.

தனிச்கா: கலியாணம் செய்துகொள்ளும் எல்லாருக்கும் குழந்தைகள் பிறக்குமா?

சீமாட்டி: எல்லாருக்கும் பிறக்காது. குக் என்பவருக்கு மனைவியிருக்கிறாள். அது உனக்குத் தெரியும். இருந்தாலும் அவர்களுக்குக் குழந்தை யில்லை.

தனிச்கா: வேண்டியவர்களுக்குக் குழந்தை பிறக்கும்படியும் வேண்டாதவர்களுக்குப் பிறக்காதபடியும் ஏற்பாடு செய்ய முடியாதா?

சிறுவன்: என்ன முட்டாள்தனமான கேள்வியெல்லாம் கேட்கிறாய்?

தனிச்கா: முட்டாள் தனமே யில்லை. மாட்ரினாவின் மகள் குழந்தைகளை விரும்பவில்லை. அவளுக்குக் குழந்தை பிறக்காதபடி ஏற்பாடு செய்வது நல்லதல்லவா? அப்படிச் செய்ய முடியாதா, அம்மா?

பையன்: போடீ அசடு! என்ன அபத்த மெல்லாம் பேசுகிறாய்! இவைகளைப்பற்றி உனக்கொன்றும் தெரியாது.

தனிச்கா: அந்த மாதிரி ஏற்பாடு செய்ய முடியாதா, அம்மா?

சீமாட்டி: உனக்கு நான் எப்படிச் சொல்லுவது? நமக்கு அது தெரியாதம்மா.........அதெல்லாம் கடவுள் சித்தம்.

தனிச்கா: ஆனால், குழந்தைகள் எப்படிப் பிறக்கின்றன?

பையன் (நகைப்புடன்): அட அஜமே!

தனிச்கா: (வருத்தமுற்று) இதில் என்ன சிரிப்பு? குழந்தைகளால் கஷ்ட முண்டாகிற தென்று மாட்ரினா சொல்லுகிறாள். அப்படியானால், குழந்தைகள் பிறக்காதபடி ஏற்பாடு செய்ய வேண்டியது தானே? தாதியம்மாளுக்குக் குழந்தைகள் இல்லை; எப்போதுமே இல்லை.

சீமாட்டி: ஆனால், அவளுக்குக் கல்யாணமே ஆகவில்லை. புருஷன் கிடையாது.

தனிச்கா: குழந்தைகள் வேண்டாம் என்பவர் எல்லாரும் அப்படியே இருக்கவேண்டும். இல்லாவிட்டால், என்ன நேர்கிறது? குழந்தைகள் பிறந்துவிடுகின்றன; அவைகளுக்கு உணவளிக்க வகையில்லை. (சீமாட்டி பையனை நோக்கி விட்டு, மௌனமாயிருக்கிறாள்.) நான் பெரியவளாய்ப் போனால், கட்டாயம் கலியாணம் செய்துகொள்ளுவேன்; ஆனால், ஒரே ஒரு பெண்ணும் ஒரே ஒரு பையனும் மாத்திரம் பெற்றுக்கொண்டு, பிறகு இல்லவே இல்லாதபடி ஏற்பாடு செய்துகொள்ளுவேன். குழந்தைகளைப் பெறுவது, பிறகு அவைகளை வெறுப்பதென்றால், நியாயமல்ல. என் குழந்தைகளிடம் நான் எப்படி அன்பு காட்டுவேன், தெரியுமா! நிஜமாய், அம்மா! நான் தாதியம்மாளைப் போய்க் கேட்கிறேன், பார். (போகிறாள்.)

சீமாட்டி: (மகனைப் பார்த்து) ஆமாம், அதென்ன பழமொழி? 'குழந்தைகள் வாயிலிருந்து'... அப்புறமென்ன? 'உண்மை பிறக்கிறது.' அவள் சொன்னது முற்றிலும் உண்மை. கல்யாணமென்பது மிக முக்கியமான விஷயம், விளையாட்டல்ல என்று மட்டில் ஜனங்கள் தெரிந்து கொள்வார்களானால் — தங்கள் சுகத்துக்காக மணக்காமல் குழந்தைகளின் நன்மைக்காகவே அவர்கள் மணப்பார்களானால் — அநாதைகளாய், திக்கற்றுக் குழந்தைகள் தவிக்கும் கொடூரம் ஒழியும். மாட்ரினாவின் பெண்ணுக்குக் குழந்தைகளால் உண்டாகும் துயரம்போன்ற துயரம் யாருக்கு மிராது; குழந்தைகளால் எவருக்கும் ஆனந்தமே உண்டாகும்.

சங்கீத சிருஷ்டி

தமிழிசை விவாதம் நடக்கிறதே; இச்சமயம் கவனிக்கத்தக்க ஒரு ரஸமான சம்பவம் இது. மாரிஸ் ராவெல் என்பவர் 'போலிரோ' என்ற ஒரு பாட்டை எழுதி உலகப் பிரசித்தி யடைந்தவர். சில வருஷங்களுக்கு முன் அவர் உயிரோடிருந்தபோது, பாரிஸில் அவரை ஜாக் வார்னர் என்ற ஹாலிவுட் முதலாளி சந்தித்தார்.

"ஹாலிவுட்டுக்கு வந்து, ஒரு படத்துக்குப் பாட்டுக்கள் எழுதித் தருவீர்களா?" என்று கேட்டார் முதலாளி. பாடகருக்கு இஷ்டமில்லை.

"லட்சம் டாலர் தருவேன்" என்று ஆசை காட்டினார் முதலாளி.

"எவ்வளவு பாட்டு உங்களுக்கு வேண்டும்?" என்று கேட்டார் சாஹித்திய நிபுணர்.

"ஒன்றரை மணி நேரம் பாடுவதற்கு வேண்டிய பாட்டுக் கட்டினீர்களானால் போதும். அதை இயற்ற உங்களுக்கு எவ்வளவு காலமாகும்?" என்று வினவினார் முதலாளி.

"ரொம்பக் காலம் ஆகாது. நாலு அல்லது ஐந்து வருஷத்தில் இயற்றி முடித்து விடுவேன்" என்றார் சாஹித்ய நிபுணர்!

* * *

வீரனாகும் வழி

ஒரு வாத்துக் குஞ்சு தண்ணீரில் முதன் முதலாக இறங்குகிறது. தண்ணீர் உயர எழ எழ அதற்கு நடுக்கம்; விரல்மேல் எழும்பி நிற்கிறது. பலனில்லை; நிலைக்காமல் ஜலம் ஏறுகிறது. ஒரு கால் அந்தரம்; நடராஜ நர்த்தனந்தான். இன்னும் எழும்புகிறது நீர். வாத்துக் குஞ்சுக்குக் கிலி. தரையை விடாமல் காலூன்றி நிற்க, அது செய்யும் பிரயத்தனம் பலிக்கவில்லை. மற்றொரு காலும் அந்தரமாகி விடுகிறது. என்ன ஆச்சரியம்! தான் மூழ்கவில்லை; தன்னால் நீந்தமுடியும் என்று இப்போதுதான் அது கண்டுகொள்ளுகிறது. இதே போல நெருக்கடியும் நிர்ப்பந்தமும் நேரும்போதுதான் மனிதர்கள் வீரராகிறார்கள்.

நமது பிரதிநிதி

நமது பிரதிநிதி திரு. ரா. பாலசுப்ரமண்யம், 'சக்தி'யின் அபிவிருத்தியை நாடி, தமிழ் நாடெங்கும் சுற்றுப் பிரயாணஞ் செய்து வருவதால், அங்கங்கே உள்ள நண்பர்கள், அவருக்கு ஒத்தாசை புரிந்து இயன்ற ஆதரவு தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மானேஜர்,

சக்தி காரியாலயம், சென்னை

அனுபவ ஜோதிஷர்

திறமைக்கு தங்க மெடல்களும் நற்சாட்சிகளும் பெற்றவர், எதிர்காலத்தைப் பற்றி 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. மாதவாரி ஒரு வருஷ பலன் ரூ. 5. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரொபஸர் காழியூர் கோவிந்தாச்சாரி
3/2, பிராடீஸ் ரோட், மயிலாப்பூர்
மதராஸ்

Insist on:

GANESH COFFEE

RAW
ROASTED
OR GROUND

SOLD EVERYWHERE

உயர்ந்த வைரங்கள்

புதுமாதிரி வைர நகைகளுக்கு நம்பிக்கையான இடம்

உ. அ. அரு. அருணாசலம் செட்டியார்

வைர வியாபாரம்

கல்லுக்கட்டி, காரைக்குடி

உண்மையான இன்பத்தை அனுபவிக்க

"டாக்டர் மஹாம்ப்ஸ் நைட் பில்ஸ்கள்"

உபயோகியுங்கள்

இவ்வுலகில் ஒவ்வொருவரும் பணக்காரனாயினும், ஏழையாயினும், ஆணாயினும் பெண்ணாயினும், யௌவனராயினும், வயோதிகராயினும், வீர்யத்துடனிருப்பதையே விரும்புவார்கள். அவர் யாருக்காவது வாழ்க்கையின் இன்பங்களை அனுபவிக்க முடியாதென்று தோன்றினாலோ அல்லது இனத்தின் இன்பங்களை அனுபவிக்க முடியாவிட்டாலோ, அல்லது நல்ல திடகாத்திரமுள்ள குழந்தைகள் பிறக்கவேண்டிய சக்தி இல்லாவிட்டாலோ அவர்கள் எப்பவும் "டாக்டர் மஹாம்ப்ஸ் நைட் பில்ஸ்களை" உபயோகிக்க வேண்டும். இந்த மாத்திரைகள் ஆச்சர்யமான குணத்தைக் கொடுக்கும். ஒவ்வொரு பெட்டியிலும் பத்து டோஸ்களிருக்கின்றன. வயது என்னவாயிருந்தாலும், விவாக வாழ்வின் இன்பங்களை பூரா திருப்தியுடன் அனுபவிக்க ஒரு டோஸ்கூடப் போதுமானது. இன்றைக்கே "டாக்டர் மஹாம்ப்ஸ் நைட் பில்ஸ்கள்" ஒரு பெட்டி வாங்கி உபயோகித்துப் பாருங்கள். நீங்கள் முன்னால் அனுபவிக்க முடியாத இன்பத்தை அது தரும் என்பதற்கு சந்தேகமில்லை. ஒரு பெட்டியின் விலை ரூபாய் 5. தபால் கூலி அணா 9. எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ஏஜண்டுகள்: **அப்பா & கம்பெனி**

அப்பா பில்டிங்ஸ், சைனா பஜார், மதராஸ்.

சேலைகளுக்கு
— சிறந்த இடம் —
N. C. B.
—கார்னர் ஷாப்—
N. C. பாலுசாமி ஐயர் & சன்
84, நயினியப்ப நாய்க்கன் தெரு,
மதராஸ்.


Shoe Specialists
CHROMECO AGENCY
NEXT TO GOKHALE HALL

எழுதுவதில் இணையற்றது
பார்க்கர் பேனா

கனி & சன்ஸ்
ராட்டன் பஜார், மதராஸ்

THE LILY BISCUIT CO.
CALCUTTA

பல ரகங்களில் கிடைக்கும்
எப்போதும் புதிதாகவும் ருசிகரமாயுமுள்ள
ஒவ்வொரு ரகமும் பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்டது
ஸோல் ஏஜண்டுகள்: S. VISWANADHAM & CO.,
44, BUNDER STREET, MADRAS

அமிர்தாஞ்சனம்
எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும் கை கண்ட இந்திய மருந்து இதுவே. ஆயிரக் கணக்கானவர்கள் விற்கிறார்கள்.
அமிர்தாஞ்சனம் லிமிடெட்
மதராஸ் பம்பாய் கல்கத்தா

தொடர் கதை :

ஜமீந்தாரிணி

ஆசிரியர் : சரத்சந்திர சட்டர்ஜி — மொழிபெயர்த்தவர் : ஆர். ஷண்முகசுந்தரம்

கமலா எவ்வளவோ யோசித்தும், இந்த மனிதன் எதைச் சாதிப்பதற்காகப் படைக்கப்பட்டான் என்பதைத் தீர்மானிக்க முடியவில்லை. அவன் தனது மனசைத் தன் சரீரத்துக்குள்ளேதான் வைத்திருக்கிறானா அல்லது அதை வேறு எங்கேயாவது அடகு வைத்திருக்கிறானா? மற்றவர்களைப் போலத்தான் அவளுடைய கணவனும் கூட இருக்கிறான்; உண்கிறான், உறங்குகிறான், ஜமீன் காரியங்களைப் பார்க்கிறான், வீட்டு மேல்பார்வை அனைத்தும் செய்கிறான். எல்லா விஷயங்களிலும் மகிழ்ச்சி யடைகிறான்; எல்லா விஷயங்களிலும் உதாசீனமாகவு மிருக்கிறான். தன் கணவனுக்கு என்னதான் பிடிக்கிறது, எந்தப் பொருளின்மேல் அவனுக்கு அதிக விருப்பம் என்பதை அவள் இதுவரையிலும் அறிந்துகொள்ள முடியவில்லை. கமலா எப்பொழுதாவது நோயுற்றால், காசிநாதன் அவளருகே உட்கார்ந்து கண் விழித்துக்கொண் டிருக்கிறான் — அவனுடைய முகத்திலேதான் இவ்வளவு கடினம்; இதயத்திலோ அன்பும் காதலும் வெடித்து வெளிக் கிளம்புவது போலப் பெருகுகின்றன. ஆனால், நோய் குணமடைந்து, அங்குமிங்கும் உலாவத் தொடங்கியபின், அவள் எதிர்ப்பட்டால்கூட அவளை அவன் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை; தனது வேலையிலேயே முற்றிலும் அவன் ஈடுபட்டு விடுகிறான். கோபத்திலே இரண்டு நாள் கமலா பேசாமலும் இருந்து பார்த்தாள்; ஆனால் பலன் ஒன்று மில்லை. காசிநாதன் அருகில் வந்தான்; ஆனால் மறுபடியும் திரும்பிப் போய்விட்டான். வேண்டவில்லை, அழவில்லை, பேசவு மில்லை. மீண்டும் கமலா பேசத் தொடங்கினால், முன்போலவே புன்சிரிப்புடன் சந்தோஷமாகப் பேசுகிறான். ஒருபோதும் கோபம் காண்பித்த தில்லை. ஏன் இரண்டு நாள் பேசாதிருந்தாய், ஏன் கோபமாக இருந்தாய் என்றும் அவளை அவன் ஒரு நாளும் கேட்டதில்லை. கொஞ்ச நாளைக் கப்புறம் கமலா தன் மனதுக்குள்ளாகவே ஒரு முடிவுக்கு வந்தாள். தன்னை உதாசீனம் செய்யும் கணவனிடம் "நீ என்னைப் பொருட்படுத்தாவிட்டால், நானும் உன்னைப் பொருட்படுத்த மாட்டேன். என்னை உன் காலடியில் நீ நசுக்கிக்கொண்டேயிருப்பது; நான் உனது காலைச் சுற்றிக் கிடப்பதா? அந்த மாதிரி காதல் எனக்கு வேண்டாம்" என்று எப்படியும் அவனிடம் சொல்லிவிட வேண்டியதுதான் என்று அவள் தீர்மானித்து விட்டாள். அதன் பிறகு கணவனைச் சந்தித்தாலும் கம்பீரமாக முகத்தைத் திருப்பிக்கொண்டு போகத் தொடங்கினாள். "உன்னிடம் இரக்கம் கொண்டே உன்னை என் கணவனாகக் கொண்டிருக்கிறேன். உனது கால்டியில் என் பிராணன் விழுந்து கிடப்பதாகவும், ஆசையால் உன்னைக் கண்டபோதெல்லாம் இனிமையான புன்முறுவல் பூப்பேன் என்றும் நினைக்காதே" என்று அவனுக்கு இடித்துக் காட்டவிரும்பினாள்.

கமலா எப்போதாவது வேலைக்காரர்களையோ அல்லது வேலைக்காரிகளையோ திட்டிக்கொண்டிருக்கையில், தன்னை யறியாமல் அவர்களுக்குப் பரிந்துகொண்டு காசிநாதன் ஏதாவது சொல்லிவிட்டால், அந்த வார்த்தையைக் கேட்டும் கமலா அசட்டை செய்துவிட்டு முன்போலவே திட்டத் தொடங்குவாள். "என் வேலைக்காரன்; என் வேலைக்காரிகள்; என் மாளிகை — என் இஷ்டப்படி பேசுவேன். நடுவில் வந்து பஞ்சாயத்துச் செய்ய உன்னை யார் அழைத்தது?" என்று சொல்வதுபோ லிருக்கும் அப்போதெல்லாம் அவளுடைய பாவனை.

ஆனால், இதனாலேயே திருப்தி அடைந்துவிட முடியுமா? தனது உத்தேசந்தான் பூர்த்தியாகி விடுமா? காசிநாதனைத் துளியாவது இது அசைத்திருந்தால் சற்றுத் திருப்திப்படலாம். யார் என்னதான் செய்தாலும், அவன், தனது மந்தகாசமான முகத்தோற்றத்தின் மூலம், "என்னை அசைக்க முடியாது; இமயத்தின் சிகரம் போன்ற ஒருவனை லவலேசமும் ஊறு உண்டாக்குவதற்கு உன்னிடம் சக்தி இல்லை. எத்தனை புயல் மழை அடித்தாலும், எத்தனை மரம் செடி கொடிகள் துவம்சம் ஆனாலும், என்னை மட்டில் நீ அசைக்கவும் முடியாது" என்று அவன் அறிவுறுத்திக் கொண்டிருந்தான்.

சரி; கமலா காதலிக்கவில்லையா? காதலிக்கத்தான் காதலிக்கிறாள். ஆனால், அந்தக் காதல் எல்லையற்ற கடலைப் போன்றதல்ல. எல்லை கட்டி 'இதற்கு மேல் போகாதே' என்ற நிபந்தனைக் குட்பட்டது போல் இருந்தது.

ஒரு நாள் கிழ வேலைக்காரியிடம் கமலா தனது துக்கத்தைச் சொல்லி அழுதாள்: "அப்பா, என்னை ஒரு மிருகத்தினிடம் ஒப்படைத்துப் போய்விட்டார்" என்றாள்.

"அதென்ன அம்மா"

"என்னிடம் என்ன வென்று கேட்கிறாய்? நீங்க ளெல்லாரும் சேர்ந்து என்னைக் காலையும் கையையும் கட்டிக்கிணற்றிலே போட்டிருக்கலாமே! அது இதைவிட மேலா யிருக்குமே?"

"இம்மாதிரி பேசாதே அம்மா"

"என் பேசக்கூடாது? நீங்கள் செய்த வேலையை, நான் ஒரு தரம் கூட வாய் திறந்து சொல்லக் கூடாதா?"

"இல்லை, இல்லை; அப்படி யல்ல. அவர் ரொம்ப நல்ல மனிதராச்சே. ஆனால், கொஞ்சம் பைத்திய மிருக்கிறது. அவருடைய தகப்பனாரும் சற்றுப் பைத்தியம் தான். ஆகையினால் சின்ன எஜமானரிடமும்......"

"நீ சும்மா இரு; பைத்தியமென்று உளறாதே. தகப்பன் பைத்தியமா யிருந்தால், மகனும் பைத்திய மாகிவிடுவ தில்லை. இவருக்குப் பைத்தியம் துளிக்கூட இல்லை. என்னை வேண்டு மென்றே இவர் வாதிக்கிறார்!"

கணவன் பைத்தியம் என்று கேட்கவும், கமலாவின் இருதயம் புண்படத் தொடங்கியது.

மூன்று நாளாகக் காசிநாதனின் விஷயம் ஒன்றுமே தெரியவில்லை. இரண்டு நாள் வரையில் வேண்டு மென்றே கமலா விசாரிக்க வில்லை. ஆனால், மூன்றாம் நாள் அவள் திகிலடைந்து, தர்வானிடம், "பாபு இரண்டு நாளாக வீட்டுக்கு வரவில்லை; நீங்களும் தேடவில்லை. பின்னே நீங்களெல்லாம் எதற்காகத்தான் இங்கே இருக்கிறீர்கள்?" என்று கோபித்துக்கொண்டு, அவனை வெளியே அனுப்பினாள்.

தர்வான் யோசிக்கத் தொடங்கினான்: "அடே, இது நல்லா யிருக்கிறது! யாரோ எங்கேயோ போவார்கள், வருவார்கள். அதை யெல்லாம் நாம் எப்படித் தெரிந்து கொள்ள முடியும்?" என்று அவன் நினைத்தான்.

கடைசியில், கஜான்ஜியால் விஷயம் தெரியவந்தது. சின்ன எஜமான் மூவாயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டு எங்கேயோ வெளியில் போயிருக்கிறார்; ஆனால், எங்கே போயிருக்கிறார், எப்பொழுது வருவார் என்று தெரியாது. அதை அவர் யாரிடமும் சொல்லிப் போக வில்லை.

இந்தத் தகவலைக் கேட்ட கமலா கொஞ்ச நேரம் நெற்றியின் மேல் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். பிறகு, தனது தந்தையின் வக்கீலைக் கூப்பிட்டு, "எனது ஜமீன் காரியங்களை எல்லாம் நிர்வகிக்க ஒருவர் வேண்டும். யோக்யமான ஓர் ஆளை ஒரு வாரத்துக்குள் நீங்கள் ஏற்பாடு செய்யுங்கள். சம்பளம் எத்தனையானாலும் கொடுத்துவிடுகிறேன்" என்றாள்.

அத்தியாயம் 8

காசிநாதன் கல்கத்தா வந்து சேர்ந்தான். பகல் பூராவும் மழையில் நனைந்து, சேற்றையும் சகதியையும் தாண்டிக்கொண்டு, மாலையில் ஒரு சிறிய சந்தில் சாதாரணமான தொரு வீட்டுக்குள்ளே பிரவேசித்தான். அவனது கையில் இரண்டு மருந்துப் புட்டிகளும் ஒரு டின் பிஸ்கோத்தும் இருந்தன; மேல் வேஷ்டியில் மாதுளை முதலிய சில பழங்கள் இருந்தன.

அந்த வீட்டில் ஓர் அறையில் ஒரு நோயாளி படுத்துக்கொண்டிருந்தான். அவனது தலைமாட்டிலே ஒரு ஸ்திரீ உட்கார்ந்து, அவனுடைய நெற்றியைப் பிடித்துக் கொண்டிருந்தாள். காசிநாதன் நுழைந்ததும், "காசி அண்ணா, இந்த மழையிலே ஏன் நனைந்து கொண்டு வந்தாய்? எங்கேயாவது நின்று விட்டு வரக் கூடாதா?" என்று அவள் கேட்டாள்.

"அதெப்படி முடியும்? மழையிலே நனைவதால் உண்டாகும் கஷ்டத்தைவிட, நின்றிருந்தால் உண்டாகும் வேதனையே அதிகமா யிருக்கும்"

விந்து யோசித்துப் பார்த்தாள். காசி அண்ணாவின் பேச்சு பொய்யல்ல. ஆகையால், அவள் பேசாம லிருந்து விட்டாள்.

சென்ற பல வருஷங்களாக விந்து எத்தகைய கஷ்டத்தை அனுபவித்து வருகிறாள் என்பது அவளுக்குத் தான் தெரியும். நாம் அவளை அவளுடைய தாயார் வீட்டிலே பார்த்தோம்; அப்புறம் பார்க்க வில்லை. இப்பொழுது அவளைப் பற்றிக் கொஞ்சம் சொல்லியாக வேண்டும். என்றுதினம் ஜமீன்தார் வீட்டுப் பெண்ணைப் பார்க்கப் போகத் தான் தயாராக இருந்தும் அவள் செல்ல முடியவில்லையோ அதற்கு அடுத்த நாளே, தனது மாமனார் கோபால்பாபுவின் கடுமையான நோயைக் கேள்வியுற்று, தன் மாமனார் வீட்டுக்கு உடனே வர நேர்ந்தது. அவளுடைய மாமனார் உண்மையிலேயே அதிக நோயா யிருப்பதைக் கண்டாள். எல்லோரும் சேர்ந்து கூடுமான வரையிலும் சிகிச்சை செய்தார்கள். ஆனால், கோபால் பாபுவை எந்த விதத்திலும் பிழைப்பிக்க முடியவில்லை. நோய் அளவு மீறி விட்டதால், கோபால் பாபு, "சின்ன மருமகளைக் கொஞ்சம் என் அருகில் அழையுங்கள்—அவளை ஒரு தரம் பார்க்கிறேன்" என்றார்.

சிறிய மருமகள் நமது விந்துவாகினிதான். இறப்பதற்கு இரண்டொரு நாளைக்கு முந்தி, விந்துவினிடம் கோபால் பாபு, "அம்மா! இந்தா சாவி. அந்தப் பெட்டியில் இருப்ப தெல்லாம், உனக்கே சொந்தம். எடுத்துக் கொள்" என்றார்.

விந்து கைநீட்டி அதை வாங்கிக் கொண்டாள். "கிழவன் சாகும் போது தனது சகல ஸொத்தையும் சின்ன மருமகளுக்கே கொடுத்து விட்டுப் போய்விட்டான்" என்று இரண்டாம் மருமகள் நினைத்துக் கொண்டாள்.

இன்னும் ஒரு விஷயம்; கோபால் பாபு நோய்ப் படுக்கையிலிருக்கையில், ஒரு நாள் தமது நான்கு புதல்வர்களையும் அருகில் அழைத்து, "பாருங்கள், உங்களுக்குள் துளிக்கூட ஒற்றுமை யில்லை; உங்கள் அம்மாவும், உயிரோடில்லை. ஆகையால், நான் இறந்த பிறகு நீங்கள் ஒரே குடும்பமாக இருக்கவேண்டாம். சூதும் வாதும் பேசிச் சண்டை சச்சரவுகள் செய்து கொள்வதற்கு முன்பே, ஏதோ இருக்கிற சொத்தைப் பிரித்துக் கொண்டு தனித்தனியாகப் போய் விடுங்கள். நான் வைத்துவிட்டுப் போவதோடு, இன்னும் சொற்ப வருமானம் வந்தாலும் போதும்; சுலபமாகக் காலந் தள்ளுவீர்கள்" என்று உபதேசித்தார்.

தந்தை இறந்த பிறகு, நான்கு சகோதரர்களும் தனித்தனியாகப்

பிரிந்து விட்டார்கள். விந்து ஒரு நாள் அந்தப் பெட்டியைத் திறந்தாள்; அதிலே ஒரு 'ராமாயண'ப் புத்தகமும் ஒரு 'மஹாபாரத'ப் புத்தகமும் தவிர, வேறு ஒன்றையும் காணோம். ஆசை நிராசையானாலுங்கூட, காலஞ் சென்ற மாமனாரின் வெகுமதியை விந்து தன் கண்ணிலே ஒற்றிக் கொண்டாள். தழ தழத்த குரலில் "இது அவருடைய அன்பின் பரிசு—இதுவே நமக்கு விலையுயர்ந்த ரத்தினம்" என்று தனக்குத் தானே அவள் சொல்லிக்கொண்டாள்.

விந்து சிலநாள் சுகமாக இருந்தாள். அதற்கப்புறம் ஆபத்தின் அறிகுறி தென்பட்டது. அவளுடைய கணவன் யகேஷ் பாபு நோயில் விழுந்தார். அவள் தனது உடலைப் பொருட்படுத்தாமல், கணவனுக்கு ஸேவை புரிந்தாள். நிலத்தை அடகு வைத்து வைத்தியம் பார்த்தாள். ஆனால், அவர் எந்த விதத்திலும் குணமடையவில்லை. கிராமத்தில் அக்கம்பக்கத்தார்கள், "கல்கத்தாவுக்கு அழைத்துப் போய் வைத்தியம் பார்க்க வேண்டும்" என்று யோசனை சொன்னார்கள். அப்பொழுது விந்து தன்னிடமிருந்த நகை நட்டுகளையெல்லாம் விற்று, கணவனைக் கல்கத்தாவுக்குக் கூட்டிச் சென்றாள். அங்கே பலவிதமான வைத்தியம் நடந்தது; மிஞ்சியிருந்த நகைகளும் அடமானமாயின. ஆனால், நோய் துளியும் அசைந்து கொடுக்கவில்லை. பணக் கஷ்டத்தினால், இப்பொழுது அவ்வளவு நன்றாக வைத்தியம் செய்ய முடியவில்லை. விந்து தனது பெரிய மைத்துனருக்கு எல்லா விவரங்களையும் எழுதினாள். ஆனால், ஒரு பலனும் உண்டாகவில்லை. அப்புறம் அவருக்கு இளைய இரண்டு மைத்துனர்களுக்கும் அவள் எழுதினாள். அவர்களும் தங்களுடைய தமையனைப் போலவே மௌனம் சாதித்துவிட்டார்கள். இப்பொழுது, ஒன்று வேறு ஏதாவது வழி செய்தாக வேண்டும்; அல்லது விஷத்தைத் தின்று இறக்க வேண்டியதுதான் என்று முடிவு செய்துகொண்டாள்.

மனைவியின் முகத்தைக் கண்டு, யகேஷ் பாபு அவளது உள்ள வேதனையை அறிந்து கொண்டார். ஒருநாள் விந்துவைத் தமது அருகில் அழைத்து, உட்கார வைத்து, ரொம்ப அன்புடன் கையைப் பிடித்துக்கொண்டு, "விந்து! என்னைக் கிராமத்துக்கு அழைத்துப் போ; இறப்பதானால், அங்கேயே இறக்கிறேன்—இங்கே இறந்தால், தூக்குவதற்குக் கூட ஆள் கிடைக்காது" என்றார்.

இறப்பது திண்ணம்; ஏனென்றால், வேறு உபாயமில்லை என்று விந்து அறிந்தாள். கணவனைக் கிராமத்துக்குக் கூட்டிப் போவதற்குக்கூட ஒரு வழியுமில்லை. ஆனால், கணவனை இம்மாதிரி நிலையில் விட்டுவிட்டு அவளால் எப்படி இறக்க முடியும்? அவர் இறப்பது நிச்சயமேயானால், பின்னே வெட்கப்பட்டு என்ன ஆகும்? நீர யோசித்து வெட்கத்தைத் தூரக் கட்டிவைத்துவிட்டு, காசிநாதனுக்குக் கடிதம் எழுதி, அதில் அவள் எல்லா விஷயமும் தெரிவித்திருந்தாள். அப்புறம் நடந்ததெல்லாம் நமக்கே தெரியும். வரும்போது காசிநாதன் போதிய பணம் கொண்டுவந்திருந்தான். அந்தப் பணத்தைக் கொண்டு, நகரத்தின் சிறந்த டாக்டர்கள் பலரைக் காசிநாதன் கலந்தான். இனி இடம் மாற்றுவிட்டால், குணமாகாது என்று எல்லோரும் சொன்னார்கள். விந்துவையும் யகேஷ் பாபுவையும் பிறரையும் அழைத்துக் கொண்டு, வைத்யநாத் என்னுமிடத்துக்கு, காசிநாதன் சென்றான். அங்கே இரண்டு மாதம் இருந்து பார்க்கவே, "இந்தத் தடவை யகேஷ் பாபு தப்பித்துக் கொண்டார்" என்று எல்லோரும் அறிந்தார்கள். ஆனாலும், அங்கேயிருந்து திரும்புவதற்குச் சிறிது காலம் பிடிக்குமாதலால், அவர்களை அங்கேயே விட்டுவிட்டு, காசிநாதன் மட்டில் வீடு திரும்பினான்.

கமலா அதிகாலையில் சந்தித்ததும் "எப்போது வந்தீர்கள்?" என்றாள்.

"ராத்திரி"

கமலா அதற்குமேல் ஒன்றும் பேசாமல் தன் காரியமாகப் போய்விட்டாள். காசிநாதன் கச்சேரிக்குச் சென்றான். பல நாளைக் கப்புறம் திடீரென்று எஜமானரைப் பார்த்ததும், எல்லா உத்தியோகஸ்தர்களும் எழுந்து நின்று கொண்டார்கள்; ஒரே ஒரு வாலிபன் மட்டிலும் தனது வேலையைப் பார்த்துக்கொண்டு, நாற்காலியில் அலட்சியமாய் அமர்ந்திருந்தான். புதிதாக வந்தவரைக் கண்டு எல்லா உத்தியோகஸ்தர்களும் மரியாதை செய்ததை அவன் கவனிக்கவில்லை. காசிநாதன் தானே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தான். இந்தப் புதிய மானேஜரின் பெயர் விஜய கிஷோர்தாஸ். பி. ஏ. பாஸ் செய்திருக்கிறான். அதிகத் திறமையுடையவன். ஆகையால், அவனை மானேஜராக வக்கீல் விநோதபாபு அமர்த்தியிருக்கிறார்.

மானேஜர் வெகு நேரத்துக் கப்புறம் காசிநாதனின் பக்கம் திரும்பி, "நீங்கள் என்ன காரியமாக இங்கே வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"இல்லை; என் வேலை ஒன்றும் இல்லை. இங்கே நடக்கும் வேலையைப் பார்க்கவே வந்திருக்கிறேன்."

அப்பொழுது திவான் எழுந்து, "அவர்கள் நமது மருமகப் பிள்ளை" என்றார்.

விஜயபாபு எழுந்திருந்து, அன்பாக ஸம்பாஷணை செய்தார்.

இச்சமயம், ஒரு வேலைக்காரன் வந்து, விஜய பாபுவிடம் "எஜமானி அழைக்கிறார்கள்" என்றான்.

விஜயபாபு போன பிறகு, திவானிடம் காசிநாதன் "இவர் யார்?" என்று கேட்டான்.

"புதிய மானேஜர்"

"யார் வைத்தது?"

"எஜமானி"

"ஏன்?"

"காரியங்கள் சரிவர நடக்காதிருந்திருக்கும்; அதனால்தான்."

"இப்போது இவர் எங்கே போயிருக்கிறார்?"

"உள்ளே அறைக்குள்."

(தொடரும்)

ரணகாயங்கள் ஏற்பட்டால், அவற்றைத் தைக்க ஆதிகால வைத்தியர்கள் ஒரு யுக்தியைக் கடைப் பிடித்தார்கள். பெரிய கட்டெறும்பைப் பிடித்து, காயத்தின் இரு பக்கத்தையும் சேர்த்துக் கடிக்கச் செய்வார்கள். அது கடித்ததும், எறும்பின் உடலைக் கிள்ளி எறிவார்கள். ஆனால், அந்த வாய் மாத்திரம் கடித்த கடியை விடாமல் சேர்த்துப் பிடித்துக்கொண்டு கெட்டித் தையல்போல் ஆகிவிடும்.

<u>சரித்திரக் கதை :</u>

சரியான பொருத்தம்

[சுவாமி சுத்தானந்த பாரதியார்]

> மணமான பெண்ணை, மன்னன் முறை தப்பி மோஹங் கொண்டான். அவனது அகங்காரத்துக்கும் காமவெறிக்கும் எப்படிப் பாடம் கற்பிப்பது? இதுவே அவர்களின் யோசனை. மாப்பிள்ளைக்கோலத்துடன் இதோ மன்னன் வந்துவிட்டான்.........அப்புறம்.........?

செஞ்சியை நினைத்தால் தமிழர் வரலாறே எதிரே நிற்கிறது! போர்ப் படலங்களும் வீரவாட் கணங்களும் சண்ட தாண்டவ மாடுகின்றன; நமது தமிழ்த் தாய் எத்தனை அன்னியர் கொடுமையைத் தாங்கினாள் என்பது புலனாகிறது. தனித்தமிழர், நாயக்கர், மராத்தியர், இஸ்லாமியர், பிரெஞ்சுக்காரர், இப்போது ஆங்கிலேயர் — செஞ்சியின் தலைவிதி இவ்வாறு கைக்குக் கை மாறி வந்தது. அரச சக்கரம் ஒருவர் கையிலிருந்து இன்னொருவர் கைக்கு மாறுமுன், எத்தனை ரகளை, ரணகளம், முட்டல், மோதல், மண்டையுடைப்பு, பிணக்குவை...அப்பப்பா! இவ்வளவு வீரக் கொடுமைகளையும் ஆராயும்போது, மனம் திடுக்கிடுகிறது. மனித வாழ்க்கை ஒரே ருத்ர தாண்டவந்தானா? சரித்திர மென்பது கொலை வெறிக் கூத்தா! — இல்லை யில்லை.

இந்த வீர பயங்கரத்திலும், காதலும் நகைப்பும் கலந்திருக்கின்றன. செஞ்சியின் போர்க் காட்சிகளுக் கிடையே கலந்த ஒரு ஹாஸ்ய சம்பவத்தைக் கேளுங்கள்.

செஞ்சியை வேங்கடபதி கிருஷ்ண நாய்க்கன் ஆண்டான். அவன் கட்டுமஸ்தான காளை; வாட்போரில் அவனை யாரும் மிஞ்ச முடியாது; 'ஹ்ஹூம்' என்று அவன் ஒரு தரம் உறுமுவான்.... சிம்ம கர்ஜனை கேட்ட யானை மாதிரி பகைவர் நடுங்குவர். யாராவது அவனைக் குறைவாகப் பேசினால், எதிர்த்தால், "பலமிருக்கிறது, பார்க்கிறேன் ஒரு கை" என்பான். அவன்முன் இடுப்பு வணங்கிக் கையால் வாயைப் பொத்திப் பயபக்தியுடனே தான் எல்லாரும் பேச வேண்டும். யாராவது நிமிர்ந்து நடந்தால், தலை போய் விடும்....

தான் மன்னன், மற்றவர் வெறும் மனிதர் என்ற அகம்பாவம் மண்டைக்கேறி மகுடமும் புனைந்தால், கேட்பானேன்...... அமுல், அதிகாரம், தடபுடல்!... அவ்வளவு விசாலமான ஆகாசம் எவ்வளவு வணக்கமாகப் பணிந்து நிற்கிறது......நமது வேங்கடபதி நாயக்கர் தலை மட்டும் யாருக்கும் வணங்காது. விஜயநகரம் சமஸ்தானத்தைக் கூட ஒருநாள் வென்று ராயர் சிம்மாசனத்தில் உட்கார, அவன் சூழ்ச்சி செய்தான்.

அக்காலம் வருண தர்மத்தின் ஆதிக்கம் இருந்தது. ஜனங்களுக்கு மனுநீதியில் நம்பிக்கையிருந்தது. பிராமணர்கள் உண்மையான அந்தணரா யிருந்தனர். உலகியல்லைச் சுற்றிலும் கண்ட அவர்களிற் சிலர் தவ சாதனங்கள் செய்தனர். ஆறுகாடு (ஆற்காடு) வட்டத்தில் அத்தகைய அந்தண் முனிவர் கூட்டம் அதிகம். இன்று கூட ஆற்காடு ஜில்லாவே தமிழ் நாட்டின் தவ பீடமாக விளங்குகிறது — வடாற்காட்டில் ரமண ஜோதி, தென்னாற்காட்டில் அரவிந்தக் கதிர் விளங்குகின்றன; இரண்டுக்கும் நடுவே அருட்சோதி மந்திரம் உள்ளது. இத்தகைய அந்தண் முனிவருக்கு நமது சமுதாயத்தில் முதல் இடம் உண்டு. 'துறவிக்கு வேந்தன் துரும்பு' என்ற பழமொழியை எல்லாரும் அறிவர். தவவொழுக்கங்களிற் சிறந்த அந்தணர்கள் எந்த மன்னர் சலுகையையும் எதிர்பார்க்கமாட்டார்கள்.

அத்தகைய செவ்விய அந்தணர் செஞ்சியில் வசித்தனர். அவர்களுள் சனாதனப் பிராமணர் ஒரு வகை, ஜைனப் பிராமணர் ஒரு வகை. சனாதனிகள் வேதவழி நடப்பர். ஜைனப் பிராமணர் தத்வார்த்த சூத்திரப்படி நடப்பர். இருவரும் அவரவருக்குரிய ஆசார அனுஷ்டானங்களில் அணுப் பிசகாமல் நடந்து வந்தனர்.

விஜயதசமி; வேங்கடபதி நாயக்கர் பவனி வருகிறார். வீரர் இருபுடையும் பளபள வென்று வாளுருவி அணியணியாக வருகின்றனர். சுவாமி எழுந்தருளினாற் கூட அவ்வளவு கூட்டமிராது; பய பக்தி யிராது. "ஜய பராக்! வீர தீர கம்பீர அதி புஜபல பராக்ரம மகீபதி, கீர்த்திபதி வேங்கடபதி கிருஷ்ண நாயக்க ராஜராஜேந்திர மஹாராஜருக்கு ஜய ஜய பராக்!" என்று திசை பிளக்கப் புகழ் முழங்குகிறது. வீடுதோறும் ஆலத்தி யெடுக்கிறார்கள்; ஆலாத்தித் தட்டில் அவரவர் தரத்திற் கேற்றபடி பணமும் மோகராவும் விழுகின்றன..."நீயே இந்திரன் சந்திரன்" என்று மாகதர் பாடுகின்றனர்.........தாசிகள் அபிநயம் பிடித்து, ஜல் ஜல் என்று ஆடுகின்றனர்.

பவனி, அந்தணர் தெருக்கோடியில் வந்தது; அந்தத் தெருவிலிருந்து யாரும் வந்து மன்னனை வணங்கவில்லை; அன்று அங்கே திவ்ய நாம பஜனை நடந்தது; அந்தணர் அனைவரும் நாமசங்கீர்த்தனத்தில் மனத்தை யிழந்திருந்தனர். அந்த அருளின்பத்தை உண்டவருக்கு, அரசரின் இடம்ப நாடகம் ஒரு பொருட்டாகவே தோன்றாது. மற்றத் தெருக்களெல்லாம் ஆலாத்தி யெடுத்து ஜயபராக் போட்டுத் தனது குடிகள் வணங்கினர்; இந்தத் தெருவில் யாரும் தன்னை வந்து வணங்கவில்லை—இது நாயக்கரின் மனத்தைப் புண்படுத்தியது.

மறுநாள் இதே சிந்தனை......அந்தணர் தம்மை உயர்ந்த ஜாதி என்று எண்ணிக்கொண்டனர்; தன்னைவிடத் தெய்வபக்தி அவர்களுக்கு அவ்வளவு பிரமாதமாகத் தோன்றியது. அதனால் அப்படி உதாசீனமா யிருந்தனர். அவர்களை மட்டந்தட்ட வேண்டும்......அரசனா யிருப்பதுடன் தானும் பிராமணனாகி விட வேண்டும். அப்போதுதான் தன்னையும் உயர் குலம் என்று எல்லாரும் வணங்குவர்...என்று' அவனுக்குத் தோன்

றியது; மந்திரிகளும் ஆமாஞ் சாமி போட்டனர்.

அன்று முதல் வேங்கடபதி நாயக்கருக்குள் கீசகன் புகுந்து விட்டான். அழகுக்குப் பிடித்தது அஷ்டமத்திலே சனி! எவ்வளவு வீர சூர பராக்கிரம மண்டைக் கருவங்களையும் அடக்கும் ஒருவன் இருக்கிறான்—மன்மதன். அவனது பூங்கணைமுன் வாள், ஈட்டி, பீரங்கி எதுவும் செல்வதில்லை. மன்மதன் நாயக்கரைக் காரமாகக் குறி வைத்துவிட்டான். நாயக்கரின் அந்தப்புரம் மெல்லியர் கூட்ட மாயிற்று. தீக்கு நெய் வார்த்ததுபோல், அவனது ஆசைத் தீ எறியது! சுற்றுப்புறங்கள் அந்தத் தீக்குப் போதவில்லை; புனிதமான அந்தணர் வீடுகளிலும் அது உலாவத் தொடங்கியது. பணத்தினால் கற்பை விலைக்கு வாங்கலாம் என்பது அவன் துணிபு.

அதோ **சங்கரி** செல்கிறாள். என்ன அழகு, என்ன அழகு! நகை மினுக்கில்லை; சாதாரணமான தோம்புப் புடவைதான் அணிந்திருக்கிறாள்; முகத்தில் திரு விளங்குகிறது; கண்கள் காலைத் தாமரைபோல் கற்பொளி வீசுகின்றன. சரியான உயரம், சரியான உடல்; அச்சம், நாணம், மடமை, பயிர்ப்பு—நிறைந்த பெண்மை சங்கரியாக விளங்குகிறது. பல்லக்கில் செல்லும்போது, வேங்கடபதி பார்த்தான்...சொக்கிப் போனான். 'இந்தப் பிராமணப் பெண்ணை என் அரசியாகக் கொள்வேன்' என்று தீர்மானித்தான். தீர்மானம் அமுலுக்கு வரவேண்டுமே? பெண்ணின் சுற்றத்தாரை விசாரித்தான்; சில அந்தணரை வசப்படுத்திக் காரியம் முடிக்கப் பார்த்தான். பெற்றோரையே கேட்டு விட்டான். ஒன்றும் பலிக்கவில்லை. அடிக்கடி அந்தத் தெரு வழியாக உலா வந்தான். தனது ராஜ படாடோபங்களை யெல்லாம் தடபுடலாகக் காட்டினான். பெண் குனிந்த தலை நிமிரவில்லை. அவன் பட்ட சிரமத்துக்கு ஒரு கடைக்கண் பார்வை கூடக் கிடைக்கவில்லை.

சங்கரி கலியாணமான பெண். அவளுடைய கணவன் காசி யாத்திரை சென்றிருந்தான். அவனிடம் அவள் மனம் கலந்து போனது. வேறெவரும் அவளது மனதில் இடம் பெற முடியாது. அரசன் செய்யும் தந்திரங்களை அறிந்ததும், அந்தப் பெண் வெளியே வருவதை நிறுத்தி விட்டாள். அரசனின் காதல் காலாக்கினி யானது. அக்கினிக்கு ஆங்காரம் வந்தால் கேட்க வேண்டுமா? "நாம் ராஜா......... இந்தப் பஞ்சாங்கக்காரன் பெண்ணுக்கு இவ்வளவு கிராக்கியா? இருக்கட்டும், சொல்லுகிறேன். ஹுஹூம்." என்றொரு ஆத்திரக் கனைப்புடன் எழுந்தான் மன்னன். காசிக்குப் போன கணவனைக் கண்டுபிடித்து வழியிலேயே சரி பண்ண ஆட்களை அனுப்பி விட்டான். பெண்ணின் பெற்றோருக்கு நான்கு நாள் வாயிதாக் கொடுத்தான்......நான்காம் நாள் ஆளும் வாளும் கொண்டு நேராக அந்த வீட்டுக்கு வந்தான். கதவு திறந்தேயிருந்தது; உள்ளே வேகமாகப் புகுந்தான்......வீடு காலி. பெண் எங்கே? பெற்றோர் எங்கே? என்ன மாயம்!

அரசனது கோபம் அந்தண சமூகத்தின் மேல் பாய்ந்தது; மீசை மண்ணைத் தட்டி விட்டு முறுக்கி "எப்படியாவது அந்தணப் பெண் ஒருத்தியை அரசியாகக் கொள்வோம்......ஒரு வாரம் வாயிதா... நாம் இந்தத் தெருவுக்கு வருவோம்...ஆலத்தி யெடுக்க வேண்டும்......எமக்குப் பிடித்த அழகியைப் பல்லக்கில் வைத்துக் கொண்டு போவோம்" என்று கர்ஜித்துச் சென்றான்.

செஞ்சியில் சனாதன அந்தணரும் ஜைன அந்தணரும் அன்யோன்யமாக வாழ்ந்தார்கள். அரசனுக்கு, எதிலிருந்து பெண் வந்தாலும் சம்மதமே. இரண்டு சமுதாயத்தாரும் இரகசியமான இடத்திற் கூடினர். அவர்களிடையே அதே சங்கரி காண்கிறாள்; அவளுடன் ஜைனத் தோழி **சந்தனை** நிற்கிறாள். இருவரும் காதுக்குள் ஏதோ பேசுகிறார்கள். பெற்றோரிடம் ஏதோ சொல்லுகிறார்கள். அந்தணர் "என்ன செய்வோம்? முரட்டு ராஜாவை எப்படித் தப்புவோம்? நாடெல்லாம் போர்......எங்கே செல்வோம்?" என்று விசனப் பட்டனர்.

எழுந்தாள் சங்கரி......"நாயக்கருக்குச் சரியான பதில் சொல்லுவோம்; பயப்பட வேண்டாம்" என்றாள்...... சந்தனை "நானே பதிற் சொல்லுகிறேன், அப்பா" என்று தந்தையைக் கொஞ்சலாகப் பார்த்தாள். எழுந்தார் பாகுபலி நயினார்........"அந்தணர் யாரும் அரசனுக்கு அஞ்ச வேண்டியதில்லை. மது மாமிசம் சாப்பிட்டு மனிதரைக் கொலை செய்வதே தொழிலான ஒருவனுக்கோ நமது பெண்ணைத் தருவது? அவனுக்குச் சரியான பதில் நான் சொல்லுகிறேன். என்ன வந்தாலும் சரி; நீங்கள் கவலைப்பட வேண்டாம்" என்றார். அந்தணர் அனைவரும் அவரது தைரியத்தை வாழ்த்தினர். சங்கரியும் பெற்றோரும் வடக்கே யாத்திரை சென்றார்கள்.

மறுநாள் அந்தணர் அரசனுக்கு ஓர் ஓலை யனுப்பினர்: "அரசே! ஜைன அந்தணர் பெண்ணைக் கொடுத்தால், நாங்களும் ஒரு பெண்ணைத் தருகிறோம்" என்பது அதன் கருத்து. "பாதி வெற்றி" என்று மன்னன் ஜைனத் தெருவில் கண்ணை ஓட்டினான். பார்சுவநாதர் கோயிலில் பஞ்ச நமஸ்கார ஜபம் செய்து, ஜைனர் வீடு செல்கின்றனர். அவருள் ஒரு பெண்மணி மின்னற் கொடிபோல் அவன் கண்ணைப் பறித்தாள். "அதோ அந்தப் பெண் வேண்டும்" என்று அரசன் தனது கையாளுக்குக் காட்டினான். அவளே சந்தனை. மறுநாள் அவளுடைய தந்தை பாகுபலியை அரசன் அழைத்துத் தன் கருத்தைச் சொன்னான்.

பாகுபலி: ஒரு விண்ணப்பம்; மகராஜா அசல் நாயக்க வம்சம்; ஒரு நாயக்கப் பெண்ணை மணந்து கொண்டால், நன்றாயிருக்கு மல்லவா?

நாயக்கர்: இல்லை; நான் அந்தணப் பெண்ணை மணந்து பிராமணனாவேன். பிறகு, என்னை எந்தப் பிராமணனும் வணங்குவான். இப்போது நான் வேறு ஜாதி என்று அந்தணர் அவமதிக்கிறார்கள்.

பாகுபலி: அரசே! புலி பசுவை மணப்பதுண்டா? அவரவர் குணவினைக் கேற்றபடி மணவினை நடப்பதுதான் சரி.

நாயக்கர்: அதெல்லாம் யார் உம்மைக் கேட்டது? பேசாமல் பெண்ணை யனுப்பும்......இது என் ஆணை......நான் அரசன்.

பாகுபலி: அரசே! பெண் என்ன, விலைச் சரக்கா? விவாகம் என்றால், பொருத்தம் பார்த்து, முகூர்த்தம் வைத்து, வைதீகரீதியாகவே செய்வோம். தங்கள் ஜாதகத்தைத் தாருங்கள். சரியான பொருத்தம்

பார்க்கிறேன். தை மாதம் சுப தினம் பார்த்து ஜானுவாசம் புறப் படலாம்.

"அது நியாயம்" என்று மன்னன் ஜாதகத்தைக் கொடுத்து முகூர்த்த நாளை எதிர்பார்த்திருந்தான்.

அன்றுமுதல் அந்தணர் எந்த எதிரியையும் எதிர்க்கத் தயாரானார்கள். அங்குமிங்கும் ஆட்களை வசப்படுத்திச் சரியான பலமும் சேர்த்து வைத்தார்கள். ஜைன-சனைனர் வீதியில் இரவும் பகலும் பலமான காவல் காத்தனர்.

பாகுபலி வெகு உற்சாகமாக வீட்டை அலங்கரித்தார். வாசலில் பெரிய பந்தலைப் போட்டார்.

தை பிறந்தது; முகூர்த்த நாள் வந்தது. வேங்கடபதி மாப்பிள்ளைக் கோலம் பூண்டான். ஜிலு ஜிலுவென்று ஒரு பர்லாங் டால் அடிக்கும் பொன்முடி, வைரமாலைகள், ரத்ன கடகங்கள், ஜரிகை அணிகள் எல்லாம் பூண்டு யானை மேல் அம்பாரி வைத்து ஏறினான்; மேளதாளங்கள் திசை பிளக்கின்றன; தவில்காரன் ஊர் அதிரும்படி அடிக்கிறான்; தாஸிகள் சதிராடுகிறார்கள்; தாஸர்கள் பலமான 'ஜய பராக்' போடுகிறார்கள். 'பட் பட்' என்று குதிரைப் படை வருகிறது. 'ஜல் ஜல்' என்று சதங்கை யதிரக் காலாட் படை நடக்கிறது; மத்தாப்பு, தீவட்டிகள் இரவைப் பகலாக்குகின்றன. அடிமைப் பெண்கள் அட்டமங்கலம் ஏந்தி வருகின்றனர். பவனி தடபுடலாக ஜைனத் தெருவில் புகுந்தது.

'பூம் பூம்' என்று வாத்தியங்கள் எதிரொலித்தன......மாப்பிள்ளையை எதிரழைக்க ஒருவரும் வரவில்லையா?......அதோ நாலைந்து வெள்ளி மூக்குக் குதிரைகள்! அவையும் தமது காம்போதியைக் கிளப்பிவிட்டுக் கூட்டத்தில் இடித்துப் புகுந்து ஓடின.

பாகுபலி வீட்டுமுன்னே பவனி வந்துவிட்டது; அரசன் அம்பாரியிலிருந்து இறங்கினான். பந்தலுள் அடியெடுத்து வைத்தான்:

'ஊழ்! உள்! உள்! வவ் வவ் வவ்......' என்று ஒரே சத்தம்...என்ன இது! வேட்டை நாய்! மாப்பிள்ளையை வரவேற்கிறது! எங்கே பாகுபலி?......தெரியாது. எங்கே சந்தனை?....தகவலில்லை.....எங்கே ஜைனர்?...எங்கே பிராமணர்?... வீடெல்லாம் பூட்டி யிருந்தன. தெருவெல்லாம் வெறுமை. நாய் மட்டும் விடாது தனது வரவேற்பை நடத்தியது......பாவம், அதற்கும் பசி! அரசனுக்கு வெகு கோபம்...'இருக்கட்டும்' என்று பல்லைக் கடித்தான். நாயை எரித்து விடுவது போலப் பார்த்தான். அதன் கழுத்தில் ஓர் ஓலை கட்டியிருந்தது; அவிழ்த்துப் படித்தான்:

"நாயக்கருக்குச் சரியான பொருத்தம்! வருக!!" என்றெழுதியிருந்தது.

அரசனுக்குச் சினம் பொங்கியது. ஜைன சமுதாயத்தையே அழித்து விடுவதாகக் கிளம்பினான் ...திரும்பினான்.

ஒரு படை அவனைச் சூழ்ந்து நின்றது; விஜய நகரத்திலிருந்து ஓர் ஓலை வந்தது. பிரித்துப் பார்த்தான். "நீதி தப்பி இப்படிப்பட்ட காரியம் செய்வது நமது ராஜ்யத்துக்கே அபகீர்த்தியாகும். அந்தணரிடமும் ஜைன சமுதாயத்திடமும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு நமது சட்டதிட்டங்களை உண்மையாகப் போற்றிச் செஞ்சியைக் காக்கவேண்டியது. இன்றேல் வெளியேற வேண்டியது"—இது வேராயர் உத்தரவு. உத்தரவு கொண்டு வந்தவர் யார்? அதே சங்கரியின் கணவன்.

சங்கரியும் பெற்றோருடன் கணவனைத் தேடிச் சென்றாள். கணவர் ஹம்பியில் இருந்தார். அவர் பெரிய வேத வித்வான். அவருக்கு ராயர் மரியாதை செய்தார். சங்கரி செஞ்சியில் நடக்கும் நாயக்கர் தர்பாரைப்பற்றி முறையிட்டாள். ஒற்றர் மூலம் உண்மையறிந்து, ஓலையனுப்பி "அந்தணர்களே! தைரியமாயிருங்கள்" என்று நாயக்கரும் அபயமளித்தார். ஜைனர் சித்தாம்பூருக்கும் உடையார் பாளையத்துக்கும் சென்று பாதுகாப்புடன் வாழ்ந்தனர். பாகுபலியின் மகளுக்கு அதே நாள் சித்தாம்பூரில் விவாகம் நடந்தது.

இச்சம்பவத்துக்குப் பிறகு, வேங்கடபதி கிருஷ்ண நாயக்கர் மன்மத பாணத்தை மனவுறுதியால் முறித் தெறிந்தார். பரஸ்திரீகளை நினைக்கும்போது, அவர் மனமே வேட்டை நாயாகி "வள் வள்" என்று பிடுங்கும். அன்று முதல் அவர் அந்தணரைக் கௌரவித்தார். சங்கரியின் கணவனே இப்போது அவருடைய புரோகிதர். அவருடைய உபதேசங்களைத் தினம் கேட்டுப் பித்தந் தணிந்து, மன்னனின் மனம் பக்தி மார்க்கத்திற் சென்றது.

விகடரின் சந்தேகம்

நெஸ்டிராவ் என்ற விகட ஆசிரியர் ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னா வாசி. அவர் ஒரு நாள் மிக விசனமாய் உட்கார்ந்திருந்தார்.

"ஏன் இப்படி விசனமா யிருக்கிறீர்கள்?" என்று ஒரு நண்பர் கேட்டார்.

"தன் மனைவியுடன் நான் வைத்துக்கொண்டிருக்கும் சம்பந்தத்தை நிறுத்தாவிட்டால், என்னைக் கொலை செய்வதாக, ஒருவன் அநாமதேயக் கடிதம் எழுதியிருக்கிறான். அதுவே என் விசனத்துக்குக் காரணம்" என்றார் நாடகாசிரியர்.

"அந்த ஸம்பந்தத்தை விட்டொழித்து விட்டால் போகிறது. உயிரைவிடக் காதல் பெரிதா?" என்றார் நண்பர்.

"அது சரிதான். ஆனால், கடிதம் அநாமதேயமா யிருக்கிறதே! எவன் மனைவி என்றே எனக்குத் தெரியவில்லையே? என்ன செய்வேன்!" என்று ஏங்கினார் நெஸ்டிராவ்.

* * *

அதிசய வியாஜ்யம்

ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த லாஸ் ஏஞ்செல்ஸில், 56 வயதுடைய ஸாமுவேல் பம்மெல் என்பவன், தன் மனைவிமீது ஒரு வழக்குத் தொடர்ந்திருக்கிறான்.

வழக்கின் சாராம்சம் இதுதான்:—"என் மனைவி என்னை மற்றொரு ஸ்திரீக்கு ஒரு வருஷகாலம் விட்டு, அதற்கு 3,000 பவுன் வாடகை வாங்கி யிருக்கிறாள். அதில் பாதி எனக்குக் கிடைக்க வேண்டும்."

சிறு கதை:

சின்ன முதலாளி!

[புத்தனேரி ரா. சுப்பிரமணியன்]

முதலாளியின் மகன் சின்ன முதலாளியானுன். ஆனுல், அந்தச் சின்ன முதலாளி சிருஷ்டியானதுதான் விந்தை. இந்தப் புதிய சின்ன முதலாளி, எப்படித் தோன்றினுர்? ஏழை முருகனது தியாகத்திலே தோன்றினுர். அந்த ஏழை முருகனே..........

சிவதாணு என்பவர் சீரும் சிறப்புமுற்றதொரு செல்வந்தர். ஏழைகளுக்கிரங்குங் குணமுடையவர். அவர் அன்புக்கடல்; அறிவுச் சுடர்; ஆண்மைக்கொழுந்து. முருகன் என்பவன் அவருக்கொரு பாதுகாவலனுகவும் ஏவலாளாகவும், தன் சிறுவயது முதலே, அவரது வீட்டில் இருந்து வந்தான்.

முருகன் மிகவும் நல்லவன்; நன்றியறிதலுடையவன். சிவதாணுவிடம் அவனுக்கு அளவுகடந்த அன்பு; சிவதாணுவோ, முருகனைக் காணும்போதெல்லாம், மலர் முகத்தோடும் மதுர மொழியிலும், அன்பு கமழப் பேசி வருவார்.

சிவதாணுவுக்கு இல்லறத் துணைவியாக அமைந்தவள் கனகவல்லி என்னும் நங்கை. காதலரிருவரும் கருத்தொருமித்து வாழ்க்கை நடத்தி வந்தனர்.

சில நாளில் கனகவல்லி கருத்தரித்து, ஓர் ஆண் குழந்தை பெற்றெடுத்தாள். குழந்தை பிறந்த பதினைந்தாம் நாளிலிருந்து முருகனுக்கு அதனிடம் பழக்க முண்டாகி வளர்ந்தது.

நாள் செல்லச்செல்ல, முருகனுக்கும் குழந்தைக்குமிடையே அன்பு வளர்ந்துகொண்டே வந்தது. முருகனை விட்டுப் பிரியக் குழந்தை விரும்பாது; குழந்தையைப் பிரிந்திருக்க முருகன் சம்மதியான். முருகன் குழந்தையை எடுத்து மடிமீது வைத்துக்கொள்வான்; முகத்தை நோக்கிச் சிரிப்பான்; “பாப்பா!......பாட்டுப் பாடட்டுமா?...” என்று கேட்பான்.

“ஓடி விளையாடு பாப்பா!—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!
கூடி விளையாடு பாப்பா!—ஒரு
குழந்தையை வையாதே
பாப்பா!”

எனப் பாடுவான். பாட்டுக்குத் தக்கபடி அபிநயமுங் காட்டுவான். உடனே குழந்தை மகிழ்ந்து சிரிக்கும்; கைகளையும் கால்களையும் மடக்கி, நீட்டி, ஆட்டி, ஆனந்தக் கூத்தாடும். அதைக் கண்டு முருகன் மகிழ்ச்சியோடு, “என்ன! **சின்ன முதலாளி!**... சைக்கிள் ஓட்டுகிறீர்களா?” என்று கேட்டுக்கொண்டே, சிரித்த முகங்கள் இரண்டும் ஒன்றுசேர, ஓர் இனிய முத்தங் கொடுப்பான்.

குழந்தை தன் தாயாகிய கனகவல்லியின் இடுப்பிலிருந்துகொண்டு வீறிட்டழுதாலுங்கூட, முருகன் சென்று, “சின்ன முதலாளி!... இதோ பாருங்கோ......” என்ருல், குழந்தை அழுகையை விட்டு ஆனந்தங்கொள்ளும்.

குழந்தைக்கு வயது இரண்டு. முன்பே அதற்குத் தாய்தந்தையரிட்ட பெயர் சம்பந்தம் என்பதாகும். ஆனுல், முருகன் எப்பொழுதும், “சின்ன முதலாளி!...சின்ன முதலாளி!!” என்றே அழைப்பான். சம்பந்தமோ, முருகனிடம் “பாப்பா!...பாப்பா!!” என்று மழலை மொழியில் பேசும். “பாப்பா!......பாப்பாப் படி!” என்று குழந்தை மழலை மொழியில் கூறும்பொழுது, முருகன் “ஓடி விளையாடு, பாப்பா!” என்னும் பாரதி பாட்டைப் பாடி மகிழ்விப்பான்.

குழந்தையோடு தானும் ஒரு குழந்தையாகவே நினைத்து முருகன் விளையாடுவான். தான் குதிரைபோல் குனிந்துகொள்வான். குழர்ந்தை அவன் முதுகின் மீது ஏறி, ‘ஹை!—ஹை!......” என்று சவாரி செய்யும். குழந்தை சொல்லுவதை எல்லாம் ‘சின்ன முதலாளி’ என்ற முறையில் பயபக்தியோடு செய்து முடிப்பான் முருகன்.

குழந்தைக்கு வயது மூன்றிருக்கும். ஒரு நாள் குழந்தையின் தந்தை குழந்தைக்கு ஒரு பெட்டக வண்டி வாங்கி வந்தார். நான்கு சக்கரங்களோடு கூடிய அவ்வண்டியில் தொட்டிபோன்ற இருக்கை ஒன்றுண்டு. முருகன் அந்த இருக்கையில் குழந்தையை வைத்து, மாலையில் வெகு தூரம்வரை தள்ளிக்கொண்டு போவது வழக்கம்.

இவ்வாறு வழக்கம்போல் முருகன் பாலனை வண்டியில் வைத்துத் தள்ளிக்கொண்டு செல்லும்பொழுது, ஒரு நாள் தென்றலின் இனிமையால் உளமகிழ் பூத்து, இருவரும் சாலை வழியாகவே ஊருக்கு வெகு தொலைவிலுள்ள நதிப்படுகையை அணுகினுர்கள்.

மாலையில், அந்நதிப் படுகையின் எழிலை என்னென்று கூறுவது! கதிரவன் தன் பொற் கதிர்களைப் பரப்பி, படுகையில் காணும் மணல் வெளியையும் பொன்னிறமாக்கினுன். தென்றல் வீசவே, தேமா பலா முதலிய நன்மரங்கள் தளிர் காட்டித் திருந்தின. வெகு தொலைவில் நீல நிறத்தோடு இலங்கிய வானை அணைத்து முத்தமிட்டாற் போல, ஒரு மலைப் பகுதி தோன்றுகிறது. மிகவும் ஆழமான அவ்வாற்றின் நீரோ, கருப்பஞ் சாற்றினைப்போல் தெளிந்து, விரைந்து ஓட, தென்றலினுல் சிற்சில அலைகள் உந்தப்பட்டு மணற்கரையை வந்து தொட்டுக் கொஞ்சித் திரும்புகின்றன. வெள்ளி மீன்கள் நீரில் துள்ளி விளையாடுகின்றன. புள்ளினங்கள் தத்தம் கூடுகளில் போய் அடைகின்றன. நதியை அடுத்துள்ள ஒரு புல்தரைப் பாங்கினில் ஓர் அழகிய கொன்றை மரம், செந்நிறத்தோடும், பொன்னிறத்தோடும் கூடிய பூக்களைச் சொரிந்து நிற்கிறது.

பாலனும் முருகனும் இவ்வியற்கை யழகிலீடுபட்டு, நதிக்கரையில் வந்து நின்றுர்கள். பாலன் வண்டியினுள் மகிழ்வுடனிருந்தான்.

திடீரென்று, குழந்தையின் கபடற்ற கண்களைக் கவர்ந்தன வர்ணப் பகட்டுடைய கொன்றை மலர்கள். உடனே, “பாப்பா!

...பூ !...பூ !...... அந்த...பூ !......" என்று தன் விரலினல் சுட்டிக் காட்டிக்கொண்டே, கதறினர் சின்ன முதலாளி !

கொன்றை மரம் இருந்த இடத்துக்கும், பாலன் இருந்த இடத்துக்கும் இடையில் சேறுள்ள பாதையாக இருந்ததாலும், கொஞ்சம் தூரமாக இருந்ததாலும், வண்டி போக முடியா தாகையாலும், முருகன் குழந்தையின் எண்ணத்தை வேறு வகையில் திருப்ப எண்ணி, "சின்ன முதலாளி!......அதோ பாருங்கோ !......... காக்கா !...... குருவி !...

சின்னஞ் சிறு குருவி போலே—நீ
திரிந்து பறந்து வா பாப்பா !
வன்னப் பறவைகளைக் கண்டு-நீ
மனத்தில் மகிழ்ச்சி கொள்ளு
பாப்பா !"

என்றெல்லாம் பாடி, குழந்தையை ஏமாற்றப் பார்த்தான். பாலனை ஏமாற்ற முடியுமா? அறிவுக் கூர்மையுள்ள குழந்தை யன்றோ நம் சின்ன முதலாளி? ஆகவே, குழந்தை, பாட்டைக் கேட்டுத் தலையை ஆட்டி ஆட்டி இன்புற்று, பின்னும் மறக்காமல், கை விரலைச் சுட்டி, முன் போலவே, "பாப்பா !...பூ !...பூ !..." என்று மறுபடியும் அழ ஆரம்பித்தது.

என்ன செய்வான் முருகன்? "குழந்தையை மகிழ்விக்க வேண்டுமே !...ஐயோ ! ஏமாற்றவும் முடிய வில்லையே" என்றவருத்தத்துடன் ழுந்தையை நோக்கி, "சின்ன முதலாளி!...வண்டிக்குள்ளேயே இருங்கோ! நான் போய்ப் பூப்பறித்துக் கொண்டு வாரேன் ! கீழே இறங்கக் கூடாது..." என்று கூறிவிட்டுச் சேற்றில் இறங்கிக் கொன்றை மரத்தை நோக்கி மிக்க சிரமத்துடன் சகதியில் காலை ஊன்றி மெதுவாக நடந்தான்.

இங்கிலையில், குழந்தை மெல்லெனெ வண்டியை விட்டிறங்கி, ஆடிக் கூத்தாடிக்கொண்டு நீர்க்கரையை அடைந்தது ; மகிழ்ச்சியோடு குனிந்து பார்த்துக்கொண்டே நின்றது. தெள்ளிய தண்ணீரில் மீன்கள் துள்ளித்துள்ளி, குழந்தையை எள்ளி நகையாடுவது போல் விளையாடின. நீரில் தோன்றிய அலைகளோ, 'விலை உயர்ந்த பொன்னணிகளைப் பூண்ட பாலனைக் காணுவோம்' எனக் கரையை அடைவனபோல் மோதின. குழந்தை பெரிய செல்வந்தரின் புதல்வனுகையால், விலையுயர்ந்த அணிகள் அணிந்திருந்தது வியக்கத்தக்க தல்லவே !

நீரில் நடக்கும் விளையாட்டுக்களை யெல்லாம் வியப்போடு பார்த்து நின்ற குழந்தை "இவையெல்லாம் என்னை 'இங்கே வா ! வா !...விளையாட வா !...' என்று கூப்பிடுகின்றனவே !..... முருகன் பூப்பறித்து வருமுன், இவைகளுடன் விளையாடிவிட்டு வருவோமே !" என்று மனதில் நினைத்துக்கொண்டது.

"இதோ வருகிறேன் !...இதோ வருகிறேன் !..." என்று சொல்லுவதுபோல் எண்ணிக்கொண்டு, திடீரென நீரினுள் பாய்ந்தது.

ஐயோ! நதி ஆழமாயிற்றே ! வேகமாக ஓடிக்கொண் டிருக்கிறதே ! இதையெல்லாம் குழந்தை அறியுமா? ஆஹா ! என்ன அழகான குழந்தை ! அன்பான சிறுவன் ! மாசற்ற பாலன் ! கொடிய நதி இரையாகக் கொண்டதே ! கடவுளே! இந்தக்களங்கமற்ற உயிரையா போக்கவேண்டும் ! உடன் வந்த முருகன் எங்கே தேடப் போகிறானே? அடடா ! என்ன பரிதாபம் ?

பூக்கொய்து திரும்பினன் முருகன். வண்டியை நோக்கினன் ! குழந்தையைக் காணோம் ! "ஆ !...எங்கே ?...எங்கே ?...என் முதலாளி எங்கே !...சின்ன முதலாளி எங்கே !...... சின்ன முதலாளீ ! சின்ன முதலாளீ !!...எங்கிருக்கிறீர்கள் ?......உங்கள் முருகனைத் தவிக்கவிட்டு எங்கே சென்றீர்கள் ?......முதலாளீ ! ...... முதலாளீ ! ! ...சி......ன்ன...மு ..த...... லா...ளி......!" கீழே விழுந்து மூர்ச்சையானன். துக்கம் சகியாது கதிரவனும் மேற்றிசை அடைந்தான்.

இருள் சூழ்ந்தது ! அவ்விருள் முருகனது வாழ்க்கையின் ஒளியையே போக்கச் செய்த பேரிருளாய் மாறியது. மூர்ச்சை தெளிந்து எழுந்தான் முருகன் ! வழி தெரியவில்லை...."சின்ன முதலாளீ !...சின்ன முதலாளீ !!...... ..." என்று ஓலமிட்டான். இவ்வோலத்தின் எதிரொலியானது "பாப்பா !...பாப்பா !......" என்று குழந்தை கூப்பிடுவது போல் முருகன் காதில் பட்டது ! புத்தி கலங்கிற்று !

முருகன் கதறிக்கொண்டே ஓடினன் ; தேடினன் ; மரத்தோடு சாடினன் ! "சின்ன முதலாளீ !" என்று கதறினன். "ஏ, மரக்கூட்டங்களே !..... என் சின்ன முதலாளி எங்கே ?......ஏ, மையிருள் கொண்ட வானமே! நீயறிவாயா? ......ஏ, பறவைகளே ! பாலனைக் கண்டீர்களா ?..." என்றெல்லாம் உளறினன். என்ன செய்வான் இனி ?

'ஆண்டாண்டு தோறும் அழுது
புரண்டாலும்
மாண்ட குழந்தை மீண்டு வருமா?'

குழந்தை மாண்டது என்பதை முருகன் அறிய மாட்டானே ! முருகன் பரிதவிக்கிருன் ! "சின்ன முதலாளீ ! சின்ன முதலாளீ !!" என்று கதறி ஓடுவான் ! சிறிது நிற்பான் ! வந்த வழியே திரும்புவான் ! பள்ளந் தெரியாது விழுவான் ! பின் எழுவான் ! மேடு தெரியாது தடுக்கிக் கவிழ்வான் ! "சின்ன முதலாளி !" என்று எழுவான். நேரம் ஆக, ஆக, உலகமானது முருகன் கண்ணுக்கு மிக்க விரைவுடன் சுழல ஆரம்பித்தது.

"கருணையங் கடவுளே ! எனது சின்ன முதலாளியைக் காணவில்லையே !...அவர் எங்கே சென்ருர்? அடியவர்க் கிரங்கும் அன்புருவான அண்ணலே !...என் பெரிய முதலாளியிடமும் அம்மாளிடமும் என்ன பதில் சொல்லுவேன் ?... ஈசா ! ஏழையின்பால் கருணையில்லையா ?......" என்று துதித்துக்கொண்டே, இரவு முழுதும் தேடினன் ! பொழுதும் புலர்ந்தது.

குழந்தையையும் முருகனையும் காண வில்லையே என்று சிவதாணுவும் அவருடைய மனைவியும் மனம் வருந்திப் பற்பல ஏவலாளரை விடுத்து நாலு திசையிலும் தேடுவாராயினர். பணியாளரில் சிலர், முருகன் கதறிக் கொண்டிருக்கும் திசையில் வந்தார்கள்.

சிறிது தூரத்தில் "சின்ன முதலாளீ! சின்ன முதலாளீ !" என்ற குரல் வேலையாட்களின் செவியிற் பட்டது. ஒலி கேட்ட திக்கில் ஓடினர்கள். பித்தம் பிடித்தவனைப் போல் உளறிக்கொண்டு கதறிய முருகனைக் கண்டார்கள்.

"முருகா!...குழந்தை எங்கே?" என்று பன்முறையுங் கேட்டார்கள்.

முருகனே ஏதும் அறியாதவனாய்ப் புலம்பினன். "சின்ன முதலாளி!......சின்ன முதலாளி!" என்ற சொல்லையே திரும்பத் திரும்பக் கூறினன். வேலையாட்கள், அவன் மூலம் ஒன்றும் அறிந்து கொள்ள முடியாததால், அவனைக் கூட்டிச் சென்று, சிவதாணுவிடம் ஒப்புவித்தார்கள்.

சிவதாணு முருகனிடம் திரும்பத் திரும்பக் "குழந்தை எங்கே?...... எங்கே?" என்று வினவியும், அவன் தன்னுடைய பல்லவியையே பாடினன். இதனைக் கண்ணுற்ற முதலாளி மிக வருந்தி, "சிறுவனை முருகன் இழந்துவிட்டான்" என எண்ணித் திகைத்திருந்தார். கன்னங்களிரண்டிலும் கண்ணீர்ப் பெருக்கோட, சிவதாணு ஆழ்ந்த சிந்தனையிலும் ஆருத் துயரத்திலும் மூழ்கி யிருந்தார்.

திகைத்துப் புலம்பிய முருகனைக் கண்ணுற்ற கனகவல்லி, முருகன் மீது ஐயுற்று, அவனது நற்குணத்தையும் மறந்து, கோபமாக, "ஏண்டா முருகா!......என் பிள்ளை எங்கே?......எங்கே! நகைக்கு ஆசைப்பட்டுக் கொன்றது மல்லாமல், தெரியாதவன் போலப் பாசாங்கும் பண்ணுகிருயா?...... சீச்சீ! போ வெளியே......என் பிள்ளையைக் கூட்டிக் கொண்டு வந்தால் இங்கே வா! இல்லையானல் என் வீட்டை மறந்துவிடு!......" எனப் படபடத்துப் பேசினள். அவளுடைய சொற்களெல்லாம், முருகனுக்கு, நொந்த புண்ணில் கோலிட்டுக் குத்துவது போலப் பெருந்துயர் அளித்தன. இரு செவிகளையுங் கரங்களால் பொத்திய வண்ணமே, தன் உடையெல்லாம் கண்ணீரினல் நனைவுறப் புலம்பிய நிலையிலேயே, திரும்பிப் பாராமல் வெளிச் சென்ருன் முருகன்.

மனைவியின் அவசர புத்தியைக் கண்டு வருந்திய சிவதாணு ஒன்றுங் கூற வகையறியாராய்ப் பித்தப் பிரேமை கொண்டிருந்தார்.

"முதலாளி..." என்று கதறிக் கொண்டே தனது ஊரை யடைந்த முருகன், தனது தமக்கையாரின் ஆறுதல் மொழிகளால் சிறிது வருத்தம் நீங்கி யிருக்கும்போது, தன் தமக்கையாரின் வேண்டுகோளுக் கிணங்கி, தான் திருமணம் செய்து கொண்டான். அவன் மனைவியும் மிக நல்லவளாய் அமைந்தாள்.

முருகனின் மனைவி, அவர்களுடைய திருமணம் நடந்த மறு வருஷத்திலேயே ஓர் ஆண்மகவைப் பெற்ருள். பின்னும், அவன் தன் சின்ன முதலாளியை மறந்தானில்லை.

முருகன், தன் குழந்தைக்கும் சம்பந்தம் எனவே பெயரிட்டான். தன் சின்ன முதலாளி போலவே இதுவும் இருக்கக் கண்ட முருகன், இக் குழந்தையையும் "சின்ன முதலாளி!" என்றே அழைக்கலானன்.

குழந்தைக்கு வயது இரண்டு. முன்போலவே தன் குழந்தைக்கும் "ஓடி விளையாடு பாப்பா!" என்னும் பாரதியார் பாட்டைப் பாடிக் காண்பிப்பான். இதுவும் சின்ன முதலாளி போலவே சிரித்து விளையாடி வருவதைக் கண்ணுற்ற முருகன், தனது மாசற்ற உள்ளத்தினல் "எங்க சின்ன முதலாளிதான் என் குறையைத் தீர்ப்பதற்காக என் வீட்டில் வந்து மறுபிறப்பு எடுத்திருக்கிருர்கள்" என்று கூறி மகிழ்வான். முன்னைய மகிழ்ச்சி திரும்பவும் மலர்ந்தது. இவ்வித மிருக்கையில் முருகனின் மனைவி உயிர் நீத்தாள்.

குழந்தைக்கு வயது ஐந்தாயிற்று. தன் ஊரை அடுத்திருக்கும் பட்டணத்தில் குழந்தையைப் படிக்க வைத்தான். தான் பலரிடமும் வேலை பார்த்து அதனல் கிடைக்கும் செல்வத்தைக் கொண்டு குழந்தை சம்பந்தனைக் கல்வியில் வல்லவனுக்க முயன்ருன். ஆனல், எப்பொழுதும் குழந்தையைச் "சின்ன முதலாளி!..." என்றே கூப்பிடுவான். "சின்ன முதலாளி! நீங்கள் பள்ளிக்கூடத்துக்குப் போங்கள். நான் சென்று என் வேலையைப் பார்த்து வருகிறேன்" என்று, அன்பின் பெருக்கால் கூறிச் செல்வான். முருகன் பார்வைக்கு ஒரு வேலையாள் போலக் காணப்பட்டதாலும் எப்பொழுதும் "சின்ன முதலாளி" என்று மரியாதையாகத் தன்னை அழைத்ததாலும், அவனைக் குழந்தை சம்பந்தன், தன் வேலைக்காரன் எனவே மதித்தான். முருகனும் அவனது ஏவலுக்குத் தக்கவாறு நடந்து வந்தான்.

சம்பந்தனுக்கு வயது பதினறு நிரம்பியது. பத்தாவது வகுப்பில் தேறினன். தன்னை அழகாக அலங்கரித்துக் கொள்வான். பார்வைக்கு ஒரு பெரிய செல்வந்தனின் புதல்வன் போலவே உடை யணிந்து கொள்வான்.

பையனது மேற்படிப்புக்குப் பணம் கொடுக்க முருகனல் முடியவில்லை. பாவம்! எத்தனை நாளைக்குத்தான் முருகனல் உழைத்துப் பொருள் கொடுக்க முடியும்? வயதோ ஐம்பதுக்கு மேலாகிவிட்டது. பையனே முருகனிடம் பணங்கேட்டுத் தொந்தரை செய்ய ஆரம்பித்தான்.

முருகன் வெகுநாட்களாக, எப்படியாவது தன்னுடைய பெரிய முதலாளியாகிய சிவதாணுவிடம் அவருடைய புதல்வனை ஒப்புவிக்க வேண்டு மென்று எண்ணியிருந்தான். அவனுக்கு மறுபிறப்பு என்பதி லிருந்த நம்பிக்கையால், தன் சின்ன முதலாளியே தன் வீட்டில் மறுபிறப் பெடுத்திருக்கிருர் என்ற நம்பிக்கை வலியுறவே, தான் வளர்த்து வந்த சம்பந்தனைத் திரும்பவும் சிவதாணுவிடம் சேர்க்கவேண்டு மென் றெண்ணினன்.

இந்நிலையில் சிவதாணுவும் திருச்சியில் பிரபல நீதிபதியானர். இதைக் கேள்வியுற்ற முருகன் திருச்சிக்குச் சென்று, தன் முதலாளி வீட்டை அடைந்தான்.

சிவதாணுவோ முருகனின் முகத்தை ஞாபகப்படுத்திக் கொண்டு, மிக்க அன்புடன், "முருகா! வா!...வா! இரு... சௌக்கியமா?..." என்றெல்லாம் பரிந்து வரவேற்ருர். கனகவல்லியும் முருகனைப் பார்த்து, "முருகா!......வா!...... ரொம்ப நாளாச்சே!.........சுகந்தான?... ...உம்.........ம்......குழந்தைதான் போன இடம் தெரியவில்லை!..." என்று பெருமூச்சு விட்டாள்.

முருகன் அவ்விருவர்களையும் நோக்கி, "அன்பில் சிறந்த முதலாளி!....அம்மையே!...உங்கள் குழந்தையைத் திருடினவன் நானே!...இப்பொழுது சென்னையில் படித்துக் கொண்டிருக்கிருர் என் சின்ன முதலாளி..." என்று கூறினன்.

சிவதாணுவின் முகத்தில் அப்பொழுது தான் சினம் மூண்டது. "முருகா !...முருகா !....என்ன?... நீ திருடனா ?...உண்மைதானா...... அப்படியானால் குழந்தையைக் கொண்டுவந்து சேர்த்துவிட்டு, என் கண்முன் நில்லாது போய் விடு !........." என்று வெகுண்டு கூறினார்.

மறு ஞாயிற்றுக்கிழமை, சம்பந்தன் என்னும் வாலிபனோடு நீதிபதி வீட்டுக்கு முருகன் வந்தான். தன் மகளைப் போலவே அவ்வாலிபனின் முகச்சாடை இருக்கக் கண்ட கனகவல்லி, மிக மகிழ்வுடன், "அப்பா !....சம்பந்தா !.... என் கண்ணே!...எத்தனை நாட்கள் உன்னைப் பிரிந்திருந்தேன் !......" என்று வரவேற்றுப் பரிவுடன் தன்னருகில் இருத்திக்கொண்டு அளவளாவினாள்.

இதையெல்லாம் கண்ணுற்ற நீதிபதியான சிவதாணு ஒன்றுங் கூற அறியாதவராய், வியப்புடன் திகைத்திருந்தார்.

முதன் முதலில் தான் வரும் பொழுது, சிவதாணு வெகுண்டு, "அப்படியானால் குழந்தையைக் கொண்டு வந்து சேர்த்துவிட்டுப் போய்விடு !" எனக் கூறியதை நினைந்து நினைந்து, முருகன் கண்ணீர் பெருக்கிய வண்ணமாகவே, வெளிக் கிளம்பினான்.

நீதிபதியும் மனைவியும் "முருகா! ...போகாதே !...இங்கேயே இரு ! ...நடந்ததை எல்லாம் மறந்துவிடு ! ..." என்று கூப்பிட்டும், திரும்பிப் பாராமலே நடந்து, அவன் தன் ஊரை யடைந்தான்.

என்றாலும், சிவதாணு, முருகன் மீதுள்ள அன்பினால் மாதந்தோறும் அவனுக்குக் கொஞ்சம் பணம் அனுப்பி வந்தார். ஒரு தடவை அனுப்பிய பணம் திரும்பி வந்தது. ஐயோ பாவம்! முருகன் இறந்துவிட்டான் போல் இருக்கிறது !...அன்று, நீதிபதியின் வீட்டில் பெரிய துக்கம் !..."என்னைத் தன் சொந்தக் குழந்தைபோல் வளர்த்தான், அப்பா, அந்த வேலைக்கார முருகன். என்னவோ, இவ்வளவுதான் வாழ்வு !" என்று, தந்தைக்கு ஆறுதல் கூறினான் புதிய சின்ன முதலாளி. ஆமாம் ; 'வாழ்வாவது மாயம்'தானே !

பாலர் பாட்டு :

மலர்

[வித்வான் சு. உமைதாணுபிள்ளை]

மலரே ! உன்றன் வாழ்க்கையினை
மறையா தெனக்கு முரைப்பாயே.
அலர உன்னைச் செய்தவரார்?
அரிய மணமு மளித்தவரார்? 1

பலபல வர்ணம் தீட்டியதார் ?
பார்க்கப் பகட்டாய்ப் படைத்தவரார் ?
கலகல வென்று சிரித்திடவே
கற்று நிதமும் கொடுப்பவரார் ? 2

அரித்த நல்ல பூம்பொடியை
அழகா யுடலில் பூசியதார் ?
சிரிக்கு முன்றன் செவ்வாய்க்கே
சீத வமுதம் வார்ப்பவரார் ? 3

மோகங் கொண்டவர்க் கன்பாக
முத்த மீயச் சொன்னவரார் ?
தேக மதனை உலகுக்காய்த்
தியாகம் செய்யச் செப்பியதார் ? 4

பாலர் கதை :



பனி முத்தும் வைரமும்

ஒரு தோட்டத்தில் ஒரு வைரக்கல் கிடந்தது. அது ஒரு சீமாட்டியினுடையது. ஒரு காலத்தில் தன் கை மோதிரத்திலே அவள் அதைப் பதித்திருந்தாள். அவள் உல்லாசமாய் இங்கே ஒருநாள் உலாத்தினாள். அப்போது இது பெயர்ந்து விழுந்து விட்டது. அவள் கவனிக்க வில்லை.

இந்த வைரக் கல்லுக்குப் பக்கத்தில் ஒரு பூஞ்செடி நின்றது. அந்தச் செடியின் ஓர் இலையில் பனி ஜலம் ஒரு முத்தாகத் திரண்டு ஜொலித்தது.

அந்தப் பக்கமாக ஒரு பொன் வண்டு வந்தது. வைரம் 'ஜிலு ஜிலு' என்று டால் வீசியது. பொன் வண்டு ஆச்சரியப்பட்டது. "அண்ணா! நமஸ்காரம்" என்று சொல்லி, வைரத்தை வண்டு நமஸ்கரித்தது.

வைரம் ரொம்பக் கர்வத்தோடு, "மக—ராஜனா—யிரு" என்றது.

வண்டு திரும்பியது. பனி முத்தைக் கண்டது. அதையும் நமஸ்கரித்து, "அண்ணா! அதோ மேல் எல்லாம் பட்டை போட்டுக் கொண்டு பளபளக்கிறாரே? அவர் யார்? உங்கள் சொந்தக்காரரா?" என்று கேட்டது.

பனி முத்து பதில் சொல்ல வில்லை. அதற்குள் வைரத்துக்குக் கோபம் தாங்க வில்லை. "சீச்சீ! யாரைப் பார்த்து என் சொந்தம் என்கிறாய், மூட வண்டே! உன் புத்தி இவ்வளவு தானே இருக்கும். நான் யார், என் கௌரவம் எங்கே? அந்த அற்பப் பனி முத்து எங்கே? நான் ராஜாத்தி காதிலே தொங்குவேன்; ராஜாவின் மார்பிலே தவழுவேன். இந்தப் பனிமுத்து இதோ சாகப்போகிறது. சூரியன் பலமாய்க் காய்ந்தால், அழிந்து போகும். இதை எனக்கு உறவு சொல்லுகிறாயே! போ, போ! உன்னைக் கண்டாலே எனக்கு வெறுப்பா யிருக்கிறது" என்று, வண்டை, வைரம் சீறித் திட்டியது.

"இல்லை, அண்ணா! அழகிலே இருவரும் ஒரே விதமாய்த் தானே இருக்கிறீர்கள். அதனால் தான் அப்படி நினைத்தேன்" என்றது வண்டு.

"அ-ழ-கு! அழகாமே அழகு! போடா அதிகப்பிரசங்கி! அது அழகாயிருந்து தான் யாருக்குப் பிரயோசனம்; ராத்திரி பெய்கிற பனியிலே பிறந்து, விடிந்ததும் உதிக்கும் சூரியனால் சாகிறது. யாருக்காவது, இந்தப் பனி முத்தால் உபயோகம் உண்டா?— அதைப்பற்றி என்னிடம் இனியும் பேசாதே" என்று வைரம் உறுமியது.

"இந்த அகம்பாவியிடம் நமக்கென்ன பேச்சு!" என்று எண்ணி, வண்டும் பறந்தோடி விட்டது.

ஆனால், இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த பனி முத்துக்குத் துக்கம் துக்கமாய் வந்தது. "நிஜந்தானே! நம்மால் யாருக்கு உபயோகம்!" என்று அது நினைத்தது.

இந்த ஸமயம் வானத்திலிருந்து பறந்து வந்தது ஒரு குயில். அது வைரத்தை மூக்கால் கொத்தியது. பிறகு, "தூ" என்று கீழே துப்பி விட்டது. "பூ! இவ்வளவுதானா! உதவாக்கரை வைரம் என்று தெரிந்திருந்தால், நான் இப்படி ஓடி வந்திருக்க மாட்டேனே! பாடிப் பாடி என் தொண்டையெல்லாம் வறண்டிருக்கிறது. சொட்டு ஜலம் வேண்டும். இது ஒரு பனிமுத்தாக இருந்தால், எவ்வளவு உபயோகமா யிருக்கும்!" என்று வருத்தப் பட்டது குயில்.

வைரம் வெட்கத்துடன் தலை கவிழ்ந்து விட்டது. பனி முத்தோ அளவுகடந்த சந்தோஷம் அடைந்தது. தன்னையே தியாகம் செய்து கொண்டு, குயிலின் தாகத்தைத் தீர்க்க எண்ணியது. "தம்பீ! இதோ இருக்கிறேன். என்னை உட்கொள்" என்று, குயிலை அழைத்தது. குயிலும் அதைப் பருகி, விடாய் தீர்ந்தது.

"ஆஹா! என்ன பரோபகாரி இந்தப் பனிமுத்து! தன் உயிரைக் கொடுத்தாவது பிறருக்கு உதவும் உத்தமன் அல்லவா இது! நானும் இதைப் பின் பற்றுவேன். என் ஆயுளெல்லாம் கைமாறு வேண்டாமல் பாடிப் பாடிப் பிறருக்கு ஆனந்த மூட்டுவேன்" என்று முடிவு செய்து, பறந்து கொண்டே குயில் பாடத் தொடங்கியது.

'மாமி'

வான வில் தோன்றும் விதம் : வானத்தில் மேகத்தில் துளிக்கும் தண்ணீர்த் துளியில் சூரிய கிரணம் பாயும் போது, பல வர்ணக் கதிர்களாய்ப் பிரிகிறது. அந்தக் கதிர்கள்தான் **வானவில்** ஆக விழுகின்றன. பட்டையிட்ட ஸ்படிகத்தில் சூரியக் கிரணம் விழுகையில் பல வர்ணம் தோன்றுகிற தல்லவா? அது மாதிரிதான் இதுவும்.

புத்தக உலகம்

சமுதாய ஒப்பந்தம்: மூல ஆசிரியர்: ரூஸ்ஸோ. மொழி பெயர்ப்பாசிரியர்: வெ. சாமிநாத சர்மா. வெளியிட்டோர்: புது மலர்ச்சி நூற்பதிப்புக் கழகம், ரங்கூன். விலை: ரூ. 1—4—0.

'மனிதன் சுதந்திரனாய்ப் பிறந்தான்; ஆனால், எங்கும் விலங்குகளோடு காணப் படுகிறான்' என்று கர்ஜித்த பிரஞ்சு மேதை ரூஸ்ஸோ. அவனுடைய 'சமுதாய ஒப்பந்தம்' ஒரு சிரஞ்சீவி நூல். மகத்தான பிரஞ்சுப் புரட்சிக்காரர்களின் வேதமா யிருந்ததும் அதுவே. 'மானிட ஜாதி தன் உரிமைப் பட்டயத்தை எங்கேயே தொலைத்துவிட்டது. அதைத் தேடிக் கொடுத்தான் ரூஸ்ஸோ' என்றான் ஷேனியர் என்ற பிரஞ்சு அறிஞன். அந்தப் பட்டயம் இதுதான். இந்த அற்புத நூலை, தெளிந்த, வலிமை பொதிந்த, அழகிய தமிழ் நடையில் ஸ்ரீ சர்மா மொழி பெயர்த்திருக்கிறார்.

* *

வாழ்க்கைச் சிற்பம்: ஆசிரியர்: வெ. சாரநாதன், எம். ஏ. வெளியிட்டோர்: நவயுகப் பிரசுராலயம், ஜி. டி., சென்னை. விலை: (குறிப்பிடவில்லை)

மனித வாழ்க்கையைச் சிற்பமாக உருவகித்து, வாழும் முறையை (1) மூலக் கற்பனை (2) சித்திரவாய்ப்பு (3) வர்ணம் (4) சிற்ப ஒருமிப்பு என்ற நான்கு தலைப்புகளில், வெகு அழகாக வர்ணிக்கிறார் ஆசிரியர். சிந்தனை செறிந்த நூல். நடையிலே சில இடங்கள் உளிபடாத வைரம் போலும், மற்றும் சில இடங்கள் கவிதை நயம் படைத்தும் இருக்கின்றன. கருத்துக்களின் அகண்டத்தைத் தாங்க முடியாமல், சொற்கள் திணறும் விந்தையையும் இதிலே காணலாம்.

* *

இந்திய உணவுகளின் மதிப்பு-விட்டமின் சத்துக்களின் அட்டவணை (Table of Indian food Values & Vitamins): வெளியிட்டோர்: அகில இந்தியக் கிராமாபிவிருத்திச் சங்கம், வார்தா, மத்திய மாகாணம். விலை: அணா ஒன்று.

பதார்த்த குண சிந்தாமணி போன்ற பழைய நூல்களில், புரோட்டீன், கொழுப்பு, விட்டமின், கால்ஷியம், இரும்பு சத்து முதலியவைகளின் விகிதங்கள் இல்லை. இந்த ஆங்கில அட்டவணையில் நல்ல ஆராய்ச்சியின் மீது, பற்பல முக்கிய உணவுப் பண்டங்களிலும் அடங்கிய அந்த ஸத்துக்களின் விகிதங்களைக் கண்டு தொகுக்கப் பட்டிருக்கின்றன. ஆரோக்கிய வாழ்வுக்கு அவரவருக்குத் தகுந்த ஸத்துணவு முக்கியமாகும். இந்த அட்டவணை அதைத் தெரிந்து கொள்ள மிக உதவியாகும்.

* *

திருக்கேதார யாத்திரை: ஆசிரியர்: தி. சு. அவினாசிலிங்கம். கிடைக்குமிடம்: சக்தி காரியாலயம், ஜி. டி., சென்னை. விலை ரூ. 1—0—0

கேதார், பத்ரிகாசிரமம் இரண்டு க்ஷேத்திரங்களும் இமயமலையின் உச்சியில் இருக்கின்றன. அவைகளுக்குத் தாம் சென்றுவந்த யாத்திரை அனுபவத்தை ஆசிரியர் விவரிக்கிறார். போகும் வழியில் தாம் கண்ட பல அற்புதக் காட்சிகளையும், தரிசித்த உத்தமர்களையும் மயிர் சிலிர்க்க ஆற்றொழுக்குப் போன்ற நடையில் வர்ணித்திருக்கிறார். யாத்ரா மார்க்கத்தைக் காட்டும் படம், சில காட்சிகளையும் மகான்களையும் எடுத்த போட்டோப் படங்கள், யாத்ரா மார்க்க விவரம், குறிப்பகராதி ஆகியனவும் சேர்க்கப் பட்டிருக்கின்றன. மிகச் சிறந்ததொரு யாத்திரை நூல்.

* *

கோனஷ்டையின் கதைகள்: வெளியிட்டோர்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர். விலை: ரூ. 1—8—0

விகடங்களிலே பலவகை உண்டு. வெறும் பொழுது போக்குச் சிரிப்பு, ஆபாசச் சிரிப்பு, சமூகத்தின் அசட்டுத்தனங்களை அலசும் சிரிப்பு, கருத்துக்களை மோதவிட்டு வேடிக்கை பார்க்கும் சிரிப்பு, வார்த்தைகளைச் செப்படி வித்தை செய்யும் சிரிப்பு—இப்படிப் பலவகை. 'கோனஷ்டை', சமூக அசட்டுத் தனங்களை அலசும் வகையை ஓரளவு சேர்ந்தவர் என்று சொல்லலாம். சில விசித்திரமான சம்பவங்களையும் அவர் சிருஷ்டிக்கிறார். அவருடைய பார்வை ஒரு 'கோனஷ்டை'ப் பார்வைதான். படியுங்கள்; சிரிப்பீர்கள், வாய்க்குள்ளாவது சிரித்துக் கொள்வீர்கள்.

* *

இந்தியா-இலங்கை ஒப்பந்தம்: ஆசிரியர்: கோ. நடேசையர். வெளியிட்டோர்: கணேஷ் பிரஸ், ஹட்டன், ஸிலோன். விலை: சதம் 25.

இலங்கையில் வாழும் இந்தியர்கள் சம்பந்தமாக, சமீபத்தில் இந்திய சர்க்காரின் தூதுக் கோஷ்டியும், இலங்கை சர்க்காரின் பிரதிநிதிகளும் நகல் ஒப்பந்தமொன்றைத் தயாரித்துள்ளார்கள் அல்லவா? அதன் முழு விவரமும் விளக்கமும் தமிழிலே இந்த நூலில் தரப்பட்டிருக்கின்றன.

* *

ப்ரீ இந்தியா வருஷ அனுபந்தம் (Free India: Annual Number): வெளியிடுவோர்: ப்ரீ இந்தியா ஆபீஸ், 32, பிராட்வே, சென்னை. விலை: அணா 2.

'ப்ரீ இந்தியா' வாரப்பத்திரிகை ஆரம்பித்து மூன்று வருஷமாகிறது. அதன் ஆசிரியர் ஸ்ரீ. இ. ஆர். கோவிந்தன் நல்ல திறமையும் அனுபவமும் வாய்ந்தவர். அதற்கொரு சான்றுபோல, இந்த ஆங்கில அனுபந்தம் சிறப்பாக இலங்குகிறது. ஸ்ரீமான்கள் டி. டி. கிருஷ்ணமாச்சாரி, எஸ். ஸத்திய மூர்த்தி, போத்தன் ஜோஸப், ஸ்ரீமதி கமலாதேவி முதலிய பல பிரபலஸ்தர்களின் கட்டுரைகளையும், சில ருசிகரமான கதைகளையும், அழகான பல போட்டோப் படங்களையும் தாங்கி நிற்கிறது இந்த அனுபந்தம்.

எதிர்பாராத விபத்துக்கள் எவ்வளவோ நேரிடலாம். பொழுது விடிந்தால், அஸ்த மித்தால் இந்தக் கார் மோதிக் கொண்டது, அந்தக் கிடங்கு தீப்பற்றிக் கொண்டது என்றெல்லாம் கேள்விப்படுகிறோம். ஒரு சிறு தொகையைப் பிரீமியமாகச் செலுத்தி, எங்கள் பாலிஸி ஒன்று கையிலிருந்தால், இப்படி அகஸ்மாத்தாக நேரிடும் விபத்துக் களினால் எவ்விதமான நஷ்டமும் உங்க ளுக்கு ஏற்படாது. எங்கள் பாலிஸியே உங்களுக்கு ஒரு பெரிய பாதுகாப்பாகும். விவரங்களுக்கு உடனே எழுதுங்கள்.

★

யுனைடெட் இந்தியா

பயர் அண்டு ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி (லிமிடெட்)

யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்ஸ்

எஸ்பிளனேட் :: மதராஸ்

டெலிபோன் : 4241 தபால் பெட்டி நெ. 1207 தந்தி : "யூனிஜென்"

விற்பனைக்குப் புதிதாக வந்துள்ள புத்தகங்கள்

1. அன்பு நிலையம் அல்லது வாழும் வகை

[மனித வாழ்வை அற்புதமான முறையில் சித்தரித்து, எவ்விதம் உன்னத நிலை அடைவதென்பதை சுத்தானந்த பாரதியார் அழகாக வர்ணித்துள்ள மேலான கொள்கையுடைய ஒரு தொடர் கதை.] ரூ. 1-8-0

2. இசை விருந்து

[உயர்ந்த உண்மைகளை ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் சுத்தானந்த பாரதியின் இனிய 20 பாடல்கள் கொண்ட நூல்.] அணா 0-3-0

3. கல்விக் கதிர்

[மேல்—கீழ் நாட்டுக் கல்வி முறைகளைப் பற்றி யெல்லாம் ஆராய்ச்சியுடன் மாணவர்க்கும் ஆசிரியர்க்கும் பயன்படும் முறையில் சுத்தானந்த பாரதியார், தெளிவாக விளக்கி யிருக்கிறார்.] ரூ. 1-8-0

4. தமிழ்க்கனல்

[உள்ளத்திலே புத்துணர்ச்சியையும் புத்தொளியையும் உண்டாக்கி வாழ்வை ஒப்புயர்வற்ற நிலைக்குத்தூண்டும் ஆவேசக் கனல்சிந்தும் சுவாமியின் அருமையான இனிய கீதங்கள் அடங்கிய சிறந்த மலர்.] அணா 0-8-0

5. ஞானோபதேசம்

[ஆத்ம சாதனத்துக்குரிய உயரிய கருத்துக்கள் அடங்கிய, ஸ்ரீமத் பிரம்மாநந்த சுவாமிகளின் ஞானோபதேசம்.] அணா 0-4-0

6. கொனஷ்டையின் கதைகள்

[உல்லாசமாகப் பொழுதைப் போக்க சரளமான நடையில் 'கொனஷ்டை' எழுதிய சிறந்த சிறு கதைகள். வாழ்க்கையோடு ஒட்டிய இக்கதைகளிலே ஹாஸ்யம் ததும்பிக் கொண்டிருக்கிறது.] ரூ. 1-8-0

7. எதிர் பாராத முத்தம்

[சொல்லழகும் பொருளழகும் நிறைந்த இந்த உன்னத சித்திரத்தைத் தமிழர்களுக்கு பாரதிதாஸன் அளித்திருக்கிறார்.] அணா 0-8-0

விரைவில் வெளிவரும்

சக்தி மலர்கள்

☆

1. செல்வம்
   க. சந்தானம் எழுதியது விலை ரூ. 1
2. கமலா முதலிய சிறுகதைகள்
   ஆர். திருஞானசம்பந்தம் எழுதியது விலை ரூ. 1
   ('ஹிந்துஸ்தான்' உதவி ஆசிரியர்)
3. சூரிய நமஸ்காரம்
   டி. வி. திருவேதி எழுதியது விலை ரூ. 1
4. கம்பன் காவிய உலகம்
   ('ஹிந்துஸ்தா'னில் வெளிவரும் ராமாயணப் பிரசங்கங்கள்)
   டி. கே. சிதம்பரநாத முதலியார் எழுதியது விலை ரூ. 1
5. சீன யாத்திரை
   ஸ்ரீமதி கமலாதேவி எழுதியது விலை ரூ. 1
6. அரசியல் ஞாபகங்கள்
   கி. சடகோபன் எழுதியது விலை ரூ. 1
   ('ஹிந்துஸ்தான்' உதவி ஆசிரியர்)
7. டால்ஸ்டாய் கட்டுரைகள்
   கா. இராமனுஜன் செட்டியார் மொழிபெயர்ப்பு விலை ரூ. 1
8. இருளும் ஒளியும்
   (டால்ஸ்டாய் எழுதிய நாடகம்)
   நா. வானமாமலை, பி.ஏ. மொழிபெயர்ப்பு விலை ரூ. 1
9. டால்ஸ்டாய் சரித்திரம்
   கு. ப. ராஜகோபாலன் எழுதியது விலை ரூ. 1

போரும் காதலும்

[லியோ டால்ஸ்டாய்] (4 பகுதிகள்)

பொ. திருகூடசுந்தரம் மொழிபெயர்ப்பு

ஒவ்வொன்றும் விலை ரூ. 1-8-0

சக்தி காரியாலயம்

ஜார்ஜ் டௌன், சென்னை

ஒலியும் நிழலும்

கிருஷ்ண பிடாரன் இந்த மாதம் திரைக்கு வருகிறதாம். டி. கே. புரொடொக்ஷன்ஸாரின் இந்தப் படத்தில் கொத்தமங்கலம் சீனு, சி. வி. வி. பந்துலு, பபூன் சங்கர ஐயர், மாயவரம் பாப்பா, பி. எஸ். ஞானம், பி. எஸ். ராஜாமணி முதலியவர் நடித்திருக்கிறார்கள்.

* *

அருந்ததி க்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. கே. பி. சுந்தராம்பாள் நடிக்கும் இந்தப் படத்தை, ராஜாசேகர் டைரக்ட் செய்வார்.

* *

கண்ணகி: ஜுபிடர் பிக்சர்ஸ், ஷண்முகா பிலிம்ஸ் இவர்களின் இந்தப் படத்தில் பி.யு. சின்னப்பா, பி. கண்ணாம்பா இன்னும் பலரும் நடிக்கிறார்கள். ஸவுத் இந்தியா பிக்ஸர்ஸார் ரிலீஸ் செய்வார்கள். கதையும் வசனமும் 'இளங்கோவன்' எழுதியிருக்கிறார். பிரபல சித்திரக்காரர்கள் ஸ்ரீ ஸி. ராமராஜு ஆர்ட் டைரக்டர்.

* *

சாந்தா: தைமாதத்தில் தமிழ்நாடெங்கும் ஸ்ரீ விஜயமாருதி பிக்சர்ஸின் இந்தப் படம் திரைக்கு வருகிறதாம். பல ரஸங்களும் நிறைந்த இந்தத் தமிழ் சமூகச் சித்திரத்தில் பி. எஸ்.. ஸ்ரீனிவாசராவ், கே. டி. ருக்மணி முதலானோர் திறம்பட நடித்திருக்கிறார்களாம்.

கே. நவமணிதேவி 'வனமோகினி'யில் நடிக்கிறார்.

134192

* *

குபேர குசேலா: சேலம் ஷண்முகா பிலிம்ஸார் இப்படி ஓர் உன்னதத் தமிழ்ப் புராணப் படத்தைத் தயாரிக்கப் போகிறார்கள். பிரபல நட்சத்திரங்கள் நடிப்பார்கள்.

* * *

சபாபதி: சௌத் இந்தியா பிக்சர்ஸார் டிஸ்ரிபியூட் செய்யும் இது டிசம்பர் 14-ஆம் தேதி முதல் திருச்சி, காரைக்குடி, மதுரை, சேலம், புதுச்சேரி, பெங்களூர் முதலிய இடங்களில் ஆரம்பமாகி யிருக்கிறது. **ப்ரகதி** பிக்சர்ஸார், சிறப்பாக இதைத் தயாரிக்கிறார்கள். காளி ரத்னம் முதலான பல நடிகர்கள் திறமையாக நடித்திருக்கிறார்கள்.

* * *

அல்லி விஜயம்: ஸ்ரீமதிகள் ரத்னபாயும், சரஸ்வதிபாயும் மறுபடியும் புகழைச் சம்பாதித்துக் கொள்ள கிளம்பி விட்டார்கள். ஸ்ரீமதி ரத்னபாய் அல்லி யாகவும், சரஸ்வதிபாய் அர்ஜுனனாகவும் நடிக்கின்றார்கள். படம் சென்னை சுந்தரம் சவுண்டு ஸ்டுடியோவில் வெகு மும்மரமாகத் தயாராகிக் கொண்டு வருகின்றது. இப்படத்தை **H. S.** மேத்தா டைரக்ஷன் செய்கிறார்.

* * *

ஹரிச்சந்திரா: ராயல் டாக்கீஸாரின் அடுத்த படமான இது விரைவில் தயாராகப் போகிறது. எம் கே. தியாகராஜ பாகவதர், என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம் முதலிய மற்றும் பலர் நடிக்கும் இந்தப் படத்தை, சுந்தர ராவ் நட்கர்னி டைரக்ட் செய்வார்.

* * *

சதி சுகன்யா: சேலம் ஸ்ரீ மீனாட்சி பிலிம்ஸார் மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோவில் தயாரித்து வரும் இந்தப் படம் இன்னும் ஒரு மாதத்துக்குள்ளாக, திரைக்கு வருமெனத் தெரிகிறது. ஹொன்னப்ப பாகவதர், டி. ஆர். ராஜகுமாரி, டி. ஆர். மஹாலிங்கம், காளி ரத்னம், துரைராஜ் முதலானவர்கள் சிறப்பாக நடித்திருக்கிறார்கள்.

'சங்கபாலா'வில் கதாநாயகியாக நடிக்கும் மே மின்

பிருதிவிராஜ் என்னும் தமிழ்ப் படம் பூர்த்தியாகி விட்டதாம். மதுரை ஹரன் டாக்கீஸாரின் இந்தப் படத்தில், சின்னப்பா, எம். ஆர். சந்தானலக்ஷ்மி, டி. எஸ். பாலையா, காளி ரத்னம், பி. எஸ். ஞானம் முதலானோர் நடித்திருக்கிறார்கள். டைரக்டர் சம்பத்குமார்.

* *

ராம்-ரஹீம்: விக்டரி பிலிம்ஸார், இந்து—முஸ்லிம் ஒற்றுமையை விளக்கும் இதை எடுக்கப் போகிறார்கள். ஷூட்டிங் பாரத் மூவிடோனில் ஆரம்பமாகி விட்டது. ஜோதிஷ் ஸின்ஹா டைரக்ட் செய்யும் இதில், வி. ஏ. செல்லப்பா, வி. எஸ். மணி, எம். எஸ். முருகேசம், கே. வி. ஜயகௌரி, டி. எஸ். ஜயா, செல்வாம்பாள், பேபி பாரிஜாதம் இன்னும் பல சிறந்த நட்சத்திரங்கள் நடிக்கிறார்கள்.

* *

சிவயோகி அல்லது பொய்யாமொழிப் புலவர் என்ற தமிழ்ப் படத்தின் ஷூட்டிங் ஆரம்ப விழா கோவை ஸெண்டிரல் ஸ்டூடியோவில் நடைபெற்றது. என். எஸ். கிருஷ்ணன், மதுரம் முதலானவர்கள் இதில் நடிப்பார்களாம்.

* *

தமிழறியும் பெருமாள் மிகமிக விரைவாக நியூடோனில் வளர்ந்து வருகிறது. உமா பிக்ச்ஸர்ஸாரின் தயாரிப்பான இதை டி. ஆர். ரகுநாத் டைரக்ட் செய்து வருகிறார்.

* *

மதன காமராஜன்: ஜெமினியின் முதல் படமான இது, திருச்சி, மதுரை, சேலம், கோயமுத்தூர், காரைக்குடி, திருநெல்வேலி, முதலான இடங்களில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. சென்னை வெலிங்டனில் 20-உ ஆரம்பமாகி வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. வஸந்தா, சடகோபன், ராஜம்மா முதலிய பிரபலமான பல நடிகர்கள் நடித்திருக்கிறார்கள்.

* *

வாணியப் பெண், அதிரூபன்: இவ்விரண்டும் ஜெமினியின் அடுத்த தமிழ்ப் படங்களாக இருக்குமாம். அதி சீக்கிரமே இவற்றின் ஷூட்டிங் ஆரம்பமாகுமெனத் தெரிகிறது.

* *

சாவித்திரி சென்னை பிரபாத்தில், இன்னும் வெற்றிகரமாகவே ஓடிக்கொண்டிருக்கிறது. ஜனங்கள் திரளாகவே போய்க்கொண்டிருக்கிறார்கள்.

கே. ஆர். செல்லம் 'என் மனைவி'யில் நடிக்கிறார்.

* *

அனந்த சயனம்: ஜெமினி ஸ்டூடியோவில் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பொரேஷனின் தயாரிப்பான இதில், டைரக்டர் கே. சுப்ரமண்யம், எஸ். டி. சுப்புலக்ஷ்மி, எம். வி. ராஜம்மா, ஆர். பி. லக்ஷ்மி தேவி, வி.என். ஜானகி, ஜி. பட்டு ஐயர் முதலிய பலர் நடிக்கிறார்களாம். படம் முக்கால்வாசிக்கு மேல் முடிந்துவிட்டது.

* *

ஆனந்தன்: யோகி பிலிம்ஸாரின் இந்தப் படம் சீக்கிரம் திரையிடப்படுமெனத் தெரிகிறது. டைரக்டர் யோகி ரொம்பவும் உயரிய முறையில் படத்தைத் தயாரித்திருக்கிறாராம்.

* *

உத்தமி: சாயா பிக்சர்ஸாரின் தயாரிப்பான இதில் எம். லக்ஷ்மணன், சி. வி. வி. பந்துலு, காளி. என். ரத்னம் முதலிய பிரபல நடிகர்கள் நடிக்கிறார்கள். பாரத் மூவிடோனில் படம் எடுக்கப்பட்டு வருகிறது.

*

பரஞ்சோதி என்ற தமிழ்ப் படத்தில் பல பிரபல நட்சத்திரங்களைக் காணலாம். பேபி மனோஹராவும் தோன்றுகிறாள். பிரேம் சேத்னா டைரக்ட் செய்கிறார். வெங்கடேசுவர் பிக்சர்ஸாரின் இந்தப் படம் பாரத் மூவிடோனில் விரைவாகத் தயாராகி வருகிறது.

* *

பாக்கியலட்சுமி: ரேணுகாவின் இந்தப் படத்துக்கு ஆரம்ப விழா நடந்து விட்டது. நாகையா நடிக்கிறார். பாரத் மூவிடோனில் எடுக்கப்படுகிறது.

* *

வனமோஹினி: எஸ். ஐ. யு. ஏ. கார்ப்பொரேஷனின் இந்தப் படம் மிக நல்ல படமாக இருக்குமென எதிர் பார்க்கலாம். இதைப் பிடிப்பதற்காக எவ்வளவோ சிரமத்தையும் செலவையும் பாராமல் பல அரிய காட்சிகளைப் படம் எடுத்திருக்கிறார்கள். மலையாளக் காடுகளின் வளமும், 'சந்துரு' என்ற யானையின் அற்புத தீரச் செயல்களும், தவமணிதேவியும் மற்றுமுள்ள பிரபல நடிகர்களும் நடித்துள்ள நடிப்பும் சேர்ந்து இதைச் சிறந்த தொரு படமாக்கி யிருக்கின்றன. இம்மாதம் 24உ முதல் வெளியூர்களில் ஆரம்பமாகும். இதில் சந்துரு, தவமணிதேவி, எம். கே. ராதா, எஸ். எஸ். கொக்கோ, கொளத்துமணி, பாக்ஷா, அம்பி, கே. டி. சக்குபாய், எஸ். ஆர். கே. ஐயங்கார், டி. வி. கிருஷ்ணஸாமி, எம். எல். இந்திரா, கமலாபாய் இன்னும் நூற்றுக் கணக்கானவர்களின் சிறந்த நடிப்பைக் காணலாம். ஆடல், பாடல், சோகம், சிரிப்பு, சிங்காரம் எல்லாம் இதில் நிறைந்திருக்கிறதாம். பூரண உரிமையாளர்கள், ஸவுண்ட் பிக்சர்ஸ் ஸர்க்யூட்.

* *

பாரத் மூவிடோன் ஸ்டூடியோ பல விதத்திலும் சிறந்ததாக விளங்குகிறது. இந்த யுத்த காலத்தில் ஏராளமான பொருட் செலவையும் கருதாது அநேகம் அரிய வசதிகள் செய்து வைத்திருக்கிறார்கள். படமெடுப்பவர்களுக்கு இதனால் எவ்வளவோ சௌகர்யம். ஒரே சமயத்தில் பல படங்கள் எடுப்பதற்கும் தகுந்த ஏற்பாடுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.